REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜூன் 16 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 91 இல. 141 | Friday 16, June, 2023 | 16பக்கங்கள் | 50/-

போதகர் ஜெரோமுக்கு எதிராக

## பணச் சலவை சட்டத்தின் கீழ் விசாரணை ஆரம்பம்



போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராக பணச் சலவைச் சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சட்ட மா அதிபர் நேற்று (15)

06

## A/L பரீட்சையை நடத்த குறிப்பிட்ட ஒரு மாதம் சட்டபூர்வமாக அறிவிப்பு

### அரச, தனியார் பாடசாலைகளின் தரமும் ஆராய பொறிமுறை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு



உலகிலுள்ள ஒவ்வொரு அபிவிருத்தியடைந்த நாடும் அந்த நாட்டின் மனித வளத்தை மேம்படுத்துவதன் ஊடாகவே முன்னோக்கி வந்துள்ளதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

எனவே, எதிர்வரும் 2048ஆம் ஆண்டில் அபிவிருத்தியடைந்த நாடு எனும் இலக்குகளை அடைவதற்கு

06

அரச மானியம் ஜூலை 01 முதல் அமுல்

## நிவாரணம் கிடைக்காதோர் மேன்முறையீடு செய்யலாம்

லோரன்ஸ் செல்வநாயகம்



வறுமைக்கோட்டின் கீழுள்ள குடும்பங்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள நிவாரணத் திட்டங்களில் இடம்பெறாத நபர்கள் அது தொடர்பில் மேன்முறையீடுகளை சமர்ப்பிக்க முடியமென, ஜனாதிபதி செயலணியின் பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்துள்ளார். கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போதே

06

## எதிர்காலத்தில் வேலை நாட்களின் எண்ணிக்கையில் மாற்றம்!

### சட்டமூலத்துக்கான பிரேரணை தயாராகிறது – மனுஷ



தற்போதுள்ள தொழிலாளர் சட்டத்தின் குறைபாடுகளை திருத்தும் வகையில் புதிய தொழிலாளர் சட்டமூலத்தை தொழிலாளர் ஆலோசனை சபையில் விரைவில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

சட்டமூலத்துக்கான பிரேரணை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் சுட்டிக்காட்டினார். தொழில் அமைச்சில் நடைபெற்ற நிகழ்வொன்றில்

06

# குருந்தூர்மலை, திரியாய் பகுதி விகாரைகளுக்கு காணி ஒதுக்கீடு?

## முறையான விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க நிபுணர் குழு



**எந்த அடிப்படையில் இந்தளவு காணிகள் கோரப்பட்டுள்ளதென்பதை விஞ்ஞானபூர்வ தரவுகள், ஆதாரங்களுடன் ஆராய்வதற்காகவே ஜனாதிபதி நிபுணர்கள் குழுவை நியமிக்கவுள்ளார்**

லோரன்ஸ் செல்வநாயகம்

தொல்பொருள் நடவடிக்கைகளுக்கென முல்லைத்தீவு, குருந்தூர்மலை விகாரை மற்றும் திருகோணமலை, திரியாய் விகாரை ஆகியவற்றுக்காக காணிகளை கோரியுள்ளமை தொடர்பாக முறையான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நிபுணர் குழுவொன்றை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

இவ்வாறு முல்லைத்தீவு, குருந்தூர்மலை விகாரைக்கு 3,000 ஏக்கர் காணியும் திருகோணமலை, திரியாய் விகாரைக்கு 2,000 ஏக்கர் காணியும் கோரப்பட்டுள்ளன.

வனவள பாதுகாப்பு திணைக்களம், காணி திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றுக்குச் சொந்தமான அரசாங்க காணிகளில் இந்தளவு

06

## கருத்துக்களை வெளியிடும் உரிமை இல்லாதொழிக்கப்பட மாட்டாது

Online கடவுச்சீட்டு விநியோக ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி



லோரன்ஸ் செல்வநாயகம்

பிராந்தியத்தில் எந்த நாட்டிலும் இடம்பெறாத வகையில் குற்றவியல் அவதூறு சட்டத்தை நீக்கி எவருக்கும் கருத்துக்களை வெளியிடும் உரிமையை இல்லாதொழிப்பதற்கு எந்த சந்தர்ப்பத்திலும் நடவடிக்கை எடுக்கப் போவதில்லையென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை, உத்தேச ஊடக ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் இலத்திரனியல் ஊடகங்கள்

06

## ஐ.நா. மனித உரிமைகள் 53ஆவது கூட்டத்தொடர் திங்கள் ஆரம்பம்

இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கை 21 இல்

03

## யாழில் அதிகரித்துள்ள சட்டவிரோத செயல்கள்

இராணுவத்தின் ஒத்துழைப்பு அவசியம் – GA



யாழ்ப்பாண மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்கு இராணுவத்தினரின் ஒத்துழைப்பு மிக அவசியமென, அம்மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

06

## விவசாயிகளுக்கு ரூ.9,000க்கு நேற்று முதல் யூரியா உரம்

MOP உரம் 4,500 ரூபாவுக்கு – மஹிந்த அமரவீர



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் 10,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த யூரியா உரம் ஆயிரம் ரூபாவால் குறைக்கப்பட்டு நேற்று முதல் 9,000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுவதாக, விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அரசாங்கம் ஏற்கெனவே விவசாயிகளுக்கு வழங்கிய வாக்குறுதியின்படி நேற்று முதல் இந்த விலைக் குறைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

06

## அதிகாரிகள் சமூக சிந்தனையுடன் செயற்பட வேண்டியது அவசியம்

அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்



மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற சந்தர்ப்பங்களிலும் அவற்றுக்கான பயனாளர்களை தெரிவு செய்கின்ற போதும் எமது மக்களின் நலன்கள் சார்ந்த சமூகச் சிந்தனையுடன் அதிகாரிகள் செயற்பட வேண்டுமென, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்தார்.

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பாக நேற்று (15)

06

## புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் 15 இல்

விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டுகோள்

லோரன்ஸ் செல்வநாயகம்

இந்த வருடத்துக்கான 5ஆம் தரத்துக்கான புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் ஒக்டோபர் 15ஆம் திகதி நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

அதற்கிணங்க ஜூன் 15ஆம் திகதி முதல் ஜூலை 6ஆம் திகதிவரை அதற்கான

06

## டிக்டொக்கில் மதுபான தானசாலை காட்சி

கட்டுநாயக்காவில் 6 இளைஞர்கள் கைது



பொசன் பௌர்ணமி தினத்தன்று நடத்தப்பட்ட மதுபான தானசாலை காட்சியை 'டிக்டொக்' சமூக ஊடக தளத்தில் பதிவேற்றம் செய்த 6 இளைஞர்களை பொலிஸ் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

சமூக ஊடகத்தினூடாக மதுவை ஊக்குவித்த குற்றச்சாட்டின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

06

## சிறைகளில் திறனுக்கு அதிகமாக கைதிகள்!

COPA குழுவில் ஆணையாளர் சுட்டிக்காட்டு



சிறைச்சாலைகளின் திறனுக்கு அதிகமாக கைதிகள் எண்ணிக்கை இருப்பதாகவும் சில சிறைகளில் இந்த எண்ணிக்கை 300% – 400% ஆக உயர்ந்துள்ளதாகவும் அரசாங்கக் கணக்குகளுக்கான பாராளுமன்றக் குழுவான கோபா குழுவில் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய சுட்டிக்காட்டினார்.

06

## வீட்டு 'கேற்' கழன்று விழுந்து குழந்தை பலி

முல்லைத்தீவில் பரிதாப சம்பவம்

புதுக்குடியிருப்பு விசேட, மாங்குளம் குறூப் நிருபர்கள்



முல்லைத்தீவு, கேப்பாப்புலவு பிரதேசத்திலுள்ள வீடொன்றின் நுழைவாசலில் பொருத்தப்பட்டிருந்த கேற் கழன்று விழுந்ததில், மூன்று வயதுச் சிறுவனொருவன் உயிரிழந்த

06

## மீண்டும் மலேரியா அச்சுறுத்தல்; சுகாதாரத்துறையினர் எச்சரிக்கை

வடக்கு, கிழக்கில் Anopheles Stephensi நுளம்புகளால் பாதிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் மீண்டும் மலேரியா நோய் பரவல் அச்சுறுத்தல் காணப்படுவதாக, சுகாதார அமைச்சு அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் 'அனோபிலிஸ் ஸ்டீபன்ஸி' (Anopheles Stephensi) வகை நுளம்புகளின்

06

## யாழிலிருந்து காலிவரை இரட்டையர்கள் நடை

566 KM தூரத்தை நடந்து சாதனைக்கு முயற்சி



நாகர்கோவில் விசேட, வவுனியா விசேட நிருபர்கள்

மலையகத்தைச் சேர்ந்த இரட்டையர்களான விக்கினேஷ்வரன் மற்றும் தயாபரன் எனும் இரட்டைச் சகோதரர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து காலி வரையான 566 கிலோமீற்றர் தூரத்தை மூன்று

06



அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,345/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்*
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

அழையுங்கள் 0117 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank






சப்ரகமுவ மாகாண ஆளுநராக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணி நவீன் திஸாநாயக்க தனது கடமைகளை நேற்று உத்தியோகப்பூர்வமாக பொறுப்பேற்றுக் கொண்டார். பதவியேற்புக்கு முன்னர் ஆளுநர் நவீன் திஸாநாயக்க இரத்தினபுரியில் சரித்திரப் புகழ்பெற்ற சமன் தேவாலயத்தில் பூஜை வழிபாடுகளில் ஈடுபட்டார்.

## 'பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றுவோம்' செயற்றிட்டம் தொடர்பான ஊடக சந்திப்பு

பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் ஒளி ஏற்றுவோம் என்ற செயற்றிட்டத்தின் கீழ் அண்மையில் ஹற்றன் கரித்தாஸ் செட்டிக் நிறுவன மண்டபத்தில் ஊடக சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதில் நுவரெலியா மாவட்ட இணைப்பாளர் அருட்தந்தை நியூமன் பியூரிஸ் அடிகளார், மௌலவி யாசின், பெருந்தொட்ட இணைப்பாளர் நிக்கலஸ் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் அதில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். இந்திய வம்சாவளி மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு



மலையக மக்களின் கல்வி, பொருளாதாரம், சுகாதாரம், காணி, வீட்டுரிமை கலாசாரம் போன்ற தலைப்புகளின் கீழ் ஊடக சந்திப்புகள் இடம்பெற்று வருகின்றன.

## காவத்தை அரச வைத்தியசாலையில் கடமையிலிருந்த பொலிஸார் மீது தாக்குதல்

__இரத்தினபுரி சுழற்சி நிருபர்__

காவத்தை அரச வைத்தியசாலையில் கடமையிலிருந்த பொலிஸ் அதிகாரிகளை தாக்கிய குற்றச்சாட்டில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

காவத்தை நகரில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற இசைக் கச்சேரியில் கலந்து கொண்ட இரு குழுவினர் வைத்தியசாலை வளவில் மோதலில் ஈடுபட்டனர். இதனையடுத்து இவர்களை சமரசம் செய்ய முற்பட்ட இரு பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியமையால் இவர்கள் நால்வரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

இக்குழுவினர் காவத்தை நகரில் இடம்பெற்ற இசைக் கச்சேரியில் மோதலில் ஈடுபட்டதால் காயமடைந்தவர்களை காவத்தை அரச வைத்திய சாலையில் அனுமதிக்க வந்த போதே வைத்தியசாலை வளவிலும் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சம்பவங்களில் காயமடைந்த இருவர் காவத்தை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் அத்துடன் காயமடைந்த இரு பொலிஸ் அதிகாரிகளும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாரை தாக்கிய சந்தேக நபர்கள் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

### மஸ்கெலியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்க

# கணக்குகள் 7வருடங்களாக பரிசீலனை செய்யப்படவில்லை

மத்திய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி சங்கத்தின் கீழ் இயங்கும் மஸ்கெலியா பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் கணக்குகள் கூட்டுறவு திணைக்களத்தினால் இதுவரை பரிசீலனை செய்யப்படவில்லையென தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 2016 வருடம் முதல் இன்று வரை கூட்டுறவு திணைக்களத்தினால் மஸ்கெலியா பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தின் கணக்குகள் பரிசீலனை மேற்கொள்ளவில்லையென நுவரெலியா கூட்டுறவு சங்கத்தின் ஆணையாளர் தெரிவித்தார்.

தகவல் அறியும் சட்டத்தின் மூலம் மஸ்கெலியா கூட்டுறவு சங்கத்தின் மூலம் நடாத்தப்படும் கிராமிய வங்கி கிளையின் கணக்கு சம்பந்தப்பட்ட விபரம் கேட்ட போது மத்திய மாகாணத்திற்கு பொறுப்பான ஆணையாளர் திருமதி.பிரேமசிங்க அவர்கள் எழுத்து மூலம் மேற்கண்டவாறு அறியத்தந்துள்ளார்.

மத்திய மாகாணத்திலுள்ள அனைத்து கூட்டுறவு சங்கங்களின் கணக்குகள் அனைத்தையும் வருடாந்தம் கணக்கு ஆய்வாளர்கள் மூலம் பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். இருந்த போதும் மஸ்கெலியா பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் மூலம் நடாத்தப்படும் கிராமிய வங்கி கிளையின் கணக்கு கடந்த 7 ஆண்டுகளாக கணக்கு ஆய்வாளர்கள் மூலம் ஆய்வு செய்யப்படவில்லையென தெரிவித்துள்ளார்.



ஊவா மாகாண அரச நிறுவனம் மற்றும் திணைக்களங்களில் தற்காலிகமாக இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்கள் 325 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஊவா மாகாண பிரதம செயலாளர் தமயந்தி பரணகம தலைமையில் இடம்பெற்றது. பொது பிரதிக்கல்வி அமைச்சர் விஜித வேருகொட உள்ளிட்ட அதிகாரிகள் நியமன கடிதங்களை வழங்கி வைப்பதை படங்களில் காணலாம்.
(படம்; ஊவா சுழற்சி நிருபர்)



கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உள்ளிட்ட அமைச்சின் உயர் அதிகாரிகள் குழுவொன்று நேற்று பேராதனை விவசாய திணைக்களத்திற்கு விஜயம் செய்து அங்கு விவசாய திணைக்களம் மற்றும் விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

## முன்னாள் சபாநாயகர் எம்.எச். முஹம்மதின் 102ஆவது பிறந்த தினம்

__ருஸைக் பாரூக்__





முன்னாள் சபாநாயகரும் அமைச்சருமான மர்ஹூம் எம்.எச். முஹம்மதின் 102ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பொரளை தேர்தல் பிரதேச மக்கள் ராஜகிரிய விக்டோரியா முதியோர் இல்லத்திற்கு உணவுப் பொதிகளை நேற்று (15) வழங்கி வைத்தனர்.

இருதசாப்த காலங்களுக்கும் மேலாக பாராளுமன்றத்தில் இருந்த எம்.எச். மொஹமட், சபாநாயகராகவும், அமைச்சராகவும், இன, மத அரசியல் பேதமின்றி சகல மக்களினதும் நலனுக்காக தன்னை அர்ப்பணித்து சேவையாற்றியுள்ளார். சவூதி அரேபியா மக்காவை தளமாகக் கொண்டு இயங்கும் உலக முஸ்லிம் லீக்கின் அரசியலமைப்பு சபையின் நிறுவுனர்களில் ஒருவரான அவர், இலங்கையில் இஸ்லாமிய நிலையத்தை நிறுவி மக்களுக்கு உதவிகளை முன்னெடுத்ததோடு பல்கலைக்கழக கல்விக்காக புலமைப்பரிசில்களையும் வழங்கி வைத்தார்.

## முஸ்லிம் வித்தியாலயத்தில் ஊடக பயிற்சி செயலமர்வு

__(தெஹிவளை கல்கிசை விசேட நிருபர் )__



மொறட்டுவை, ஹொரேதுடுவை முஸ்லிம் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான ஊடகப் பயிற்சி முகாம் அண்மையில் வெற்றிகரமாக நடைபெற்றது. இதன்போது பாடசாலைக்கென ஊடக கழகம் ஆரம்பிக்கப்பட்டதுடன் மாணவர்களுக்கான முதற்கட்ட ஊடக பயிற்சிகளும் சிறந்த வளவாளர்களைக் கொண்டு வழங்கப்பட்டன.

பாடசாலையின் அதிபர் எஸ். எச். முத்தலிப் அவர்களின் தலைமையில் இடம் பெற்ற ஆரம்ப நிகழ்வில் உதவி அதிபர், ஆசிரியர்கள், உலமாக்கள், பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்று உறுப்பினர்கள், பழைய மாணவர்கள் மற்றும் ஊடகப் பயிற்சி முகாமிற்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர். குறித்த மாணவர்களுக்கு பாடசாலை மட்ட ஊடக அடையாள அட்டைகளும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.




### தென் மாகாணத்தில்

# மழையுடனான காலநிலையால் டெங்கு நோய் பரவும் அபாயம்



__வெலிகம தினகரன் நிருபர்)__

### சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்க சுகாதார அதிகாரிகள் கோரிக்கை

கடந்த சில தினங்களாக காலி, மாத்தறை மாவட்டங்களில் பெய்து வரும் மழையுடனான காலநிலை நிலவுவதால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் தோன்றியுள்ளதாக சுகாதார பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

நீர் தேங்கி நிற்கும் இடங்களை இனம் கண்டு உடனுக்குடன் அவற்றை அகற்றி விடுவதன் மூலம் டெங்கு நுளம்பு பெருகுவதை தடுக்க முடியும் என சுகாதார அதிகாரிகள் ஆலோசனை வழங்குகின்றனர். வீடுகள் மாத்திரமின்றி அரச, தனியார் நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், பாடசாலைகள் போன்றவற்றின் சுற்றுச்சூழல்களையும் சுத்தமாக வைத்திருப்பதோடு அப்பகுதிகளிலும் நீர் தேங்கி நிற்கும் இடங்களை இனங்கண்டு அகற்றி விட வேண்டும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். கடந்த வருடங்களை விட இவ்வருடம் சிறுவர்கள் உட்பட அதிகமானோர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். தீவிரமாக டெங்கு பரவி வருகின்றது. இதனை சரியான முறையில் கட்டுப்படுத்தப் படாவிட்டால் வரலாற்றில் அதிக டெங்கு நோயாளர்கள் பாதிக்கப்பட்ட ஆண்டாக மாறும் அபாயம் தோன்றியுள்ளது.

மேலும் தற்போதைய கால நிலையால் வைரஸ் காய்ச்சல் பரவும் சாத்தியம் உள்ளது. இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் காணப்படின் வைத்தியர்களை நாடி சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.




றோயல் கல்லூரி எடெக்ஸ் (EDEX) அமைப்பு, றோயல் கல்லூரி வாசிகசாலை வாசகர் சங்கம், றோயல் கல்லூரி தமிழ் இலக்கிய மன்றம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் ஒரு தொகுதி நூல்கள் மாங்குளம் தமிழ் மகா வித்தியாலயத்திற்கு அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் எடெக்ஸ் அமைப்பின் தலைவர் மகிந்த கலகெதரவிடம், கோவை புத்தக நிலைய அதிபர் கணேஷ் தர்மலிங்கம் வழங்குவதையும் அருகில் நூல்கள் விநியோக பொறுப்பாளர்கள் ரஸீக கலப்பதி, மஸ்னவி ரூமி, தரிந்து துலஞ்சன ஆகியோரைக் காணலாம்.

## பாரம்பரியம் நிகழ்ச்சியில் சிரேஷ்ட பாடகி கலாவதி



எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 8.15 மணியளவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் ஈழத்து பிரபல பாடகி 'கானக்குயில்' எஸ்.கலாவதி சின்னசாமி அதிதியாக கலந்து கொள்கிறார்.

இலங்கையிலும், வெளிநாடுகளிலும் புகழ் பூத்த பாடகியான இவர், பல இஸ்லாமிய கீதங்களை தனித்தும், பிரபல பாடகர்களோடு இணைந்தும் பாடி முஸ்லிம் சேவையின் இசைப்பாரம்பரியத்துக்கு பங்களிப்பு செய்துள்ளார். பிரபல கலைஞர் சித்தி நிஹாறா சபுர்தீனின் கணவரும் பிரபல பாடகருமான அல்ஹாஜ் மொயீன் சபுர்தீனின் வழிகாட்டலில் இஸ்லாமிய கீதங்கள் பாடும் வாய்ப்பு தனக்கு கிடைத்ததாக மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறார்.

ஈழத்து தமிழ், சிங்கள சினிமா திரைப்படங்களிலும் பெரும்பாலான பாடல்கள் பாடியுள்ளார். கலாவதி, 50க்கும் மேற்பட்ட சிங்கள திரைப்படங்களில் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது. இவரை எம்.எஸ். எம்.ஜின்னா பேட்டி காண, பாரம்பரியம் நிகழ்ச்சியை முஸ்லிம் சேவையின் பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜூன் 16 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN


தொழுகை நேரம்

சுபஹ் - 04.32
லுஹர் - 12.12
அஸர் - 03.39
மஃரிப் - 06.27
இஷா - 07.44

இன்றைய சுபதினம்

சோபகிருது வருடம் ஆனி 02

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி





ஊடகத்துறை அமைச்சும் முத்திரைப் பணியகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த முத்திரைக் கண்காட்சி கொழும்பு டி .ஆர். விஜேவர்த்தன மாவத்தையிலுள்ள தபால் தலைமையகத்தில் நடைபெற்றது. அமைச்சர் பந்துல குணவர்த்தன கண்காட்சியை ஆரம்பித்து வைத்து முத்திரைகளை பார்வையிடுவதையும் அங்கு வெளியிடப்பட்ட சீகிரிய முத்திரையை அதிதியொருவருக்கு அமைச்சர் கையளிப்பதையும் படங்களில் காணலாம். நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தலைவரும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளருமான அனுஷ பெல்பிட்ட ஆகியோரையும் படத்தில் காண்க.

பெனிதுடுமுல்லை உத்பலவர்ண

## ஸ்ரீவிஷ்ணு கதிர்காம தேவாலய பெரஹரா

நாவலப்பிட்டி, பெனிதுடுமுல்லை உத்பலவர்ண ஸ்ரீவிஷ்ணு கதிர்காம தேவாலயத்தின் வருடாந்த மகாதேவ பெரஹரா இம்முறை 21ஆம் திகதி இரவு 8.00 மணி முதல் நாவலப்பிட்டி நகரை வலம் வரவுள்ளது.

தெடிமுண்ட, கதிர்காமம் மற்றும் ஸ்ரீமகா விஷ்ணு தெய்வங்களை தாங்கிய யானைகளின் ஊர்வலத்துடன் இலங்கையின் முன்னணி கலைஞர்கள் பங்குகொள்ளும் உடரட்ட, பஹதரட்ட மற்றும் சப்ரகமுவ நடனங்கள், மத்தளம், , தீப்பந்தம், முகமூடி, பொய்க்கால், பிரம்பு, மயில், காவடி நடனங்கள் ஆகியனவும் இடம்பெறவுள்ளன.

இந்நாளில் தேவாலய வளாகத்தில் முற்பகல் 11.00 மணிக்கும் இரவு 11.00 மணிக்கும் பகல் மற்றும் இரவிலும் தேவமகா பூஜைகள் நடைபெறும். பக்தர்கள் தமது நேர்த்திக்கடனை நிறைவேற்ற முடியுமென்பதுடன், சாந்தி பூஜை செய்யவும் வாய்ப்புள்ளதாக, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

நாட்டில் டெங்குநோய் பரவலை கட்டுப்படுத்த

## காய்ச்சல் நோயாளர்கள் அனைவரையும் நுளம்புகளிடமிருந்து பாதுகாப்பது அவசியம்

இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல வலியுறுத்து



டெங்கு நோயால் பாதிக்கப்பட்ட ஒருவரிடமிருந்து மற்றவருக்கு நுளம்புகள் மூலம் டெங்கு பரவுவதால், அனைத்து வகையான காய்ச்சல்களால் பீடிக்கப்பட்ட நோயாளர்களையும் நுளம்புகளிடமிருந்து பாதுகாக்க வேண்டுமென்ற விடயத்தை மக்களிடம் விரைவில் கொண்டு செல்ல வேண்டுமென, டெங்கு ஒழிப்பு நிபுணர் குழுவின் தலைவியும் இராஜாங்க அமைச்சரும் விசேட வைத்திய நிபுணருமான சீதா அரம்பேபொல தெரிவித்தார்.

எனவே, டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களை போன்று டெங்கு நோய் பாதிப்பு உறுதிப்படுத்தப்படும்வரை காய்ச்சல் ஏற்பட்டுள்ள அனைத்து நோயாளர்களையும் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்துவதற்கு மக்களை ஊக்குவிக்க வேண்டுமென்றும் அது தொடர்பாக மக்களைத் தெளிவூட்ட ஊடகங்களின் ஆதரவு தேவையெனவும், இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

டெங்கு நோய் பரவலைக் கட்டுப்படுத்த நியமிக்கப்பட்ட மேல் மாகாண உபகுழு 06

2001 இல் இடம்பெற்ற படுகொலை

## மரண தண்டனைக்குள்ளான நபர் 19 வருடங்களின் பின்னர் கைது

லோரன்ஸ் செல்வநாயகம்

கம்பஹா மேல் நீதிமன்றத்தின் மூலம் மரண தண்டனை விதிக்கப்பட்டு தலைமறைவாக வாழ்ந்து வந்த நபரொருவர் 19 வருடங்களின் பின்னர் இராகமையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

இராகமை, அலகொல்ல பிரதேசத்தில் இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர் கடந்த 2001ஆம் ஆண்டு தமது சகோதரருடன் இணைந்து நபரொருவரை கூரிய ஆயுதத்தால் குத்திப் படுகொலை செய்துள்ளார். அப்போது இவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்ற தீர்ப்புக்கிணங்க விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் இவர் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, 2004ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற சுனாமி பேரழிவின் போது, அங்கிருந்தவர்களை வேறு சிறைச்சாலையொன்றுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுத்த சந்தர்ப்பத்தில் சிறைச்சாலை அதிகாரிகளின் கட்டுப்பாட்டை மீறி இவர் தப்பிச் சென்றார்.

2004 ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதி இவர் தொடர்பான குற்றப்பத்திரிகை சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து, சந்தேக நபர் இல்லாத 06

## ஐ.நா. மனித உரிமைகள் 53ஆவது கூட்டத்தொடர் திங்கள் ஆரம்பம்

இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கை 21 இல்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் திங்கட்கிழமை ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது. அத்துடன், மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான வாய்மொழிமூல அறிக்கை எதிர்வரும் 21ஆம் திகதி அமர்வில் முன்வைக்கப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் கடந்தாண்டு செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி ஆரம்பமாகியதுடன், அன்றையதினம் இலங்கையின் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மிச்சேல் பச்லெட்டின் எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. அது மாத்திரமன்றி, அக்கூட்டத்தொடரில் 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல்' எனும் தலைப்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் கொண்டுவரப்பட்ட 51/1 என்ற புதிய தீர்மானம் 13 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி ஆரம்பமாகிய ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 52ஆவது கூட்டத்தொடருக்கான நிகழ்ச்சிநிரலில் இலங்கை தொடர்பானவிசேடதீர்மானங்களோ அல்லது விவாதங்களோ உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 06

## வாகன இறக்குமதிக்கான கோரிக்கை அரசாங்கம் சிந்தித்தே செயற்படும்

நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டில் ஏற்பட்ட டொலர் நெருக்கடிக்கு முக்கிய காரணம் வாகன இறக்குமதியே என்றும் அதனைக் கருத்திற்கொண்டு வாகன இறக்குமதிக்கான வேண்டுகோள்கள் தொடர்பாக சிந்திக்க வேண்டியுள்ளதாக, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

இறக்குமதிக்கு தடை செய்யப்பட்டிருந்த பல்வேறு பொருட்களுக்கான தட்டுப்பாடுகளை அரசாங்கம் தளர்த்தி வரும் நிலையில், வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்குமாறு வாகன உற்பத்தியாளர்கள் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

இது தொடர்பாக பதிலளிக்கும் வகையிலேயே இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளவர்கள் கடன் முறைமையின் மூலம் வாகனங்களை இறக்குமதி செய்ய முடியும் என்ற யோசனையை அரசாங்கத்துக்கு முன்வைத்துள்ளனர்.

எனினும், இது தொடர்பாக ஆராயப்படுகின்றது. எவ்வாறெனினும், நாடு இன்னும் கடன் நெருக்கடியிலேயே உள்ளது. சர்வதேச ரீதியில் கடன் மறுசீரமைப்பு தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தப்படுவதுடன், பாரிய சவால்களை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

இத்தகையை சூழ்நிலையில் கடன் முறைமையின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பாக மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டியுள்ளது என்பதால், உடனடியாக அது தொடர்பாக முடிவுகளை எடுக்க முடியாதுள்ளதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

### யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகக் குழுத் தெரிவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (18) காலை 9.30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## காலியில் நின்ற ரயிலில் எரிபொருள் திருட்டு

இரு ரயில்வே ஊழியர்கள் கைது

காலி ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எரிபொருள் ஏற்றிச் செல்லும் ரயிலிலிருந்து எரிபொருளை திருடிய குற்றச்சாட்டின் பேரில் இரண்டு ரயில்வே சரக்குப் பரிசோதகர்கள் கைது செய்யப்பட்டதாக, காலி பொலிஸார் தெரிவித்தனர்.

காலியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் களஞ்சியசாலைக்கு சென்ற இந்த ரயில், எரிபொருளை இறக்கி விட்டு மீண்டும் காலி ரயில் நிலையத்துக்கு கொண்டுவரப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டது.

அதன் பின்னர், ரயில் நிலையத்தில் பணி புரியும் ரயில்வே சரக்குப் பரிசோதகர்கள் இருவர், ரயிலின் எரிபொருள் தாங்கியிலிருந்து 5 லீற்றர் எரிபொருளை திருடிய போது, ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தரால் இவர்கள் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.


## இலங்கை வங்கி

### ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டத்தின் (397ஆம் அத்தியாயம்) 22ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

கடன் தொடர்பு இல: 81398858 மற்றும் 81398696

இல. 833, பேராதனை வீதி, கண்டி அல்லது இல. 835, பேராதனை வீதி, கண்டி என்னும் முகவரியிலுள்ள கண்டியன் ஆட்ஸ் சுப்பர் கொம்பிளக்ஸ் (தனியார்) நிறுவனத்தின் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 19ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கிப் பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை ஜனநாயக சோசலிஸக் குடியரசின் 2018.10.19ஆம் திகதிய 2094ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2018.10.04ஆம் திகதி வியாழக்கிழமை தினமின, தினகரன் மற்றும் டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவையிலுள்ள முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் 22ஆம் பிரிவின் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2023.07.05ஆம் திகதி புதன்கிழமை மு.ப.10.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அட்டவணை

ஹத்தரலியத்தே கும்புர இப்போது வத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உரிமம் பெற்ற நில அளவையாளர் பி.ஜி.எஸ்.கே ஜயரத்ன தயாரித்த 2003.11.11ஆம் திகதியிட்ட 360A என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் காணித்துண்டு 1 என விபரிக்கப்பட்டு பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணி மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் கங்கவட்ட கோரளையில் கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடம்பே கிராம அலுவலர் பிரிவிலுள்ள பேராதனை வீதியில் அமைந்துள்ளதோடு வடகிழக்கில் 831, 829, 825 என்ற வரி மதிப்பீட்டு இலக்கங்களைக் கொண்ட நிலமனைகளையும் தென்கிழக்கில் புகையிரதத் திணைக்களத்துக்கான ஒதுக்கத்தையும் மேற்குறித்த 360A என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகள் 02, 03 என்பவற்றையும் தென்மேற்கில் வில்லியம் கோபல்லாவ மாவத்தைக்குச் செல்லும் பாதையையும் வடமேற்கில் சிறிமாவோ பண்டாரநாயக்கா மாவத்தையையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. ஒரு ரூட் முப்பத்து மூன்று பேர்ச்சுகள் (ஏ00.Å01.பே.33) அல்லது 0.18464 ஹெக்ரயர் பரப்பளைவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி கண்டிக் காணிப்பதிவகத்தில் பக்கம் 519/54இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஹத்தரலியத்தே கும்புர இப்போது வத்த என அழைக்கப்படும் காணியிலிருந்து உரிமம் பெற்ற நில அளவையாளர் பி.ஜி.எஸ்.கே ஜயரத்ன தயாரித்த 2003.11.11ஆம் திகதியிட்ட 360A என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் காணித்துண்டு 2 என விபரிக்கப்பட்டு பிரிக்கப்பட்டதும் எல்லை நிர்ணயிக்கப்பட்டதுமான காணி மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் கங்கவட்ட கோரளையில் கண்டி மாநகர சபை எல்லைக்குட்பட்ட கடம்பே கிராம அலுவலர் பிரிவிலுள்ள பேராதனை வீதியில் அமைந்துள்ளதோடு வடகிழக்கில் மேற்குறித்த 360A என்ற இலக்கத்தைக் கொண்ட வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 01ஐயும் தென்கிழக்கில் புகையிரதத் திணைக்களத்துக்கான ஒதுக்கத்தையும் தென்மேற்கில் இன்னும் சரியாகச் சொல்வதாயின் காணித்துண்டு 03 மற்றும் கழிவுநீர் வடிகால் என்பவற்றையும் (ஆனால் காணித்துண்டு 02 என்றே பதிவுசெய்யப்பட்டுள்ளது) வடமேற்கில் மேற்குறித்த வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு 01ஐயும் எல்லைகளாகக் கொண்டுள்ளது. நான்கு பேர்ச்சுகள் (ஏ00.Å00.பே.04) அல்லது 0.01012 ஹெக்ரயர் பரப்பளைவையும் அதன்கண் காணப்படும் அனைத்தையும் கொண்டுள்ள இக்காணி கண்டிக் காணிப்பதிவகத்தில் பக்கம் 519/55இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

விலைகூறுவோர் மேற்கூறப்பட்டுள்ள ஆதனத்துடன் தொடர்புடைய உரிமைத்துவ உறுதிகளையும் அதனுடன் தொடர்புடைய ஏனைய ஆவணங்களையும் கண்டி மேற்தரக் கிளையுடன் தொடர்புகொண்டு பார்வையிடமுடியும். தொடர்புகளுக்கு – 081 223 7155.

**இலங்கை வங்கிப் பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி**
திரு. டி.எம்.டி.என். ஜயதிலக்க
பிரதான முகாமையாளர்,
இலங்கை வங்கி,
கண்டி மேற்தரக் கிளை.

1975 BOC CALL CENTRE
www.boc.lk

A (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.

இலங்கை வங்கி
BOC
தேசத்தின் வங்கியாளர்


## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 210.84 | 224.97 |
| கனடியன் டொலர் | 231.73 | 247.95 |
| யூரோ | 335.94 | 356.92 |
| ஜப்பான் யென் | 2.2049 | 2.3396 |
| சிங்கப்பூர் டொலர் | 230.72 | 245.99 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 392.72 | 417.00 |
| சுவிஸ் பிராங்க் | 342.03 | 366.44 |
| அமெரிக்க டொலர் | 311.60 | 328.92 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 796.87 | கட்டார் ரியால் | 84.61 |
| குவைத் டினார் | 1004.17 | சவூதி ரியால் | 82.25 |
| ஓமான் ரியால் | 801.28 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 83.99 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

சோபகிருது வருடம் ஆணி மாதம் 02ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்கஃதா பிறை 26

### குறள் தரும் சிந்தனை



உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்

*மறைந்திருந்து மதுவருந்தினாலும் மறைக்க முடியாமல் அவர்களது கண்கள் சுழன்று மயங்குவதைக் கண்டு ஊரார் எள்ளி நகையாடத்தான் செய்வார்கள்.*

## நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பேதங்கள் களையப்பட வேண்டும்

'நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெற்றிகரமாக முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு அரசாங்கத்தின் பிரதான கட்சி என்ற வகையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தொடர்ந்தும் ஆதரவளிக்கும்' என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதியுடன் சந்திப்பொன்றை நடத்தியுள்ளனர். அச்சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ள முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, நாம் அண்மைக்கால வரலாற்றில் பல ஜனாதிபதிகளுடன் இணைந்து பணியாற்றியுள்ளோம். அது தொடர்பான அனுபவங்களின்படி எந்தவொரு ஜனாதிபதியிடமும் இல்லாத ஒழுங்கமைப்பு மற்றும் செயற்றிறன் மிக்க செயலணியினர் ஜனாதிபதியிடம் உள்ளனர் எனவும் கூறியுள்ளார்.

முன்னாள் அமைச்சரின் இவ்வறிவிப்பு பிரதான எதிரணியினருக்கும் அற்ப அரசியல் நலன்களை அடைந்துகொள்ளலாம் என மனப்பால் குடித்தவர்களின் எதிர்பார்ப்புக்கும் பலத்த அடியாகும்.

பொதுஜன பெரமுன கட்சியின் ஓரிரு தொழிற்சங்கங்களும் ஓரிரு பிரதேச அரசியல்வாதிகளும் அரசாங்கத்தின் கொள்கை தொடர்பில் விமர்சன மனப்பான்மையுடன் கருத்துத் தெரிவித்துள்ளனர். அரசாங்கத்தின் பிரதான கட்சியாக விளங்கும் பொதுஜன பெரமுன கட்சிக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான கசப்புணர்வின் வெளிப்பாடாகவே அற்ப அரசியல் இலாபம் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் இதனைக் கருதினர். அவர்களது எதிர்பார்ப்பை இவ்வறிவிப்பு செல்லாக்காசாக்கியுள்ளது.

பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றார். இதன் நிமித்தம் அவர் அயராது உழைத்து வருகிறார்.

கடந்த வருடத்தின் ஆரம்பப் பகுதியில், இந்நாடு அண்மைக்கால வரலாற்றில் முன்னொரு போதும் சந்தித்திராத பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டது. அதன் விளைவாக நாடும் மக்களும் கடும் அசௌகரியங்களுக்கும் அழுத்தங்களுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளாக வேண்டியிருந்தது. இந்த நெருக்கடிகள் ஆளும் கட்சியினர், எதிர்க்கட்சியினர் என்ற பாகுபாடின்றி எல்லாத் தரப்பினரையுமே பாதித்தன. அவரவர் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்ப இப்பாதிப்புக்களை எதிர்கொண்டனர். இந்நிலையில் நாடு வங்குரோத்து அடைந்தது.

இவ்வாறு கறைபடிந்த வரலாற்றை ஏற்படுத்தியபடி இப்பொருளாதார நெருக்கடி தீவிர நிலையை அடைந்தது. இந்நிலையில் அன்றைய அரசாங்கமும் ஜனாதிபதியும் தம் பதவியை இராஜிநாமா செய்ய வேண்டியிருந்தது.

இந்த இக்கட்டான சூழலில் நாட்டின் தலைமையைப் பொறுப்பெடுக்க எவரும் முன்வராத நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வருடம் ஜூலை மாதத்தின் பிற்பகுதியில் ஜனாதிபதி பதவியை ஏற்றார். அன்றைய சூழலில் இப்பாரிய பொறுப்பை மிகுந்த துணிச்சலுடன் ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, பொருளாதார நெருக்கடியின் சிரமங்கள் மற்றும் அழுத்தங்களில் இருந்து மக்களை விடுவிப்பதற்கான பொருளாதார வேலைத்திட்டங்களை விரிவான அடிப்படையில் ஆரம்பித்தார். அவ்வேலைத்திட்டங்களின விளைவாக, மக்களின் சிரமங்களும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கத் தொடங்கின.

ஜனாதிபதி தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட பொருளாதார வேலைத்திட்டங்களுக்கு சர்வதேச நாணய உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்களும் உதவி வழங்கும் நாடுகளும் ஆதரவும் ஒத்துழைப்பும் நல்க ஆரம்பித்தன. இப்பின்புலத்தில் பொருளாதார நெருக்கடி நிலவிய காலப்பகுதியில் நிலவிய அசௌகரியங்களும் சிரமங்களும் குறுகிய காலப்பகுதியில் நீங்கின. அதன் பிரதிபலன்களை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி இருந்த நாடு கட்டம் கட்டமாக மீட்சி பெற்று மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசிக்க ஜனாதிபதி தலைமையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பொருளாதார வேலைத்திட்டங்களே அடிப்படைக் காரணமாகும்.

நாட்டை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் நோக்கில் பொருளாதாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தச் சூழலில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் சகலரும் ஒரணியில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்ப பங்களிக்க வேண்டும். ஆதரவு நல்க வேண்டும். அதுவே நாட்டை உண்மையாக நேசிக்கும் அனைத்து தரப்பினரதும் பொறுப்பாகும்.

பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளரின் அறிவிப்பு அற்ப அரசியல் நலன்களை அடைந்து கொள்ள எதிர்பார்த்தவர்களின் எதிர்பார்ப்பை தவிடுபொடியாக்கியுள்ளது என்பதில் ஐயமில்லை. ஆனால் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்து நாட்டைக் கட்டியெழுப்பதற்கு பங்களிப்பும் ஆதரவும் அளிப்பதில் ஒவவொருவரும் கவனம் செலுத்த வேண்டும். அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் சுபீட்சத்தைப் பெற்றுத்தரும்.

editor.tkn@lakehouse.lk

## பவளப்பாறைகளின் பாதுகாப்பை ஆராயும் விஞ்ஞானக் கருத்தரங்கு



### கொழும்பு துறைமுகநகரத்தின் ஏற்பாட்டில் உலகப்புகழ் பெற்ற நிபுணர்கள் பங்கேற்பு

கொழும்பு துறைமுக நகரமானது பவளப்பாறைகளின் சூழலியல் தொடர்பான கூட்டுக் கருத்தரங்கை சமீபத்தில் நடத்தியுள்ளது. பவளப்பாறைகளின் தற்போதைய நிலைமை குறித்து கலந்துரையாடவும், அவற்றின் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புக்கான மூலோபாயங்களை ஆராய்வதற்காகவும் இந்தத் துறையில் உள்ள புகழ்பெற்ற நிபுணர்களை இக்கருத்தரங்கின் மூலமாக அது ஒன்றிணைத்தது.

இந்தக் கருத்தரங்கு உலக சுற்றுச்சூழல் தினம் மற்றும் உலக சமுத்திரங்கள் தினத்தையொட்டியதாக இடம்பெற்றதுடன், இது கொழும்பு துறைமுக நகரமானது நிலைபேறாண்மை மற்றும் இயற்கை பல்லுயிர் மற்றும் சுற்றுச்சூழல் கட்டமைப்புகளின் பாதுகாப்பின் மீது கொண்டுள்ள அர்ப்பணிப்பை எடுத்துக் காட்டுகிறது.

இக்கருத்தரங்கில், பவளப்பாறைகள் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்பு தொடர்பான பல்வேறு அம்சங்களைப் பற்றிய பெறுமதி மிக்க உள்ளார்ந்த அறிவுகளை உயர்மட்ட கல்விமான்கள் உட்பட முக்கிய பேச்சாளர்கள் அடங்கிய மதிப்புமிக்க அணி பகிர்ந்து கொண்டது. இந்த அணியில் கலாநிதி ஆர்.பி.பிரபாத் கே ஜெயசிங்க (சிரேஷ்ட விஞ்ஞானி மற்றும் தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகாமையின் கடல் உயிரியல் வளப் பிரிவின் தலைவர்), பேராசிரியர் ஹுய்ஹுவாங் CAS (ஹைனானில் உள்ள வெப்பமண்டல கடல் உயிரியல் ஆராய்ச்சி நிலையத்தின் பணிப்பாளர் மற்றும் உலகளாவிய பவளப்பாறை கண்காணிப்பு வலையமைப்பின் தேசிய நீர்வாழ் உயிரினங்கள் பாதுகாப்பு சங்க நாடுகளுக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்), கலாநிதி எம்.எஃப்.எம். ஃபைரூஸ் (இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தில் மீன்வளம் மற்றும் கடல் அறிவியல் பீடத்தின் முன்னாள் முதல்வர்), கலாநிதி யுயாங் ஜாங் (இணைப்பேராசிரியர், தென்சீனக் கடல்சார் கற்கைநிலையம், CAS), பேராசிரியர் பீபிடீபீ குமார (ருஹுணு பல்கலைக்கழகத்தின் மீன்வளம் மற்றும் கடல்சார் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பீடத்தில் கடலியல் மற்றும் கடல் புவியியல் துறை), மற்றும் கலாநிதி செங்யூ லியு(உதவிப் பேராசிரியர் தென் சீனக் கடல்சார் கற்கை நிறுவனம், CAS) ஆகியோர் இடம்பெற்றனர்.




இந்த முன்னணி கல்விமான்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் ஒவ்வொருவரும் 'அறியாததை அறிந்து கொள்வோம்: பவள வகை பிரித்தல் மற்றும் எதிர்கால வழி', 'சீனாவில் பவளப்பாறைகளின் நிலை', 'இலங்கையில் உலகளாவிய நுண்ணுயிரியல் மற்றும் பவளப்பாறைகள்', 'சீனாவில் பவளப்பாறைகள் மறுசீரமைப்பு', 'இலங்கையின் பவளப்பாறைகளின் தற்போதைய மற்றும் எதிர்கால வாய்ப்புகள்' மற்றும் 'உயிர் ஆற்றல் கண்ணோட்டத்தில் இருந்து இனப்பெருக்க கட்டத்தின் Pocillopora damicornis இன் வெப்பநிலை மாற்றங்களுக்கான பதில் நடவடிக்கை' ஆகிய தலைப்புகளில் முக்கிய விரிவுரைகளை வழங்கினர்.

இக்கருத்தரங்கையொட்டியதாக, பவளப்பாறை பாதுகாப்பில் சர்வதேச அளவில் புகழ்பெற்ற நிபுணரான பேராசிரியர் லோரன்ஸ் மெக்கூக்கையும் கொழும்பு துறைமுகநகரம் வரவேற்றிருந்தது. அவர் சுற்றியுள்ள நீர்ப்பரப்பில் முக்கியமான ஆராய்ச்சி மற்றும் மதிப்பீடுகளை மேற்கொண்டார். பேராசிரியர் மெக்கூக்கின் பவளப்பாறைகள் உள்ளிட்ட கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளுடன் கொண்டுள்ள ஆழமான அனுபவம், கொழும்பு துறைமுக நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள கடல் பல்லுயிர்களின் பாதுகாப்பு மற்றும் இருப்பினை உறுதிப்படுத்த உதவும்.

WWF Hong Kong மற்றும் Great Barrier Reef Marine Park Authority போன்ற நிறுவனங்களுடன் ஆற்றிய தனது பணியிலிருந்து பெறப்பட்ட அவரது பரந்த அறிவைக் கொண்டு, பேராசிரியர் மெக்கூக் அறிவியல் அடிப்படையிலான முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு மூலோபாயங்களில் தனது அர்ப்பணிப்புக்காக நன்கு அறியப்பட்டவர்.

நாட்டின் இயற்கை வளங்களைப் பேணுதல் மற்றும் நிலைபேறாண்மை ஆகியவற்றுக்காக அர்ப்பணிக்கப்பட்ட கொழும்பு துறைமுக நகரத்தின் தொடர்ச்சியான முயற்சிகளில் முதலாவது கூட்டுக் கருத்தரங்கு இதுவாகும். ருஹுணு பல்கலைக்கழகம் மற்றும் தென்சீனக் கடல்சார் கற்கைநிலையம், CAS போன்ற அனுசரணையாளர்கள் மற்றும் கூட்டாளர்களுடனான முக்கிய ஒத்துழைப்பு, அதன் வடிவமைப்பு மற்றும் இயக்க கோட்பாட்டிற்கு ஏற்ப சர்வதேச தரத்தில் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பாதுகாப்பு முயற்சிகளை வளர்ப்பதில் கொழும்பு துறைமுகநகரத்தின் அர்ப்பணிப்பை மேலும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

## பொன்விழாக் காணும் நளீமிய்யா கலாநிலையம்



சுதந்திரத்துக்குப் பின்னரான இலங்கை முஸ்லிம்களின் கல்வி வரலாறு சமயக்கல்வி, சமகாலக்கல்வி எனும் இருதுருவநிலை வாதங்களுக்குள் அகப்பட்டு துண்டாடப்பட்டு வந்தநிலையில் எழுபதுகளின் முற்கூறுகளில் இது குறித்து மிகத்தீவிரமாக சிந்தித்து செயற்பட்டதன் விளைவுதான் இன்றைய ஐந்து தசாப்தங்களை கடந்த நளீமிய்யா இஸ்லாமிய உயர்கல்வி நிலையம்.

இலங்கை முஸ்லிம்களது கட்டாயக் கல்வி எழுச்சியும் உயர்கல்வி குறித்ததான தூரநோக்கும் இன்றைய நிலையை எட்டுவதற்கு நளீமிய்யாவும் அதில் கற்று வெளியேறி சகல துறைகளிலும் பணியாற்றுவோரது பங்களிப்பும் உதாரணங்களாகும்.

அடிப்படைக்கல்வியை தன்னால் பெறமுடியாவிட்டாலும் சமூகத்தின் தரமான கல்விக்காக தனது செல்வத்தை வாரி வழங்கி அதற்கென தனித்துவமான கலாநிலையம் ஒன்றை உருவாக்கியவர் கொடைவள்ளல் மர்ஹூம் எம். ஐ.எம். நளீம் ஹாஜியார். அதனூடாக சமயம், சமகாலம் என்ற இருதுருவங்களையும் சமநிலைப்படுத்தி ஒன்றிணைத்து காத்திரமான கல்விச்சமூகம் ஒன்றை உருவாக்குவதில் தன் இறுதிமூச்சுவரை பாடுபட்டவர் அவர்.

உலக வரலாற்றோட்டத்தில் அந்தந்த சமூகத்தின் தேக்கநிலை, முடக்கநிலை போன்றவற்றை சரியாக இனங்கண்டு அதனை நிவர்த்தி செய்து அந்த சமூகம் எழுந்து நிமிர்ந்து நிற்க உழைக்கின்ற, குரல்கொடுக்கின்ற அரிய அபூர்வ ஆளுமைகள் அவ்வப்போது தோன்றுவதுண்டு.

அந்த வகையில் இலங்கைத்தீவில் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தின் சமய, சமூக, கலாசார, அறிவுசார் மீள் எழுச்சிக்கு காத்திரமான வரலாற்றுப் பணிபுரிந்த மகத்தான முன்மாதிரி யுகபுருஷர்தான் அறிவுத்தந்தை மர்ஹூம் நளீம் ஹாஜியார்.



அன்னாரது பணிகளை, பங்களிப்புகளுக்கு என்றும் நாம் நன்றி கூற வேண்டும். பொன்விழாக் காணும் நளீமிய்யா இன்னும் பல நூற்றாண்டுகள் நிமிர்ந்தெழுந்து சமூகத்தினதும் தேசத்தினதும் நிலையான அபிவிருத்தியில் மகத்தான பங்களிப்பு செய்ய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**அஷ்ஷெய்க் பிஸ்தாமி அஹமட்...**
*நளீமி*

## பாணந்துறை தொட்டவத்தையில் 154ஆவது வருட மனாகிப் தமாம் வைபவம் நாளை

பாணந்துறை தொட்டவத்தை ரௌழதுல் அத்கிய்யா ஜும்ஆப் பள்ளிவாசலில் அல்குதுபுல் கபீர் வல்கவ்துல் அஷ்ஹர் செய்யிதினா அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி (றழி) செய்யிதினா முஹம்மது அஷ்வதுல் பாஸிய்யதுஷ் ஷாதுலி (றழி) ஆகியோர் பெயரால் 154 ஆவது வருடமாக இடம்பெறும் மனாகிப் தமாம் நிகழ்வும், பெரிய கந்தூரி ( Grand Feast) வைபவமும் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.



தொட்டவத்தை பள்ளிவாசல்கள் நம்பிக்கையாளர் ரிஸ்வான் அமீன்ஹாஜி மற்றும் பள்ளிவாசல்கள் பரிபாலனச் சங்கத் தலைவரும் விவாகப் பதிவாளருமான இம்தியாஸ் முஸம்மில் ஆகியோரின் வழிகாட்டலில் பள்ளிவாசல்கள் பரிபாலனச் சங்கம் இந்த வைபவங்கள் தொடர்பில் சிறப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. ஜமாத்தார்கள், கிராமத்தின் பல்வகை இயக்கங்கள், நலன்விரும்பிகளின் ஒத்துழைப்புடன் ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக செயலாளர் சில்மி சஹீல் தெரிவித்தார்.

மேல்மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தில் பாணந்துறை தேர்தல் தொகுதியின் தொட்டவத்தை கிராமத்தில் இப்பெரிய பள்ளிவாசல் அமைந்துள்ளது. நூற்றாண்டுகால பழைமைவாய்ந்த இந்த இறையில்லம் 'றவ்லதுல் அத்கிய்யா' (பக்தர்களின் பூஞ்சோலை) என்ற சிறப்புப் பெயர் கொண்ட ஜும்ஆப் பள்ளிவாசலாகும். இப்பள்ளிவாசல் 'மதீனதுல் பாஸி' என்ற சிறப்புப்பெயரையும் கொண்டுள்ளது. தொட்டவத்தையானது தனிப்பெரும் முஸ்லிம் கிராமமாகும். இப்பள்ளவாசலில் தொன்று தொட்டு ஷாதுலியா மசாய்குமார் மனாகிப் மஜ்லிஸும் பெரிய கந்தூரி நிகழ்வும் முன்னோர் காலம் தொட்டு நூற்றாண்டுகால நிகழ்வாக சிறப்பாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தென்னிலங்கையின் காலி,களுத்துறை மற்றும் கொழும்பு மாவட்டம் உள்ளிட்ட பல்வேறு பாகங்களிலும் இக்காலப்பகுதியில் சாதுலிய்யா தரீக்காவின் ஸ்தாபகர் உள்ளிட்ட இறைநேசர்களின் ஞாபகார்த்த நிகழ்வுகளும் அன்னதானம் வழங்கல் வைபவங்களும் இடம்பெற்று வருகின்றன.

இஸ்லாமிய ஆத்மீக வரலாற்று வரிசையில் மாபெரும் குத்பாகவும் புகழ்மிக்க இறைநேசராகவும் மெஞ்ஞானிகளுக்கோர் தலைவராகவும் திகழ்ந்த சாதுலிய்யா தரீக்கின் ஸ்தாபகரான அல்குதுபுல் அக்பர் வல்கவ்துல் அஷ்ஹர் செய்யிதுனா அபுல் ஹஸன் அலிய்யுஷ் ஷாதுலி (றழி)அவர்களை ஞாபகப்படுத்தும் காலப்பகுதியில் அன்னாரின் சாதனைகளையும் போதனைகளையும் அலசிப் பார்ப்பது மிகவும் பொருத்தமானதாகும்.

இஸ்லாமிய தத்துவஞானக் கொள்கைகளும் மெஞ்ஞானக் கருத்துக்களும் ஞானவழிகளும் உச்சகட்டத்தை அடைந்திருந்த ஹிஜ்ரி ஆறாம் நூற்றாண்டில் (கி.பி.12ம் நூற்றாண்டு) ஆபிரிக்கா கண்டத்தில் திரிபோலியில் ஸியூடா எனும் நகருக்கருகாமையில் இருக்கும் கிமாரா என்ற ஊரில் ஹிஜ்ரி 593ம் ஆண்டு இறைநேசர் சாதுலி நாயகம் பிறந்தார்.செய்யிதுனா அலி (றழி) அவர்களின் குமாரரான ஹுசைன் (றழி) அவர்களின் பரம்பரையில் வந்துதித்தார். அவர் பிறக்கும் போது மாமேதை இமாம் கஸ்ஸாலி (றழி)அவர்கள் மறைந்து எண்பத்தெட்டு ஆண்டுகளும் குதுபுல் அக்தாப் முஹியத்தீன் அப்துல் காதிர் ஜிலானி (றழி) அவர்கள் மறைந்து முப்பத்திரண்டு ஆண்டுகளும் கீர்த்திமிகு இறைநேசர் செய்யிதுனா அஹ்மத் கபீரூர் ரிபாயி நாயகம் மறைந்து பதினைந்து ஆண்டுகளும் கழிந்திருந்தன.

ஆத்மீக ஞானதுறையில் புரட்சிகரமான கருத்துக்களை அள்ளிவீசிய அஷ்ஷெய்குல் அக்பர் மா ஆஷான் எனப் புகழ்பெற்ற இப்னு அறபி அவர்களுக்கு முப்பத்துமூன்று வருடமும், ஞான வள்ளல் முயினுத்தீன் ஜிஸ்தி அவர்களுக்கு அறுபத்துமூன்று வருடமும் ஆகியிருந்தது. எனவே,சாதுலி இமாமின் காலம் சூபித்துவமும் அறக்கொள்கைகளும் ஞானக்கருத்துக்களும் இஸ்லாமிய உலகில் வளர்ச்சி பெற்று உச்சகட்டத்தையடைந்த காலம் எனக்கருத முடியும்.

சாதுலி நாயகம் அபுல் ஹஸன் அலியுஷ் ஷாதுலி அவர்கள் தான் உருவாக்கிய ஷாதுலிய்யா தரீக்காவை சிறந்ததொரு முன்மாதியாகவே அமைத்துவிட்டு 63 ஆவது வயதில் ஹுமைசரா எனும் இடத்தில் ஹிஜ்ரி 656 ஆம் ஆண்டில் இறையடிசேர்ந்தார். அன்னாரின் மறைவு சவ்வால் மாதம் பிறை பத்தில் நிகழ்ந்ததாக கருதப்படுகின்றது.


**இம்தியாஸ் முஸம்மில்** ஜே.பி
*(தொட்டவத்தை பள்ளிவாசல்கள் பரிபாலன சங்கத் தலைவர், முஸ்லிம் விவாகப் பதிவாளர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்)*

## ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் 76 ஆவது திருவாசக முற்றோதல்

கொழும்பு ஜெயந்தி நகர் ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் 76 ஆவது திருவாசக முற்றோதல் அண்மையில் நடைபெற்றது. 76 ஆவது நிகழ்வாக நடைபெற்ற இந்த திருவாசக முற்றோதலில் 51 பதிகங்கள் 658 பாடல்கள் பாடப்பட்டன.

இத்திருவாசக முற்றோதலில் தமிழகத்தில் இருந்து வருகை தந்த கோவை பண்ணிசை பாவலர் ஆ.தண்டபாணி ஓதுவார் அவர்களுடன் ஆலய பக்தஅடியார்களும் கலந்துகொண்டனர்.

ஆலய தர்மகர்த்த தண்டபாணி அவர்கள் இந்நிகழ்வின் போது பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் பட்டார்.



# ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# கட்டுக்கோப்பான குடும்ப வாழ்வுக்கு ஹஜ் கற்றுத்தரும் படிப்பினைகள்

**உலகின் எட்டுத்திக்குகளில் இருந்தும் மக்கள் அலை அலையாக முதல் ஆலயமாம் புனிதமிகு கஃபாவை நோக்கி ஹஜ் கடமையை நிறைவேற்றுவதற்காக சென்று கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் ஹஜ் கடமை எமக்கு கற்றுத் தருகின்ற பாடங்களை பரிசீலனை செய்வது மிகப் பொருத்தமானதாகும்.**

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றான ஹஜ் கடமை பல்வேறு வகையான சிறப்பம்சங்களையும் மகத்துவத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இஸ்லாத்தின் ஏனைய கடமைகளில் இருந்து ஹஜ் உடைய கடமை பல்வேறு அம்சங்களில் தனிச்சிறப்பு பெற்றுள்ளது. குறிப்பாக ஒரு குடும்பத்தினர் செய்த தியாகமும் அர்ப்பணிப்பும் உலகம் அழியும் வரை தோன்றக்கூடிய ஒவ்வொரு முஸ்லிமாலும் நினைவு கூரப்படும் வகையில் ஹஜ்ஜுடைய வணக்க வழிபாடுகளில் பல நிகழ்வுகள் அமையப்பெற்றிருப்பது இதன் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகிறது.

நபி இப்ராஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் அவரது குடும்பத்தினரையும் முன்மாதிரியாக கொண்ட மிகச்சிறந்ததொரு பலமான குடும்பக் கட்டமைப்பை தோற்றுவிப்பதில் ஒவ்வொரு இஸ்லாமியனும் முனைப்போடு செயல்பட வேண்டும் என்ற செய்தியை ஹஜ் கடமை அழுத்தி கூறிக் கொண்டிருக்கின்றன.

இப்ராஹீம் (அலை) அவர்கள் ஹாஜர் அம்மையாரை திருமணம் செய்து அல்லாஹ்விடம் மன்றாடி பிரார்த்தனை செய்த போது அன்னாரது 99 ஆவது வயதில் கிடைக்கப்பெற்ற பிள்ளையே இஸ்மாயில் (அலை) அவர்களாவர். தனது குழந்தையையும் மனைவியையும் மனித சஞ்சாரமோ, மரம் செடிகளோ, புற்பூண்டுகளோ இல்லாத, ஒரு வறண்ட பாலைவனமாக அன்று காட்சியளித்த மக்கமா நகரில் விட்டு வரும்படி அல்லாஹ்வின் புறத்திலிருந்து இடப்பட்ட கட்டளைக்கு இப்ராஹீம் (அலை) அவர்கள் முழுமையாக கட்டுப்பட்டு, அவர்களை அப்படியே விட்டுவிட்டு, ஷாம் நகர் நோக்கி திரும்பிய போது, ஹாஜர் அம்மையார், "இப்ராஹீமே.... இவ்வாறு என்னையும் இப்பச்சிளங்குழந்தையையும் இங்கே விட்டுவிட்டு எங்கே செல்கின்றீர்..." என்று பல தடவைகள் கேட்டும், இப்ராஹீம் (அலை) அவர்கள் அவரை திரும்பிப் பார்க்காமலேயே நடந்தார்கள்.

அப்போது ஹாஜர் அம்மையார் அவர்கள் "இது அல்லாஹ்வின் கட்டளையா" என்று கேட்டார்கள். அதற்கு இப்ராஹீம் (அலை) அவர்கள், "ஆம்" என்று பதில் கூற ஹாஜர் அம்மையார் அவர்கள், "அப்படியென்றால் அல்லாஹ் எங்களை கைவிட மாட்டான்" என்ற ஈமானிய பதிலை உறுதியுடன் கூறினார்கள்.

அக்குழந்தை தாகத்தால் கால்களை நிலத்தில் உதைத்து அழுத போது அவ்விடத்தில் ஸம் ஸம் என்ற நீரூற்று பீறிட்டு கிளம்பியது. இந்நீரூற்று சுமார் 4000 வருடங்களுக்குப் பிறகும் வற்றாத ஊற்றாய் மக்காவாசிகளுக்கும், மக்காவுக்கு வரும் ஹாஜிகளுக்கும் மிகப்பெரும் அருட்கொடையாகப் பார்க்கப்படுகின்றது.

இவ்வாறு இப்ராஹீம் (அலை) அவர்களது குடும்பத்தாரோடு தொடர்புபட்ட பல்வேறு அம்சங்களே ஹஜ்ஜில் நிறைவேற்றப்பட வேண்டிய கட்டாய கடமைகளாகவும், உயர் கிரியைகளாகவும் விளங்குகின்றன.

அவர்களை விட்டுச் சென்ற இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது குடும்பத்தினருக்காக செய்த பிரார்த்தனையை அல்லாஹ் பின்வருமாறு குறிப்பிடுகிறான், "எங்கள் இறைவா! நான் என் குடும்பத்தாரை இந்த வேளாண்மை இல்லாத பள்ளத்தாக்கில் கண்ணியத்திற்குரிய இல்லத்திற்கு அருகில் குடி அமர்த்திவிட்டேன். எங்கள் இறைவா! இவர்கள் இங்கு தொழுகையை நிலை நிறுத்த வேண்டும் என்பதற்காக இவ்வாறு செய்தேன், எனவே இவர்கள் மீது அன்பு கொள்ளும்படி மக்களின் உள்ளங்களை ஆக்குவாயாக... மேலும் இவர்களுக்கு உண்பதற்கான பொருட்களை வழங்குவாயாக... இவர்கள் நன்றியுடையவர்களாய் இருப்பார்கள். (அல்குர்ஆன்12:37)

இந்த நிலையில் ஹாஜரா அம்மையார் எடுத்துவந்திருந்த தண்ணீர் முடிவுற்றதும் அதிர்ச்சியடைந்து, வறட்சிமிக்க அந்த பள்ளத்தாக்கில் சபா மர்வா குன்றுகளுக்கு இடையில் தண்ணீர் தேடி இங்கும் அங்குமாக அலைந்தார். இந்த வரலாற்று உணர்வை நிலைநாட்ட ஹஜ் மற்றும் உம்ரா கடமைகளை நிறைவேற்றுவதற்காக செல்பவர்கள் இன்றும் சபா மர்வா குன்றுகளுக்குகிடையில் வேகமாக நடந்தும், ஓடியும் அந்த தியாகச் செயலை நினைவு கூர்வதை அல்லாஹ் கடமையாக்கி வைத்துள்ளான்.

வறட்சிமிக்க பாலைவனத்தில் விடப்பட்ட

இதிலிருந்து இஸ்லாம் ஒரு குடும்ப இயல் நெறி என்பதனைப் புரிந்து கொள்ளலாம். ஒரு மனிதன் தன்னை முழுமையாக அல்லாஹ்வின் வணக்கத்திற்காக ஒதுக்கி கொள்வதற்காகக்கூட திருமணம் செய்யாமல் இருக்கக் கூடாது என்பதுதான் இஸ்லாத்தின் பலமான நிலைப்பாடு. ஒரு மனிதன் குடும்பமாக வாழ வேண்டும், சமூக ரீதியாக அவனுக்கு அல்லாஹ் கடமையாக்கி இருக்கின்ற அனைத்து கடமைகளையும் செவ்வனே நிறைவேற்றுபவனாக அவன் இருக்க வேண்டும். ஒரு குடும்பத்தின் பிரதான அங்கத்தவர்களான கணவன், மனைவி, குழந்தைகள் பரஸ்பரம் ஒருவருக்கொருவர் பணியாற்றுவதன் ஊடாகவும், அன்பை பரிமாறிக் கொள்வதன் ஊடாகவும், இறை நம்பிக்கையுடன் இறைவனை சார்ந்து இருப்பதன் ஊடாகவுமே பலமான ஒரு குடும்பக் கட்டமைப்பை தோற்றுவிப்பதற்கான அடித்தளத்தை இட முடியும். இதனை இப்ராஹீம் (அலை) அவர்களது குடும்ப அமைப்பின் ஊடாக புரிந்து கொள்ளலாம்.

மேலும் நிலையான ஒரு குடும்பக் கட்டமைப்பை தோற்றுவிப்பதற்கு தியாகம், சகிப்புத்தன்மை மற்றும் பொறுமை என்பன அடிப்படை அம்சங்களாகும். அதனை இப்ராஹீம் (அலை) அவர்களது குடும்பப் பின்னணியிலிருந்து தெளிவாக புரிந்து கொள்ளலாம். மகிழ்ச்சிகரமான, ஆன்மீக நறுமணம் வீசச் செய்யும் அமைதியான ஒரு குடும்ப சூழலை ஏற்படுத்துவதற்கு அல்லாஹ்வின் அருளை யாசித்து பிரார்த்தனை செய்வதும் மிகப் பிரதானமான அம்சம் என்பதனை தன் குடும்பத்தினருக்காக இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்த பிரார்த்தனைகளின் ஊடாக தெளிவாக அறிந்து கொள்ள முடிகிறது.

ஒரு முன்மாதிரியான குடும்ப உருவாக்கத்தின் முதற்கட்ட செயற்பாடாக அல்லாஹ்விடம் ஆழ்மனதால் ஒரு குடும்பத் தலைவன் தூய்மையாகப் பிரார்த்திக்க வேண்டும். அதனை இப்ராஹீம் (அலை) அவர்கள் செய்த கீழ்க்காணப்படும் பிரார்த்தனைகள் எடுத்துக்காட்டுகின்றன.

"சாலிஹான ஒரு சந்ததியை தருவாயாக" என்ற பிரார்த்தனையின் எதிரொலிப்பாக அல்லாஹ்வின் புறத்திலிருந்து வழங்கப்பட்ட பொக்கிஷமே இஸ்மாயில் (அலை) என்பதாக அல்லாஹ் குறிப்பிடுகின்றான். (அல்குர்ஆன் 37:100,101)

இப்ராஹீம் (அலை) அவர்கள் தனது புதல்வன் இஸ்மாயில் (அலை) அவர்களோடு சேர்ந்து கஃபாவை கட்டி முடித்த போது இவ்வாறு பிரார்த்தனை செய்தார்கள், "எங்கள் இறைவனே... எங்கள் இருவரையும் உனக்கு முற்றிலும் வழிப்படுபவர்களாக ஆக்கி வைப்பாயாக" (சூரத்துல் பகாரா:128).

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பிரார்த்தனைகளின் ஊடே அல்லாஹ் எமக்கு பல பாடங்களை கற்றுத் தருகின்றான். குறிப்பாக, ஒரு குடும்பத் தலைவன் தனது குழந்தைகளுக்காக செய்யும் அறிவுரைகளோடும் வழிகாட்டல்களோடும் மட்டும் சுருங்கிக் கொள்ளாது அவர்களது நலனுக்காகவும் உயர்வுக்காகவும் அல்லாஹ்விடம் பிரார்த்திக்க வேண்டும். இப்ராஹீம் (அலை) அவர்கள் ஒரு நபியாக இருந்தும், தனது தனையன் இஸ்மாயில் (அலை) அவர்கள் நபித்துவத்தின் ஒளியில் வளர்ந்த ஒரு நபியாக இருந்தும் அவரது ஒவ்வொரு வளர்ச்சி கட்டத்திலும் தந்தை இப்ராஹீம் (அலை) அவர்கள் அவருக்காக பல்வேறு வகையான பிராத்தனைகளை செய்திருப்பதை அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

எனவே மகிழ்ச்சிகரமான குடும்ப உருவாக்கத்திற்காக உடல் உழைப்புகளோடும் அறிவுரைகளோடும் மட்டும் எம்மை மட்டுப்படுத்திக் கொள்வதை தவிர்த்து இறைவனின் ஆசி வேண்டி பிராத்திப்போம்.

கலாநிதி அல் ஹாபிழ்
எம்.ஐ.எம்.சித்தீக்...
(அல்–ஈன்ஆமி) B.A.Hons, (Al Azhar university, Egypt)
M.A.& PhD (International Islamic university, Malaysia)

# இப்றாஹீம் (அலை) அவர்களை அதிகமதிகம் நினைவு கூருவோம்

இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஹஜ் ஐந்தாவதும் இறுதியானதுமான கடமையாகும். இக்கடமையை இஸ்லாமிய மாதங்களில் இறுதியான மாதமான துல் ஹிஜ்ஜாவில் நிறைவேற்ற வேண்டும். வசதி வாய்ப்புள்ள, பருவ வயதை அடைந்த, உடல் ஆரோக்கியமுள்ள முஸ்லிமான ஆண், பெண் இரு சாராரும் மீதும் கடமையாகும் ஹஜ்ஜை வாழ்க்கையில் ஒரு தடவை நிறைவேற்றுவது அவசியம்.

ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டில் விதியாக்கப்பட்ட ஹஜ் வணக்கங்களை புனித மக்கமா நகர் சென்றே நிறைவேற்ற வேண்டும். இப்றாஹீம் (அலை) அவர்களையும் அன்னாரது குடும்பத்தினரதும் தியாகங்களாகப் பின்னணியாகக் கொண்டுள்ளது இக்கடமை.

இப்றாஹீம் (அலை) அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் பல்வேறுவிதமான சோதனைகளுக்கு முகம் கொடுத்தார்கள். அத்தனை சோதனைகளையும் அல்லாஹ்வுக்காக பொறுமையோடு அவர்கள் சகித்துக் கொண்டார்கள். அவற்றுக்காகக் கிடைத்த அல்லாஹ்வின் பரிசாக ஹஜ்ஜ்டைய ஒவ்வொரு வணக்க வழிபாடுகளும் விளங்குகின்றன. கஃபா, மினா, ஸபா, மர்வா, அறபா போன்ற இடங்களில் நிறைவேற்றக் கூடிய ஹஜ்ஜின் கடமைகள் இப்றாஹீம் (அலை) அவர்களும் அவர்களது குடும்பத்தினரும் நிறைவேற்றிய கிரியைகளாக உள்ளன.

கஃபா ஒரு பழமையான புண்ணிய தலம். இப்றாஹீம் (அலை) அவர்கள் ஏகத்துவத்தை நிலை நிறுத்துவதற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளின் நினைவுகளும் அவர்களின் வாழ்க்கை குறித்த நினைவுகளும் கஃபாவுடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டுள்ளன.

இப்றாஹீம் (அலை) அவர்கள் செய்த மகத்தான தியாகத்தையும், அதன் வெற்றியையும் ஹஜ் நினைவூட்டுகின்றது. அன்னாரும் அன்னாரது குடும்பத்தினரும் மேற்கொண்ட அர்ப்பணிப்புக்களின் பயனாக மக்காவும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களும் மக்கள் குடியேறக்கூடிய இடங்களாகின. அதற்கு அப்பாலை நிலத்தில் தோற்றம் பெற்ற ஸம் ஸம் என்ற அதிசய ஊற்று பக்க துணையாக அமைந்தது. ஹஜரா (அலை) அவர்கள் தம் மகன் இஸ்மாயீலின் தாகம் தீர்க்க மேற்கொண்ட முயற்சி மற்றும் குழந்தை இஸ்மாயீலின் தாகத்திலான அழுகையின் பின்னணயில் இந்த அதிசய ஊற்று தோற்றம் பெற்றது.

இப்றாஹீம் (அலை) அவர்களும் அவரது மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களும் புனித கஃபாவை புனர்நிர்மாணம் செய்யலானார்கள். இஸ்மாயீல் (அலை) கற்களை எடுத்துக்கொடுக்கவும் இப்றாஹீம் (அலை) அவற்றை வைத்து கட்டி முடித்தார்கள். இப்றாஹீம் (அலை) ஏறி கட்டிய இடமே இன்று மகாமு இப்றாஹீம் என அழைக்கப்படுகின்றது. அவ்விடத்தில் இரண்டு ரக்அத்துக்கள் தொழுவதும் சுன்னத்தாக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களை குர்பானி கொடுக்க தந்தை இப்றாஹீம் (அலை) கனவு கண்டார்கள். அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்ற அன்னார் ஆயத்தமானார்கள். அருகாமையிலுள்ள மினா எனும் மலை அடிவாரத்துக்கு மகனை அழைத்துச் சென்று பலி கொடுக்க ஆயத்தமான போது அல்லாஹ்வின் அருள்வாக்கு இறங்கியது.

'இப்றாஹீமே..., நீர் உம்முடைய கனவு உண்மையானது என்று மெய்ப்பித்துக் காட்டி விட்டீர். நிச்சயமாக நன்மை செய்வோருக்கு நாம் இவ்வாறே கூலி கொடுப்போம். நிச்சயமாக இது தெளிவான பெரும் சோதனையாகும் என்றும் கூறினோம். ஆகவே அவருக்குப் பதிலாக ஓர் ஆட்டுக்கடாவை பலியிடச் செய்து மகத்தான தியாகத்தின் மூலம் அவரை விடுவித்தோம். அவருக்காக அவரது கீர்த்தியை பின்னுள்ளோர்களிலும் நிலைக்கச் செய்தோம். ஆகவே இப்றாஹீமுக்கு சாந்தியும் சமாதானமும் உண்டாவதாக.

(அல்குர்ஆன் 37:104109)

மேலும் தந்தை இப்றாஹீம் (அலை) அவர்கள் மகன் இஸ்மாயீல் (அலை) பலியிட மினா மலை அடிவாரத்துக்கு அழைத்துச் செல்லும் போது ஷைத்தான் மூன்று முறை பிள்ளை பாசத்தை எடுத்துக்காட்டி மகனை பலியிடும் நோக்கிலான முயற்சிகளை தடுக்க முயற்சித்தான். ஆனால் இப்றாஹீம் (அலை) அவர்கள் அந்த மூன்று தடவைகளும் கற்களை எறிந்து ஷைத்தானை விரட்டினார்கள். அதுவே ஷைத்தானுக்கு கல்லெறியும் கிரியையாக ஹஜ்ஜில் இடம்பெறுகின்றது.

ஸபா மர்வா குன்றுகளுக்கிடையே ஓடியும், மினாவில் கற்களை எறிந்தும் ஹஜ் கடமையை ஹஜ் யாத்திரிகர்கள் நிறைவேற்றுகின்றனர். இப்றாஹீம் (அலை) அவர்கள் காலம் முதல், ஹஜ் செய்யும் பழக்கம் இருந்து வந்துள்ளது. அவர்களது செயல்களையும் அவர்களின் வாழ்க்கை சோதனைகளையும் அது நினைவுக்கு கொண்டு வரக்கூடியதாகவுள்ளது. ஹஜ் வணக்கங்களில் பெரும்பாலானவை நபி இப்றாஹீம் (அலை) அவர்களின் குடும்பத்தினரின் தியாகத்தை உணர்த்தி நிற்கின்றது.

ஆகவே இப்றாஹீம் (அலை) அவர்களதும், அவரது புதல்வர் இஸ்மாயீல் (அலை) அவர்களதும் அன்னாரது தாயாரதும் தியாக உணர்வுகளை இக்காலப்பகுதியிலும் குறிப்பாக ஈதுல் அழ்ஹா எனும் தியாகத் திருநாளின் போதும் அதிகமதிகம் நினைவு கூறுவோம்.

மௌலவி
எம்.யூ.எம். வாலிஹ்...
(அல் அஸ்ஹரி), வெலிகம

# மனிதப் பண்புகளை போதிக்கும் மார்க்கம்

அல்லாஹுதஆலா மனிதனை ஒரு மேலான இனமாக உலகில் படைத்திருக்கின்றான். 'மனிதனை அழகான தோற்றத்தில் படைத்திருப்பதாக அவன் அல் குர்ஆனில் குறிப்பிட்டிருக்கின்றான் (95 4). ஏனைய உயிரினங்களுக்கு வழங்கப்படாத பேசும் ஆற்றலையும் பகுத்தறிவையும் மனிதனுக்கு மாத்திரமே அவன் கொடுத்திருக்கிறான். அதனால் பூமியிலுள்ள ஏனைய ஜீவராசிகளை விட மேலானவனாக மனிதன் விளங்குகிறான். அதற்காகத் தன்னைப் படைத்த இறைவனுக்கு காலம் முழுவதும் மனிதன் நன்றிகூற வேண்டும். அல்லாஹ்வைத் தொழுவதிலும் ஏனைய வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதிலும் எமது வாழ்நாட்களை கழித்து வர வேண்டும்.

அல்லாஹ்வின் படைப்புக்களில் மனிதர்கள் யாவரும் சமமானவர்கள் என இஸ்லாம் குறிப்பிட்டுள்ளது. பணம், வலிமை அல்லது கல்வியினால் மனிதன் ஆளுக்காள் வேறுபட்டவர்களாக இருக்க முடியும். அதற்காக ஒருவர் தன்னை விட ஏதோ ஒரு வழியில் குறைவான அந்தஸ்தில் இருக்கலாம். அதற்காக அவரைத் தாழ்வாகக் கருதலாகாது. ஒவ்வொருவரும் ஒருவரை ஒருவர் மதித்து வாழ வேண்டும். அதுவே இஸ்லாமிய வழிகாட்டலாகும். அதேநேரம் மனிதனாகப் பிறந்து விட்டோம் என்பதற்காக எப்படியும் வாழலாம் என்றில்லை. இப்படித்தான் வாழ வேண்டும் என்பதற்கான இறைவழிகாட்டல்களை அல்லாஹ் வகுத்தளித்து இருக்கின்றான். அவற்றை அறிந்து செயற்படுவது முஸ்லிமின் பொறுப்பாகும்.

மனிதன் என்பவன் எப்போதும் மனிதப்பண்புகளை கடைப்பிடிக்க வேண்டியவனாவான். உண்மை, நேர்மை, தர்மம், ஐக்கியம், மன்னித்தல், விட்டுக்கொடுத்தல் போன்ற நற்பண்புகள் அவனிடம் இருக்க வேண்டும். அவை அவனை மனிதனை மனிதனாக வாழ வழிகாட்டும். மாறாக பொய், களவு, சூது, வஞ்சகம் சண்டை, சச்சரவுகள் இவையெல்லாம் மனித நல்வாழ்வை சீர்கெடுக்கக் கூடியவைகளாகும். அதனைப் புரிந்துகொண்டு செயற்படுவதோடு மிகுந்த முன்னெச்சரிக்கையோடும் நடந்து கொள்ளவும் தவறக்கூடாது.

மனிதர்களுக்கு மத்தியில் சகோதரத்துவம் மேலோங்கி ஒற்றுமை வளரும் போது பல பிரச்சினைகள் தானாகவே நீங்கிவிடும்.

எவரது மனதும் புண்படும் படி நடக்கக்கூடாது. தன்னைப் போலவே அடுத்தவனுக்கும் ஆசை, பசி, தாகம், இன்ப துன்பங்கள், உள்ளிட்ட உரிமைகளும் அபிலாஷைகளும் இருக்கவே செய்யும். அதனால் அடுத்தவரின் உரிமையையும் மதித்து வாழ்வதே அழகான வாழ்க்கையாகும். இவ்வாறு பிறரை மதித்து வாழும் போது எமது மதிப்பும் உயர்வடையும்.

நாம் மற்றவரை எல்லா விஷயத்திலும் அலட்சியப்படுத்தினால் அல்லாஹுதஆலா எம்மைப் பிறரைக்கொண்டு அலட்சியப்படுத்தலாம் என்பதை மனதில் கொள்ள வேண்டும். நாம் சன்மார்க்கத்துக்கும் சமூகத்துக்கும் ஏற்றவிதமாக நடக்க வேண்டும். அதனால் நாம் பிறரிடமிருந்து மதிப்பை பெற்றுக்கொள்ளலாம்.

சமூகத்தில் காணப்படும் ஏழைகள், அநாதைகள், ஊனமுற்றோர்கள், வசதி குறைந்தோர்கள் போன்றோருக்கு கைகொடுத்து உதவ வேண்டும். எம்மால் இயன்ற உதவிகளை செய்து கொடுக்க வேண்டும். அது இஸ்லாம் வழங்கியுள்ள அறிவுரையும் போதனையும் ஆகும். அதன்மூலம் அல்லாஹ்விடமிருந்து நல்லருளும் நற்பாக்கியங்களும் கிடைக்கப்பெறும். 'ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமின் சகோதரன்' என இஸ்லாம் எடுத்தியம்புகிறது. அதனால் ஒருவருக்கொருவர் உதவியாகவும் சிநேகமாகவும் ஐக்கியமாகவும் இருக்க வேண்டும்.

இறைதூதர் நபி (ஸல்) அவர்கள் கலீபாக்கள், ஸஹாபாக்கள் நல்லடியார்கள் அனைவரும் பிறரை நேசித்து வாழ்ந்துள்ளார்கள்.

ஒரு தடவை கலீபா உமர் (ரழி) அவர்கள், தமது பணியாளுடன் பைத்துல் முகத்திஸை நோக்கி ஒட்டகத்தில் பயணம் செய்தார்கள். அன்னார் சிறிது தூரம் சென்றதும் ஒட்டக்கத்தில் இருந்து கீழே இறங்கி பணியாளை ஒட்டகத்தில் பயணம் செய்யச் சொன்னார்கள். கலீபாவுக்கு மதிப்பளித்த பணியாள் அதற்கு ஆரம்பத்தில் மறுத்த போதிலும் உமர் (ரழி) அவர்கள் வழங்கிய அறிவுரையின் விளைவாக பணியாள் ஒட்டகத்தில் பயணிக்கலானார். அதேநேரம், 'அடுத்த வீட்டார் பசித்திருக்கும் போது தாம் மாத்திரம் புசிப்பவர் உண்மை முஸ்லிம் அல்ல' என்பதும் நபிகளாரின் பொன்மொழியாகும். ஆகையால் நாம் அனைவரும் அடுத்தவரை மதித்து ஒன்றுபட்டு வாழ்வோம். மனிதப் பண்புகளை எம்மில் வளர்த்துக் கொள்வோம்.

எம்.ஏ.அத்தாஸ்...
மாத்தறை

# மறுமையின் விளைநிலம்

அல்லாஹ் நம்மை ஏன் படைத்தான் என்பதை அல் குர்ஆனின் பின்வரும் வசனம் மூலம் தெளிவுபடுத்தியுள்ளான். 'ஜின்களையும் மனிதர்களையும், அவர்கள் என்னை வணங்குவதற்காகவே அன்றி நான் படைக்கவில்லை' (51:56)

இவ்வசனத்தின்படி, மனிதர்கள் 24 மணி நேரமும் வணங்கிக் கொண்டே இருந்தால் மற்றக் காரியங்களை எல்லாம் எப்படிச் செய்வது என்ற வினா எழலாம்.

ஒரு மனிதனின் அன்றாட வாழ்வில் குர்ஆனின் கட்டளைகளை நிறைவேற்றியும் அதில் தடுக்கப்பட்டவற்றிலிருந்து விலகியும் நபி (ஸல்) அவர்கள் வாழ்ந்த முறைப்படி வாழ்வை அமைத்துக்கொள்வதும் வாழ்வே வணக்கமாகி விடும்.

இதனை அல்குர்ஆனில் ஸூரா முஃமின் என்ற அத்தியாயத்தின் ஆரம்ப வசனங்கள், 'ஈமான் கொண்டவர்கள் நிச்சயமாக வெற்றி பெற்றுவிட்டனர். அவர்கள் எத்தகையோரென்றால் தங்கள் தொழுகையில் உள்ளச்சத்தோடு இருப்பார்கள். இன்னும் அவர்கள் வீணானவற்றை விட்டு விலகியிருப்பார்கள். ஸகாத்தையும் தவறாது கொடுப்பார்கள்... இத்தகையோர் தாம் (சுவர்க்கத்தின்) வாரிசுதார்ர்கள். (அல்குர்ஆன் 23:110)

அல்லாஹ் ஈமான் கொண்டவர்கள் வெற்றியாளர்கள் என்று கூறியதோடு நில்லாமல், அவர்களின் தன்மைகளை விளக்குகிறான். ஈமானையும், தொழுகையையும் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு அடுத்ததாக 'வீணானவற்றை விட்டு விலகியிருப்பார்கள்' என்று கூறுகிறான். ஸகாத்தை கூட அதன் பிறகுதான் குறிப்பிடுகிறான்.

'அல்லாஹ்வின் திருப்தியை பெற்றுத்தராத, அவனது நினைவையிட்டு நம்மை விலக்கும் எச்செயலுமே வீண் செயல்தான். ஷைத்தான் மறைந்திருந்து தாக்கும் எதிரி. உதாரணமாக வீட்டை தூய்மையாகவும், அழகாகவும் வைத்திருப்பதும் தன்னை அலங்கரித்துக் கொள்வதும் ஹலாலான செயல்கள்தான். ஆனால் அதில் விருப்பம் அதிகமாகி, அதீத கவனத்தையும், நேரத்தையும், பணத்தையும் செலவு செய்யும் போது அல்லாஹ்வின் நினைவை விட்டு நம்மைச் சிறிது சிறிதாக தூரமாக்கி விடும். இந்நிலையில் ஹலாலான செயலே நம்மை பள்ளத்தில் தள்ளக்கூடியதாக மாறிவிடும். இவ்வாறு ஒவ்வொரு செயலும் நம்மை அல்லாஹ்விடம் நெருக்கமாக்குகிறதா, அல்லது அவனை விட்டும் தூரமாக்குகிறதா? என்பது குறித்து கவனம் செலுத்தி செயற்பட வேண்டும்.

மேலும் அவர்கள் வீணான காரியத்தின் பக்கம் சென்றால் கண்ணியமானவராகச் (ஒதுங்கி) சென்று விடுவார்கள் (25:72)

உலகில் ஒரு முஃமினின் நிலை, தேர்வு எழுதிக் கொண்டிருக்கும் மாணவனின் நிலையைப் போன்றது. குறிப்பிட்ட நேரத்திற்குள் சரியான விடைகளை எழுதி வெற்றிபெற வேண்டும் என்பதே மாணவர்களின் இலக்கு. அதனால் ஒரு கணப்பொழுதையும் அவன் வீணாக்கமாட்டான். அதேபோன்று ஒவ்வொரு இறை நம்பிக்கையாளனும் தான் செய்யும் ஒவ்வொரு செயலையும் பயனுள்ளதாகவும் மறுமை வெற்றிக்கான படிக்கட்டுக்களாகவும் அமைத்துக் கொள்வான்.

அதனால் தான் அல் குர்ஆன், 'உங்களில் எவர்கள் செயல்களால் மிக அழகானவர் என்பதைச் சோதிப்பதற்காக அல்லாஹ் மரணத்தையும் வாழ்வையும் படைத்தான்' (67:2) என்றுள்ளது.

நேரம் என்பது வீணாக செலவிடுவதற்கானதல்ல. அது முதலீடு செய்வதற்கானது. ஒருவன் தன்செல்வத்தை எத்தனை இலாபகரமானதாக முதலீடு செய்கின்றான்? ஆனால் அது அவன் உயிர் உடலை விட்டுப் பிரிந்த பின் பயனளிக்குமா என்பதுதான் கேள்வி. அதனால் நேர காலத்தை சரியானபடி முதலீடு செய்தால் அது அவனுடைய மண்ணறை மற்றும் மறுமை வாழ்வுக்கு இலாபகரமானதாக அமையும்.

எனவே மண்ணறையையும் மறுமை வீட்டையும் அல்லாஹ்வின் திருப்தியை பெறும் செயல்கள் மூலம் அலங்கரிப்பதில் கவனம் செலுத்துவோம்.

தொகுப்பு:
அபூ ஸஹீத் ஸாபித்...

## குருந்தூர்மலை, திரியாய்...

காணிகளை தொல்பொருள் பிர தேசங்களென தெரிவித்து எந்தவித அடிப்படையில் கோரப்படுகிற தென்பதை உடனடியாக ஆராயுமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிக ளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் ஸ்தாபிக்கப்பட்ட தொல்பொருள் ஜனாதிபதி செயலணி மூலம் மேற்படி காணிகள் ஒதுக்கப் பட்டுள்ளதுடன், அந்தக் காணிகள் தொல்பொருள் பாதுகாப்பு நடவடிக் கைகளுக்கு ஒதுக்கப்பட வேண்டு மென அந்த செயலணியால் தீர்மா னிக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் பௌத்த தலைமையகமாக கருதப் படும் அநுராதபுரம் மஹாபோதி விகாரைக்கோ அல்லது சிறந்த பாரம் பரிய மரபுரிமை சொத்தாக கணிக் கப்படும் சிகிரியாவுக்கும் கூட இந் தளவு காணிகள் கிடையாதென்றும் எனினும், குருந்தூர்மலை விகாரை மற்றும் திரியாய் விகாரை ஆகியவற் றுக்கு இந்தளவு காணிகள் எந்த அடிப் படையில் கோரப்பட்டுள்ளதென் பதை விஞ்ஞானபூர்வத் தரவுகள் மற்றும் ஆதாரங்களுடன் ஆராய்வதற் காகவே ஜனாதிபதி இந்த நிபுணர்கள் குழுவை நியமிக்கவுள்ளார்.

## டிக்டொக்கில் மதுபான ...

இந்தக் காணொளி சமூக ஊட கங்களில் பரவி வந்தமையால், பொலிஸ்மா அதிபர் இது தொடர் பான விசாரணைகளை கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவினிடம் ஒப்படைத்தார். இதன்படி, 20 முதல் 25 வயதுக்குட்பட்ட 6 பேர் கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்டு, இவர்களிடமிருந்து காணொளி தொடர்பாக நீண்ட வாக்கு மூலம் பதிவு செய்யப்பட்டது.

விசாரணைகளின் போது, இளை ஞர்கள் தங்கள் உறவினர் ஒருவரால் கொண்டுவரப்பட்ட வெற்று வெளி நாட்டு மதுபானப் போத்தல்களில் தேநீரை ஊற்றியதாகவும் டிக்டொக் கில் வீடியோ கிளிப்பை தயாரிப்பதற் காக இந்தச் செயலை செய்ததாகவும் தெரிவித்துள்ளனர்.

எவ்வாறாயினும், 6 பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். இவர்கள் கட்டுநாயக்க பிரதேசத்தில் வசிப்பவர்களென அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## யாழில் அதிகரித்துள்ள...

யாழ். மாவட்ட இராணுவ கட்ட ளைத் தளபதியாக புதிதாக பதவியேற் றுள்ள மேஜர் ஜெனரல் சுஜீவ ஹெட் டியாராச்சி நேற்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து கலந் துரையாடினார். இந்த சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்த தாக, அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந் தரம் தெரிவித்தார்.

இராணுவ கட்டளைத் தளபதியுட னான சந்திப்பு தொடர்பாக ஊடகங் களுக்கு கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்,

"காங்கேசன்துறை சீமெந்து கூட் டுத்தாபன காணியிலிருந்து இராணு வத்தினர் வெளியேறியதையடுத்து, சீமெந்து கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான பொருட்கள் களவாடப்ப டுவதாக பல முறைப்பாடுகள் கிடைத் துள்ளன.

எனவே, இராணுவத்தினர் அதனை தடுத்து நிறுத்துவதற்கு ஒத்துழைக்க வேண்டும். இராணுவத்தினர் பிடியி லிருந்து விடுவிக்கப்பட்ட காணிகள் பல அளவீடு செய்யப்படாது பொது மக்களிடம் கையளிக்கப்படாம லுள்ளன. அந்தக் காணிகளையும் விரைவில் அளவீடு செய்யும் நட வடிக்கைக்கு உரிய சம்பந்தப்பட்ட திணைக்களத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளதால், இராணுவத்தினர் அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். குறிப்பாக, மீள்குடியே றிய மக்களுக்கு இராணுவத்தினரால் 700க்கும் மேற்பட்ட வீடுகள் இரா ணுவத்தினரின் பங்களிப்புடன் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. அதேபோல், எதிர்காலத்தில் மீள்குடியேறிய மக்க ளுக்கான வீட்டுத் தேவைகள் மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்ய இராணுவத்தினர் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்றார்.

## அதிகாரிகள் சமூக சிந்தனையுடன்...

நடைபெற்ற பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ஆராய்ந்த போதே, அமைச்சர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளப்படுத்தி, விரிவாக ஆராய்ந்து தீர்வு காணும் நோக்கில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டத்தில் போக்குவ ரத்து, விவசாயம், கால்நடை, குடிநீர் விநியோகம், கடற்றொழில் உள் ளிட்ட விடயங்கள் ஆராயப்பட்டன.

குறிப்பாக, வீதி அபிவிருத்தி அதிகார சபையால் முன்னெடுக்கப் படுகின்ற காரைநகர் – ஊர்காவற் றுறைக்கிடையிலான கடல் பாதை பழுதடைந்து இருப்பதால், அதனை திருத்தி சேவையில் ஈடுபடுத்தும் வரை, தனியார் படகுகளை வாட கைக்கு அமர்த்தி பொதுமக்களுக்கு போக்குவரத்து சேவையை மேற் கொள்ளுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் வீதிப் போக்கு வரத்து ஆணைக்குழுவிடம் தெரி விக்கப்பட்டதுடன், தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு இச்சேவை இடம்பெறுவதை உறு திப்படுத்துமாறு பிரதேச செயலாள ரையும் அமைச்சர் கேட்டுக்கொண் டார்.

அதேபோன்று, பிரதேசத்திலுள்ள இறைச்சிக் கடைகள் மற்றும் உண வகங்களை திடீர் சோதனைக்குட்ப டுத்தும் நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு பொதுச் சுகாதார அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப் பட்டது.

கால்நடைகள் திருடப்பட்டு இறைச்சிக்கு வெட்டப்படுவதை தடுக்கும் நோக்கிலேயே அறிவுறுத் தல் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, தீவகங்களுக்கி டையிலான போக்குவரத்து கட் டணங்களை மீளாய்வு செய்தல், குடிநீர் விநியோகத்தை உறுதிப்படுத் தல் போன்ற விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டுடன், ஏனைய விடயங்களை மிக விரைவில் நடை பெறவுள்ள இரண்டாம் கட்டக் கூட் டத்தில் கலந்துரையாடுவதற்கும் தீர் மானிக்கப்பட்டது.

## சிறைகளில் திறனுக்கு...

இதன்படி, சிறைச்சாலைகளில் 11,762 கைதிகளுக்கு மட்டுமே இட வசதி இருப்பதாகவும் ஆனால், தற்போது 26,791 பேர் சிறையில் இருப்பதாகவும் நீதி அமைச்சின் செய லாளர் வசந்த பெரேரா தெரிவித்தார்.

இவர்களில் 17,502 பேர் தடுப்புக் கைதிகள், 10,470 பேர் போதைப் பொருள் தொடர்பான குற்றவாளிக ளாவர். மேலும், நீதிமன்றத்தால் தண்டனை விதிக்கப்பட்ட 9,289 பேர் உள்ளதாகவும் அவர்களில் 3,569 பேர் போதைப்பொருள் தொடர்பான சந்தேக நபர்களெனவும் சிறைச்சா லைகள் ஆணையாளர் நாயகம் தெரி வித்தார்.அவர்களில் 1,309 பேர் அப ராதம் செலுத்த முடியாமல் சிறையில் இருப்பதும் தெரியவந்துள்ளது. போதைப்பொருள் பாவனையாளர் களின் எண்ணிக்கை வேகமாக அதி கரித்து வருவதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் லசந்த அழகி யவன்ன தலைமையில் அண்மையில் நடைபெற்ற அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுவில் சிறைச்சாலை கள் திணைக்களத்திலுள்ள பல பிரச்சி னைகள் வெளிப்படுத்தப்பட்டன.

தற்போதுள்ள சிறைச்சாலைகள் திணைக்களத்தை ஸ்தாபிக்கும் சட் டத்துக்கு பதிலாக சர்வதேச தரத்துக் கேற்ப புதிய சட்டத்தை தயாரிக்கு மாறு கோபா கமிட்டி பரிந்துரைத்த போதிலும், பணியில் தாமதம் ஏற்ப டுவதற்கு குழு தனது அதிருப்தியை வெளிப்படுத்தியது.

வெசாக் போன்ற சந்தர்ப்பங்களில் அபராதம் செலுத்த முடியாதவர்கள் விசேட பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்டாலும், குறுகிய காலத்தில் மீண்டும் குற்றவாளிகளாக சிறையில் அடைக்கப்படுவது பாரிய பிரச்சினையெனவும் மேலதிக சிறைச் சாலைகள் ஆணையாளர் சந்தன ஏக்க நாயக்க மேலும் தெரிவித்தார்.

இதனால், புதிதாக 9 மையங்களில் புனர்வாழ்வு பணிகள் மேற்கொள் ளப்படவுள்ளதாக, சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் மேலும் தெரி வித்தார்.

## புலமைப்பரிசில் பரீட்சை...

விண்ணப்பப்பத்திரங்கள் கோரப் படுவதாகவும், அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், ஜூலை 6ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு பின்னர் ஒன்லைன் மூலமாக விண் ணப்பிக்கும் நடவடிக்கைகள் நிறைவு பெறுமென்பதுடன், எந்தக் காரணத்துக்காகவும் விண்ணப்பத்தி கதி நீடிக்கப்பட மாட்டாமெனவும், அவர் தெரிவித்தார்.

5ஆம் தர புலமைப்பரிசில் பரீட் சையில் அரசாங்கப் பாடசாலைகள் மற்றும் அரசாங்க அனுசரணையுடன் இயங்கும் பாடசாலைகளில் கல்வி பயிலும் 5ஆம் தர மாணவர்களுக் காக மாத்திரம் நடத்தப்படுகின்றது.

2024 ஜனவரி 31ஆம் திகதி11 வய துக்கு குறைந்த, 10 வயது

அல்லது அதைவிடக் கூடிய வய துள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள மாணவர்க ளுக்கு மட்டும் புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது.

ஒன்லைன் மூலம் மாத்திரம் விண் ணப்பங்களை அனுப்ப முடியுமென் பதுடன், அது தொடர்பான விப ரங்களை onlineexams.gov.lk /eic எனும் இணையத்தளத்தின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். விசேட தேவையுடைய மாணவர்கள் விண் ணப்பிக்கும் முறைமை தொடர் பாக ஆலோசனைப் பத்திரத்தில் விரிவாக தெரிவிக்கப்பட்டுள்ளதா கவும், அவர் தெரிவித்தார். மேலதிக விபரங்களுக்கு 0112784537, 0112 786616, 0112784208 எனும்

தொலைபேசி இலக்கங்களுடனும் 1911 எனும் நேரடி இலக்கத்துடனும் 0112784422 எனும் இலக்க தொலை நகல் மூலமும் தொடர்புகொள்ள முடியுமெனவும், அவர் தெரிவித் தார்.

## மரண தண்டனைக்குள்ளான... 03ஆம் பக்கத் தொடர்

போதும் அவருக்கு மரணதண் டனை தீர்ப்பளிக்கப்பட்டது.

அதேவேளை, அவருடைய சகோ தரர் அந்த வழக்கிலிருந்து அனைத்து குற்றங்களிலிருந்தும் விடுவிக்கப்பட் டார். இந்நிலையிலேயே மேற்படி நபர் இராகமையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

## ஐ.நா. மனித உரிமைகள்... 03ஆம் பக்கத் தொடர்

53ஆவது கூட்டத்தொடர் இம்மாதம் 19ஆம் திகதி (திங்கட்கிழமை) ஆரம்ப மாகி, எதிர்வரும் ஜூலை மாதம் 14ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது. இக்கூட் டத்தொடரில் எதிர்வரும் 21ஆம் திகதி (புதன்கிழமை) ஜெனிவா நேரப்படி பி.ப. 3.00 மணிக்கு இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிக ரின் உரை இடம்பெறவுள்ளது. இதன் போது, 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரி மைகளை மேம்படுத்துதல்' எனும் 51/1 தீர்மானத்தின் பிரகாரம், நாட்டின் நல்லி ணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் விவ காரத்தில் அடையப்பட்டுள்ள முன்னேற் றங்கள் தொடர்பாகவும் பொருளாதார நெருக்கடி மற்றும் ஊழல் மோசடிகள் என்பன மனித உரிமைகள் மீது ஏற்படுத் தியுள்ள தாக்கங்கள் தொடர்பாகவும் அவ தானம் செலுத்தப்படவுள்ளது.

## நிவாரணம் கிடைக்காதோர்...

சாகல ரத்நாயக்க இவ்வாறு தெரி வித்துள்ளார். அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நாட்டில் வறுமை நிலையிலுள்ள குடும்பங்களுக்கு அரசாங்கம் திட்டமிட் டபடி நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும். இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் ஜூலை 01ஆம் திகதியிலி ருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

அந்த வகையில் தகுதியிருந்தும் அந்த திட்டத்தில் உட்படாதவர்கள் தமக் கான நிவாரணம் தொடர்பில் மேன் முறையீடுகளை சமர்ப்பிக்க முடியும். அதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வுள்ளது" என்றார். "சமுர்த்தித் திட்டமா னது நீண்டகாலமாக வறுமை நிலையி லுள்ள மக்களின் வறுமை நிலையைப் போக்குவதற்காக செயற்படுத்தப்பட்டு வந்துள்ளது. எனினும், அதன் உண்மை யான நோக்கம் நிறைவேறியுள்ளதா? என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டி யுள்ளது.

## கருத்துக்களை வெளியிடும்...

மூலம் ஏதாவது தரப்பினருக்கு பாதிப் புகள் இடம்பெறுமானால் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங் குவதற்கானதாக மாத்திரமே அமைய மென்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

உலகில் அனைத்து நாடுகளிலும் இலத்திரனியல் ஊடக செயற்பாடுகள் தொடர்பில் இவ்வாறான முறைமை உபயோகப்படுத்தப்படுவதுடன் நாட்டில் அதனை நடைமுறைப்படுத்தும் போது பிரிட்டனில் இலத்திரனியல் ஊடகங்கள் தொடர்பில் காணப்படும் வழிகாட்டல் களை அதே விதமாக உள்ளடக்குவதற்கு தாம் ஆலோசனைகளை வழங்கியுள்ள தாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அனைத்து அரச துறைகளிலும் டிஜிட் டல் மயப்படுத்தலை அறிமுகப்படுத்தி பிறப்பு முதல் இறப்பு வரையான மக்க ளின் தேவைகள் அனைத்துக்குமான ஆவணங்களை ஒரே கூரையின் கீழ் வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத் திக்கொடுக்கப் போவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். வளர்ச்சியடைந்துள்ள நாடுகள் தமது நாடுகளின் அபிவிருத் திக்காக டிஜிட்டல் மயப்படுத்தலை மேற் கொண்டுள்ளமையை நாம் ஆராய வேண் டியுள்ளதாகவும், ஜனாதிபதி தெரிவித்தார்.

ஹோமாகம பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற ஒன்லைன் மூலமாக கடவுச்சீட்டுகளுக்கு விண்ணப்பிக்கும் உத்தியோகபூர்வ செயற்றிட்டத்தை ஆரம் பித்து வைத்து உரையாற்றிய போதே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

## வீட்டு 'கேற்' கழன்று...

சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் கேப்பாப்புலவைச் சேர்ந்த ஆதவன் லிதுசிகன் எனும் சிறுவனே உயிரிழந்ததாக, பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சிறுவன் தனது வீட்டு வாசலில் விளையாடிக்கொண் டிருந்த போது, கேற் கழன்று விழுந் துள்ளது. இதில் படுகாயமடைந்த இந்தச் சிறுவன், முல்லைத்தீவு வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்ததாக, பொலிஸார் தெரிவித்தனர்.

## எதிர்காலத்தில் வேலை....

கலந்துகொண்ட அமைச்சர் மனுஷ நாணயக்கார, இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரி வித்த போது,

"இப்பிரேரணையின்படி ஆட்சேர்ப்பு அல்லது பணியிடத்தில் ஓர் ஊழியருக்கு எதிரான பாகுபாட்டை தடுக்க சட்ட விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. நிர்வாக கவுன்சில் கட்டளைச் சட்டத்தில் பணி நிலைமைகள் மற்றும் நிபந்தனைகள், கடைகள் மற்றும் அலுவலகங்கள் சட் டத்தின் விதிகளுக்கிடையேயுள்ள வேறு பாடுகள் அகற்றப்பட்டு அனைவருக்கும் சமமான ஏற்பாடுகள் செய்யப்படும்.

பணியாளர்கள், அனைத்துப் பணியிட துன்புறுத்தல்கள் மற்றும் பாலியல் துன் புறுத்தல் தொடர்பான சட்ட விதிகளை அறிமுகப்படுத்துதல், பின்னர் ஊழி யர்களின் விருப்பத்துக்கேற்ப 5 நாள் வாரம் மற்றும் நெகிழ்வான வேலை நேரங்களை அறிமுகப்படுத்துதல், பகுதி நேர வேலையில் ஈடுபடுவதற்கு தொடர் புடைய சட்ட விதிகளை உருவாக்குதல் என்பன குறிப்பிடப்பட்டுள்ளன.

சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு இரவில் பெண் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு சட்டம், தந்தை வழி விடுப்பு தொடர்பான சட்ட ஏற்பாடுகள் செய்யப்படும்.

இந்தக் குறிப்பின் அடிப்படையில் தயா ரிக்கப்பட்ட தொழிலாளர் சட்ட மாதிரி, தொழிலாளர் ஆலோசனைக் குழுவில் விரைவில் சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர் அது சட்டமாக்கப்படும்" என்றார்.

## மீண்டும் மலேரியா அச்சுறுத்தல்;...

பாதிப்புக் காணப்படுவதால், மீண்டும் மலேரியா அச்சுறுத்தல் தொடர்பாக அந்த அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் காணப்படும் 6 சுகாதார மருத்துவ அதி காரிகள் பிரிவுகளில் இந்த நிலைமை காணப்படுவதாகவும் கிழக்கில் அக்கரைப் பற்று, திருக்கோவில், ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை, மற்றும் வடக்கில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளிலேயே மலேரியா அச்சுறுத்தல் காணப்படுவதா கவும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் 2016ஆம் ஆண்டு மலேரியா நோயை பரப்பும் நுளம்பு கள் தொடர்பாக கண்டறியப்பட்டன. 2016ஆம் ஆண்டு மன்னாரிலும் அத னையடுத்து யாழ்ப்பாணம், முல்லைத் தீவு மாவட்டங்களிலும் முதன் முதலில் மலேரியா நோயை பரப்பும் நுளம்புகள் காணப்பட்டதாக சுகாதாரப் பிரிவு தகவல் தெரிவிக்கின்றது.

# கோவிலூர் செல்வராஜனின் பொன் விழாவும் சிறுகதைத் தொகுப்பு நூல் அறிமுகமும் நாளை

கோவிலூர் செல்வராஜனின் பொன்விழாவும் இலக்கியத் தென்றல் பொன்மலர் அறிமுகமும் நல்லது நடக்கட்டும் சிறுகதைத் தொகுப்பு நூல் அறிமுகமும் நாளை 17 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 430 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் நடை பெறும்.



மலையக மக்கள் முன்னணி யின் சிரேஷ்ட உபதலைவர் சதீஸ் குமார் சிவலிங் கம் தலைமை யில் நடைபெறும் இந்நிகழ்வில் புரவலர் புத்தகப்பூங்கா நிறுவனர் புரவலர் ஹாசிம் உமர் பிரதம அதிதி யாகக் கலந்துகொள்வார்.

தினகரன்/ தினகரன் வாரமஞ் சரி ஆகிய பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செல்தில்வேலவர், சிவஸ்ரீ கலாநிதி பாபுசர்மா ராமச்சந் திரக் குருக்கள், வணபிதா கலாநிதி சந்துரு பெர்னாண்டோ, கல்விய மைச்சின் முன்னாள் செயலாளர் உடுவை எஸ். தில்லைநடராசா, இந்துசமய கலாசார அமைச்சின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் பி.பி. தேவராஜ் சிரேஷ்ட உலக அறி விப்பாளர் பி.எச். அப்துல் ஹமீத், ஜனநாயக மக்கள் முன்னணி செய லாளர் கே.ரி. குருசாமி, எஸ்.ஜே.வி. யின் உதவிச் செயலாளர் உமா சந்திர பிரகாஷ், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன், ஞானம் சஞ்சிகை யின் ஆசிரியர் டாக்டர் எஸ். ஞான சேகரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

நாகபூஷணி கருப்பையா நிகழ்ச்சி களைத் தொகுத்து வழங்குவார்.

## காய்ச்சல் நோயாளர்கள்... 03ஆம் பக்கத் தொடர்

நேற்று முன்தினம் (14) மேல் மாகாண தலைமைச் செயலகத்தின் பிரதான கேட்போர் கூடத்தில் கூடிய போதே, இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல இதனைத் தெரிவித் தார். ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவால் டெங்கு ஒழிப்புக்கான அமைச்சர்கள் குழு மற்றும் நிபுணர் குழுவொன்று அண்மையில் நியமிக் கப்பட்டதுடன், அந்த நிபுணர் குழு மாகாண மட்டத்தில் 9 உப குழுக்க ளையும் நியமித்தது.

நிபுணர் குழுவின் தலைவி இரா ஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல தலைமையில் கூடிய மேல்மாகாண உபகுழு, எதிர்வரும் சில தினங்களுக் குள் டெங்கு நோயைக் கட்டுப்படுத் துவதற்கு எடுக்க வேண்டிய அவசர நடவடிக்கைகள் தொடர்பாக கலந் துரையாடியது. தற்போதைய சூழ்நி லையானது நோய்க் காரணி மற்றும் வைரஸின் அளவைக் கட்டுப்படுத்து வதற்கான உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய சந்தர்ப்பமென வும், இராஜாங்க அமைச்சர் சுட்டிக் காட்டினார். மருத்துவமனைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் டெங்கை கட் டுப்படுத்த தனி வழிகாட்டுதல்களை தயாரிக்குமாறு, தேசிய டெங்கு கட் டுப்பாட்டுப் பிரிவுக்கு அறிவுறுத்தப் பட்டதுடன், மருத்துவமனைகளில் டெங்கு நோய் பரவுவதைக் கட்டுப்ப டுத்தவும் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட வர்களுக்கு மாத்திரம் ஒதுக்கப்பட்ட இடத்தில் (Fever Corners) அவர் களை தனிமைப்படுத்தவும் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மூலம் வேறொருவருக்கு நோய் பரவு வதற்கான சாத்தியக்கூறுகள் தொடர் பாக குறுஞ்செய்திகள் மூலம் தெரி விக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு மேலும் அறிவுறுத்தப்பட்டது.

## விவசாயிகளுக்கு ரூ.9,000க்கு...

அண்மைக்காலங்களில் ரூபாவின் பெறுமதி பலமடைந்தமை மற்றும் செல வினங்கள் குறைக்கப்பட்டதால் மக்க ளுக்கு அதன் பிரதி பலனை பெற்றுக் கொடுக்கும் வகையில் அரசாங்கம் இந்த தீர்மானத்தை எடுத்ததாகவும், அமைச் சர் தெரிவித்தார்.

இதேவேளை, விவசாயிகளுக்கு இந்தப் போகத்துக்கான MOP உரத்தை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட் டுள்ளதாகவும் அந்த வகையில் அந்த உரம் 4,500 ரூபாவால் விலைக் குறைப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

## யாழிலிருந்து காலிவரை...

நாட்களில் நடந்து சென்று சாதனை படைக்கும் முயற்சியில் இறங்கியுள் ளனர். பொகவந்தலாவை, கொட் டியாக்கலை தோட்டத்தை சேர்ந்த இந்த இரட்டையர்கள் நேற்று முன் தினம் (14) அதிகாலை 4.00 மணிய ளவில் தமது சாதனைப் பயணத்தை யாழ்ப்பாணத்திலிருந்து ஆரம்பித்த னர். இவ்விருவரும் யாழ்ப்பாணம் தொடக்கம் காலிவரை 566 கிலோ மீற்றர் தூரத்தை மூன்று நாட்களில் ஓய்வு எடுக்காமல் நடந்து சாதனை படைக்கவுள்ளனர்.

இதேவேளை, இதற்கு முன்னர் அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து காலிவரையான 566 கிலோமீற் றர் தூரத்தை நான்கு நாட்கள் நடந் தும் புத்தளத்திலிருந்து சீதுவை வரையான 147 கிலோமீற்றர் தூரத்தை வெறுமனே 6 மணி நேரத் திலும் பயணித்து சாதனை படைத் துள்ளதுடன், கொழும்பிலிருந்து பொகவந்தலாவை வரையான 184 கிலோமீற்றர் தூரத்தை 18.5 மணித் தியாலங்களில் நடந்து சாதனை படைத்திருந்தனர்.

இந்த இரட்டையரில் தயாபரன் ஒரு நடனக் கலைஞர் என்பதும், அவர் தமிழகத்தின் பிரபல நடிகரான ராகவா லோரன்ஸிடம் நடனம் கற் றவர் என்பதும் அவர் முன்னதாக இலங்கையில் தொடர்ச்சியாக 10 நாட்கள் இடைவிடாமல் நடனமாடி கின்னஸ் சாதனை படைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவர்கள் காலி முகத்திடலை அடைந்து தமது சாதனையை நிலை நாட்ட எதிர்பார்த்துள்ளனர்.

## A/L பரீட்சையை நடத்த குறிப்பிட்ட...

முறையான கல்வி முறைமை மற்றும் பயிற்சி பெற்ற பணியாளர்கள் நாட்டுக்கு தேவையெனவும், ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தேசிய கல்விக் கொள்கைக் கட்ட மைப்பை தயாரிப்பதற்கான அமைச் சர்கள் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்க நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் முதலாவது கலந்துரையாடல் நேற்று முன்தினம் (14) பிற்பகல் ஜனாதி பதி செயலகத்தில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே, ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் மனித வளத்தை சீர மைத்தல், கல்வி முறையின் மூலம் அறிவு, திறன் மற்றும் திறமைகளைக் கொண்ட பணியாளர்களை உருவாக்கு தல் மற்றும் நாட்டை பிராந்திய கல்வி மையமாக மாற்றும் நோக்கத்துடன், ஜனாதிபதியின் தலைமையில் 10 உறுப் பினர்களைக் கொண்ட 'கல்வித்துறை அமைச்சர் குழு' நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட உபகுழு, குழந்தைப் பருவம் மற்றும் முன்பள்ளிக் கல்வி, ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வி, உயர்கல்வி, தொழிற்பயிற்சி மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய 5 துறை களில் மேற்கொள்ளப்பட வேண்டிய மறு சீரமைப்புகள் தொடர்பாக ஆராய்ந்து தயாரித்துள்ள அறிக்கை குறிப்பிட்ட காலத்துக்கு முன்னர் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளது.

எதிர்கால சவால்களை முறியடித்து நாட்டில் பயிற்றுவிக்கப்பட்ட பணி யாளர்களை உருவாக்கக்கூடிய எதிர் கால சந்ததியை கட்டியெழுப்புவதற்கு கல்வி முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசர திருத்தங்கள் தொடர் பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பரீட் சைகளை நடத்துவதன் முக்கியத்து வத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, க.பொ.த. உயர்தரப் பரீட்சையை நடத்த சட்ட ரீதியாக குறிப்பிட்ட ஒரு மாதத்தை அறிவிக்கவுள்ளதாகவும் அதனை மாற்றுவதானால் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற வேண் டுமெனவும் மிகவும் இக்கட்டான சூழ் நிலைகளைத் தவிர அதனை மாற்ற முடியாதெனவும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அரச மற்றும் தனியார் பாடசாலைக ளில் தரமான கல்வி வழங்கப்படுவது உறுதிப்படுத்தப்பட வேண்டுமென்றும் அதற்காக ஆய்வு அலுவலகங்கள் செயற்பட வேண்டியதன் அவசியம் தொடர்பாகவும் ஜனாதிபதி விளக்கி னார்.




# கிழக்கின் குரல்



# காத்தான்குடியில் குருதி கொடையாளர்கள் கௌரவிப்பு

## 10 தடவைக்கு மேல் குருதி வழங்கிய 42 பேருக்கு நினைவுச் சின்னம்





**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

காத்தான்குடி தள வைத்தியசாலை குருதிக் கொடையாளர்கள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், சர்வதேச குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு புதன்கிழமை (14) காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் குருதிக் கொடையாளர்கள் கௌரவிப்பும், இரத்தான நிகழ்வும் நடைபெற்றது. இதன் போது பத்து தடவைகளுக்கு மேல் குருதியை தானம் செய்த 42 குருதிக் கொடையாளர்களை பாராட்டி நினைவுச் சின்னம் மற்றும் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

காத்தான்குடி தள வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரி டாக்டர் திருமதி அலீமா ரஹ்மான் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சுகுணன், காத்தான்குடி ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் எம். எஸ். எம். ஜாபீர், காத்தான்குடி பிரதேச செயலாளர் உதய ஸ்ரீதர், காத்தான்குடி குருதி கொடையாளர் சம்மேளன செயலாளர் சமீம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இதுவரை 52 தடவைகள் குருதிக்கொடை வழங்கிய சமுர்த்தி அபிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எச்.எம். இப்ராஹிம், 38 தடவைகள் குருதி கொடை வழங்கிய டாக்டர் துஷ்யந்தன், 35 தடவைகள் குருதி கொடை வழங்கிய டெலிகொம் உத்தியோகத்தர் பசால் ஜிப்ரி ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

# மரத்திலிருந்து விழுந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

**(ரொட்டவெவ குறூப் நிருபர்)**

கிண்ணியா பொலிஸ் பிரிவிற்குற்பட்ட வட்டமடு பகுதியில் மரத்திலிருந்து விழுந்த நபரொருவர் உயிரிழந்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர். இச் சம்பவம் வியாழக்கிழமை (15) இடம் பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கிண்ணியா சூரங்கல் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான ஷாகுல் ஹமீட் அலி இப்னு (49 வயது) என தெரிய வருகின்றது. புளியம்பழம் ஆய்வதற்காக மரத்தில் ஏறிய போது மரத்திலிருந்து விழுந்த நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளதாக தெரிய வருகின்றது.

சம்பவ இடத்திற்குச் சென்ற கிண்ணியா திடீர் மரண விசாரணை அதிகாரி , குறித்த மரணம் தொடர்பில் சரியான தகவல் பெற்றுக் கொள்ள இயலாத நிலையில், பிரேத பரிசோதனையை முன்னெடுக்க வேண்டியுள்ளதால் பிரேத பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சடலத்தை கொண்டு செல்லுமாறு பொலிஸாருக்கு கட்டளையிட்டார்.

பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் சடலம் ஒப்படைக்க உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# மட்டு. மெதடிஸ்த கல்லூரியில் 05 மாணவர்களுக்கு ஜனாதிபதி விருது



**(வெல்லாவெளி தினகரன் நிருபர்)**

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியைச் சேர்ந்த 5 மாணவர்களுக்கு சாரணர்களுக்கான ஜனாதிபதி விருது கிடைத்துள்ளதுடன், அவர்களுக்கு சின்னம் சூட்டி, பாராட்டி, கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியில் அதிபர் இராசதுரை பாஸ்கர் தலைமையில் புதன்கிழமை (14) நடைபெற்றது.

இந் நிகழ்வில் சாரணர் தலைமைச் செயலகத்தின் கிழக்கு மாகாண உதவி ஆணையாளர் பீ.சசிக்குமார், மாவட்ட சாரண ஆணையாளர் தேசகீர்த்தி வீ.பிரதீபன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளரும், மட்டக்களப்பு நகர மக்கள் வங்கி முகாமையாளருமான நாகலிங்கம்தினேஸ்குமார், குழுச்சாரண தலைவர் எம்.சந்திரசுசர்மன், தலைவர் ந.பிரதீபன் உட்பட பாடசாலையின் சாரண ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது கலந்து கொண்ட அதிதிகளினால் 2022ஆம் ஆண்டுக்கான ஜனாதிபதி சாரணர் விருது பெற்ற 5 மாணவர்களுக்கும் சின்னம் சூட்டப்பட்டு, பாராட்டி கௌரவிக்கப்பட்டார்கள்.

இவர்களுக்கான ஜனாதிபதி சாரணர் விருது, வடமத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஆளுநர் தலைமையில் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# கழுதாவளை பொருளாதார மத்திய நிலையம் விரைவில் திறக்கப்படும்

## இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்த்தான்



**(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)**

மட்டக்களப்பு களுதாவளைக் கிராமத்தில் அமைந்துள்ள விசேட பொருளாதார மத்திய நிலையத்தை மிகவிரைவில் திறந்து வைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக, கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்த்தான் தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை (14) மாலை அங்கு விஜயம் மேற்கொண்ட அவர், இதுவரை திறந்து வைக்கப்படாத விசேட பொருளாதார மத்திய நிலையத்தை பார்வையிட்டு வைத்து கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், இந்த பொருளாதார மத்திய நிலையம் கடந்த 2017ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட நிலையில், இதுவரையில் திறந்து வைக்கப்படாமல் மூடப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசாங்கத்தின் நிதி வீணடிக்கப்படுவதென்பது பாரிய பிரச்சினையாகும். நாம் இதனை விரைவாக திறந்து மக்கள் பயன்பாட்டுக்கு விட வேண்டும்.

இதன் மூலம் விவசாயிகளுக்கு பெரிதும் நன்மை கிடைக்க வேண்டும். இதனை விரைவில் திறந்து வைக்கவுள்ளோம் என்றார்.

# பாதசாரி கடவையை கடக்க முயன்ற குடும்ப பெண் பலி

**(மட்டக்களப்பு குறூப் நிருபர்)**

ஓட்டமாவடி காவத்தமுனை பகுதியைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தாயான முகைதீன் பாவா சித்தியா (45) எனும் பெண், பஸ் வண்டியில் தனது ஊருக்கு செல்வதற்கு பாதசாரி கடவயை கடக்கும் போது, வேகமாக வந்த மோட்டார் சைக்கிளில் மோதுண்டு உயிரிழந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

இவ் விபத்து தொடர்பாக ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் வேண்டுகோளை ஏற்று ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கு சென்ற பிரதேச மரண விசாரணை அதிகாரி, எம்.எஸ்.எம். நஸீர் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தார்.

மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் போதையுடன் காணப்பட்டதோடு, காயங்களுடன் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# முகாமைத்துவ உத்தியோகத்தர்களை விடுவிக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை

**(ஒலுவில் விசேட நிருபர்)**

வருடாந்த இடமாற்றம் பெற்று இதுவரை விடுவிப்பு செய்யப்படாத முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களை, உடன் விடுவிப்பு செய்யுமாறு கிழக்கு மாகாண ஆளுநரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, அனைத்து முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கத்தின் தலைவர் ஏ.ஜீ. முபாறக் தெரிவித்தார்.

இது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவித்தார்.

2020, 2021, 2022 ஆண்டு இடமாற்றங்கள் இடம்பெறவில்லை. 2023 ஆண்டில் ஜனவரி மாதம் இடமாற்றம் வழங்கப்பட்ட முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்கள் இதுவரை உரிய முறையில் விடுவிப்பு செய்யப்படாமல் இருப்பதாக தெரிவித்தார்.

இடமாற்றக் கட்டளைகளை முறையாக நடைமுறைப்படுத்த தவறியதனால் சில உத்தியோகத்தர்களின் உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரதம செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் நிருவாகம் ஆகியோரின் கட்டளைகளை நிறுவன தலைவர்கள் முறையாக பின்பற்ற தவறியமையும், இடமாற்ற கட்டளைகளை முறையாக பின்பற்ற நிறுவனத் தலைவர்கள் தவறியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களை சில அலுவலகங்கள் விடுவிப்பு செய்திருந்தும், இன்னும் பல அலுவலகங்கள் விடுப்பு செய்யவில்லை. இதனால் விடுவிப்பு செய்த அலுவலகங்களுக்கு வருகை தரவேண்டியவர்கள் வருகை தரவில்லை. இதனால் பணியை தொடர முடியாமல் பல அலுவலகங்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதோடு வேறு அலுவலகங்களின் ஆளணியினரின் எண்ணிக்கை அதிகரித்து விடயதானம் வழங்காமல் வைத்துக் கொண்டிருப்பதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# கல்முனை மாநகர சபையினால் 14 ஊழியர்களுக்கு கௌரவிப்பு




**(கல்முனை விசேட , சாய்ந்தமருது விசேட நிருபர்கள்)**

கல்முனை மாநகர சபையின் 2022 ஆம் ஆண்டுக்கான விருது விழா புதன்கிழமை (14) மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மாநகர சபையின் 14 துறைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அதிசிறந்த ஊழியர்கள் 14 பேர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், திண்மக்கழிவகற்றல் முகாமைத்துவ மேற்பார்வையாளரான எம்.எம். றிஸ்வான், கல்முனை மாநகர சபையின் கடந்த ஆண்டுக்கான அதிசிறந்த ஊழியராக தெரிவு செய்யப்பட்டு, விசேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன் கல்முனை மாநகர சபையில் நிர்வாக உத்தியோகத்தர்களாக கடமையாற்றி, ஓய்வு பெற்றுள்ள எம்.ஏ.ரஹீம், ஆனந்தகௌரி கந்தசாமி உள்ளிட்ட 06 உத்தியோகத்தர்களினதும் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 08 உத்தியோகத்தர்களினதும் சேவைகளைப் பாராட்டி, நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# சமுர்த்தி வீடமைப்பு சீட்டிழுப்பில் பரிசு



**(மருதமுனை தினகரன் நிருபர்)**

நிந்தவூர் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவில் சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற நிந்தவூர் 14 பிரிவுக்கான சமுர்த்திப் பயனாளிக்கு இரண்டு இலட்சம் ரூபாவுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் சட்டத்தரணி ஏ.எம்.அப்துல் லத்தீப் தலைமையில் புதன்கிழமை (14) நடைபெற்றபோது, பிரதேச செயலாளரால் காசோலை வழங்கி வைக்கப்பட்டது. இந் நிகழ்வில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.சி.அன்வர், சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் எம்.பி.எம்.ஹூசைன் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சந்தையை நிரந்தர கட்டடத்துக்கு மாற்றுமாறு கோரிக்கை

**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூரில் தற்போது கடுமையான உஷ்ணம் நிலவுவதால், வாரத்தில் ஒரு நாள் நடைபெறும் ஞாயிறு சந்தையை , நிரந்தர கட்டடங்களில், வியாபாரங்களை நடாத்த வியாபாரிகளுக்கு அறிவித்தல் விடுக்குமாறு பொது மக்கள், மூதூர் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். ஞாயிறு சந்தை இயங்கும் நாளில் சந்தை வளாகத்தில் பல்வேறு வகையான பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்றன. சந்தை வளாகத்தில் பொருள் விற்பனைக்கான நிரந்தர கட்டட வசதிகள் இருந்தும் ,வெற்று வளாக நிலங்களில் வியாபாரங்கள் நடைபெறுகின்றன. எனவே சந்தை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள கட்டடத் தொகுதிக்கு, வியாபார நடவடிக்கைகளை முழுமையாக மாற்றுவதன் மூலம் மக்கள் தேவையற்ற நெரிசல்களையும் இதனால் தவிர்க்க முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன்கிழமை 2023.06.14
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5145
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,442,404.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 1 4 1 5 5 7

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 454
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,579,350.00
வெற்றி இலக்கினம் சிம்மம்
வெற்றி இலக்கங்கள் 28 34 50 61
விசேட இலக்கினம் சிம்மம்

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3387
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,935,644.00
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 31 54 55 57

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1175
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 94,902,745.20
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 28 55 62 73

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1600
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.12,460,587.92
வெற்றி இலக்கினம் விருச்சிகம்
வெற்றி இலக்கங்கள் 9 4 9 0 1 7

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1493
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 329,582,546.00
ஆங்கில எழுத்து B
சுப்பர் இலக்கம் 06
வெற்றி இலக்கங்கள் 01 37 47 64
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**கிளிநொச்சி**

# ரோட்டரிக் கழகத்தின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கான ஓர் உன்னத பயணம்...

**கிளிநொச்சி ரோட்டரிக் கழகத்தின் சமூகப் பிரிவின் பொறுப்பாளராக அ. பங்கையற்செல்வன் பணியாற்றி வருகிறார். இவர் கிளிநொச்சி வட்டக்கச்சி ஆரம்பப் பாடசாலையின் அதிபரும் நிழல்கள் சொல்லும் கதைகள் என்ற புகைப்பட நூலைத் தந்ததோடு புகைப்படக் கண்காட்சி ஒன்றையும் நடத்தியவர். 32 வருட காலமாக கல்விச் சேவையாற்றி வருகின்ற அதிபர் அ. பங்கையற்செல்வன் தினகரனுக்கு வழங்கிய கலந்துரையாடல்...**



சமூகப் பிரிவின் பொறுப்பாளரான அ. பங்கையற்செல்வன்

**கே: 365 நாட்களில் 365 செயற்திட்டங்கள் என்ற உங்கள் சிறப்பான பணிக்கு வாழ்த்துக்கள். உங்கள் சாதனை பணி குறித்த எண்ணம் எப்படி தோன்றியது?**

கிளிநொச்சி நகர ரோட்டரிக் கழக அங்கத்தவர்கள் இயல்பிலேயே சமூக வெற்றிகள் குறித்த ஆர்வமுடையவர்களாக காணப்படுகின்றார்கள். அதேநேரம் பல்வேறு துறை சார்ந்த ஆற்றலுடையவர்களாகவும் இருக்கிறார்கள்.

அந்த வகையில் எமது சமூகம் எதிர்நோக்குகின்ற சமகால சவால்களுக்கு ஓர் இலக்கு நிர்ணம் செய்யப்பட்டு அந்த இலக்குத்தான் 365 நாட்கள் 365 செயற் திட்டங்கள் என்ற அடிப்படையில் பொறிக்கப்பட்டு 365 செயற்திட்டங்கள் ஒரு ஆண்டிலே வெற்றிகரமாக முடிக்கப்பட்டது.

**கே: உங்கள் 365 செயற்திட்டங்கள் எதை மையப்படுத்தியது?**

அவை ஐந்து பிரிவுகளாக அமைந்துள்ளன.

1) பொருளாதார முன்னேற்றம் குறித்த மலரும் கிளிநொச்சி என்ற விவசாயிகள் ஊக்குவிப்பு நிதி வழங்கல் செயற்திட்டம் 250 விவசாயிகள் இந்த திட்டம் மூலம் 5 மாதம் பயன் பெற்றார்கள்.

2) 'நடு' என்ற மாபெரும் மரம் நடுகை திட்டம்.

வறுமை நிலையில் வாழும் குடும்பம் ஒன்றின் தரம் ஐந்தில் படிக்கும் பிள்ளையின் எதிர்கால கல்வியை இலக்காகக் கொண்டு அவரது வீட்டில் 30 தொடக்கம் 50 தென்னைகளை நட்டு அவற்றை பராமரிக்க தூண்டும் திட்டமே இது. இத் திட்டம் மூலம் 62 வீடுகளில் 2,500க்கு மேற்பட்ட தென்னைகள் நடப்பட்டன.

3 ) உழை: இத்திட்டம் மூலம் 60 சிறுவர்கள் கோழி வளர்ப்பு திட்டத்தில் இணைக்கப்பட்டு அவர்களை சிறு தொழில் முயற்சியாளர்களாக ஆக்கியுள்ளோம்.

4) 'குறிஞ்சிமலர்': இச் செயற்திட்டம் மலையகத்தில் 8 பாடசாலைகளை தெரிவு செய்து அபிவிருத்தி செய்யும் வேலைகள் நடைபெற்று வருகின்றது.

5) 'அணை': இத் திட்டம் உடல் நிலை பாதிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்த அத்தியாவசிய பொருட்கள் வழங்கும் திட்டமாகும்.

6) விசேட கல்வி ஊக்குவிப்பு திட்டம்: இத் திட்டத்தில் 50 கும் மேற்பட்ட மாணவர்கள் பயன் பெறுகிறார்கள்.

7) உயிர் காக்கும் உணவுத் திட்டம்:

எமது கழகத்தின் அங்கத்தவர் நாதனின் பங்களிப்பில் நடைபெறும் திட்டம்.

இத் திட்டம் மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன் பெற்றுள்ளனர்.

**கே: இத் திட்டங்கள் தொடர்பில் விரிவான விளக்கம்,...**

எங்களுடைய 365 நாள் செயற் திட்டம் என்பது ஐந்து பிரிவுகளை உள்ளடக்கியதாக உள்ளது. அதில் முதலாவது பொருளாதார முன்னேற்றம் குறித்த வேலைத் திட்டங்கள். “மலரும் கிளிநொச்சி” என்ற செயற் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்குகின்ற செயற் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்தோம். இத்திட்டத்தின் கீழ் 250 விவசாயிகள் உள்வாங்கப்பட்டார்கள்.

ஒரு மாதம் 5000 ரூபாய் வழங்கப்பட்டன.கிளிநொச்சி மட்டுமல்ல பரந்த மட்டத்தில் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டன. சிறந்த விவாசாயிகளை அடையாளம் கண்டு அவருடைய பொருளாதார மேம்பாட்டுக்காக இந்தப் பணியை முன்னெடுத்தோம்.

**'நடு'**

வறுமைக்குட்பட்ட குடும்பமொன்றில் தரம் ஆறில் கல்வி கற்கும் பிள்ளையின் எதிர்கால கல்வி இலக்கை அடிப்படையாகக் கொண்டு அவரது வீட்டில் 30 முதல் 50 தென்னைகளை நாட்டி அந்தத் தென்னைகளைப் பராமரிக்கத் தூண்டுகின்ற திட்டமாகும். இந்த திட்டத்தின் மூலமாக இதுவரையிலும் சுமார் 62 கழக அங்கத்தவர்களுடைய பிறந்த நாளைக்கு குறித்த பிள்ளைகளின் வீடுகளுக்குச் சென்று அங்கே இந்த தென்னை மரங்களை நாட்டுகின்ற பணியினை மேற்கொண்டு வருகின்றோம்.

இந்த நடு என்பது உண்மையிலே மக்கள் மனங்களில் பல்வேறு வேலைத் திட்டங்களை நடுகின்ற செயற்திட்டமாகவும் அமைக்கின்றது.

பொருளாதார முன்னேற்றம் என்பது கலாசார, விழுமிய மேம்பாடு, சமூகம் சார் உறவு என்பவனவற்றை மேம்படுத்துகின்ற ஒரு வேலைத் திட்டமாக இது முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை அடையாளப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது.

**'உழை'**

இத்திட்டத்தின் மூலம் 60 சிறுவர்கள் அவர்களுடைய முயற்சிக்கு வளம் சேர்க்கும் வகையிலே கோழி வளர்ப்புத் திட்டம் ஒன்றின் ஊடாக இணைக்கப்பட்டார்கள். அவர்களை தொழில் முயற்சியாண்மையாளராக்குவதற்கான இந்த திட்டம் ஆகும். அவர்களுக்கு கோழி வளர்த்தல் பயிற்சிகள் தொடர்பான துறை சார்ந்த விற்பன்னர்களால் அவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு எங்களால் கோழிக் குஞ்சுகள் வழங்கப்பட்டன.

அவர்கள் கோழிக்குஞ்சுகளை வளர்த்து அதில் கிடைக்கக் கூடிய வருமானத்தை தன்னுடைய கற்றலுக்காகப் பயன்படுத்துவார்கள் என்பது எதிர்பார்ப்பாகும். அதே நேரத்தில் அவர்களுக்கு சிறு வயதிலேயே தொழில் சார் விடயங்களை ஊக்கப்படுத்துகின்ற திட்டமாகும்.

**'குறிஞ்சி மலர்'**

மலையகத்திலுள்ள எட்டுப் பாடசாலைகளைத் தெரிவு செய்து அந்த எட்டுப் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஒரு திட்டமாகும். அந்த வகையில் சப்ரகமுவ, இரத்தினபுரி, கேகாலை மாவட்டத்தில் தோட்டப் புறங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட எட்டுப் பாடசாலைக்கு அப்பாடசாலையில் நிலவும் குடிநீர், மலசல கூடம், நூலகம், வகுப்பறை பற்றாக் குறை பிரச்சினைக்கு தீர்வு காண்பதோடு ஸ்மாட் வகுப்பறைகள் நிர்மாணித்தல் போன்ற பல்வேறு வேலைத் திட்டங்கள் இந்த 'குறிஞ்சி மலர்' வேலைத் திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டதை இங்கே நாங்கள் குறிப்பிட்டுக் கூற முடியும்.

**'அணை'**

உடல் நிலை பாதிக்கப்பட்ட, மாற்றுத் திறனாளிகள் அல்லது தன்னுடைய வாழ்நிலையில் இறுதி உழைப்பில் இருக்கின்ற நோயாளிகளை ஊக்குவித்து அவர்களுக்குத் தேவையான சுகாதார மருந்துப் பொருட்கள் அத்தியாவசியமான உணவுகள் வழங்குகின்ற வேலைத் திட்டமாகும். அதாவது பிற நலன்விரும்பிகளுடன் இணைந்து இத்திட்டத்தை நாங்கள் முன்னெடுக்கின்றோம்.

அடுத்ததாக விசேட கல்விக்கான ஊக்குவிப்பு வேலைத் திட்டம். இந்த வேலைத் திட்டத்தின் கீழ் கடந்த ஐந்து ஆண்டுகள் 50 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கல்விக்கான ஊக்குவிப்புக்களை வழங்கி வருகின்றோம். இந்தக் கல்விக்கான ஊக்குவிப்பிலே பல்கலைக் கழக மாணவர்களும் பாடசாலை மாணவர்களும் பயன்பெற்று வருகிறார்கள். இதற்கான உதவியை அவுஸ்திரேலியாவில் வாழும் வைத்தியர் ரஜீவன் தொடர்ந்து எங்களுக்கு வழங்கி வருகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

**'உயிர் காக்கும் உணவு' வேலைத் திட்டம்**

எங்களுடைய ரோட்டரிக் கழகம் அங்கத்தவர் ரோட்டரியன் எஸ். கே. கதிர்காமநாதனின் பங்களிப்பில் நடைபெறும் இவ்வேலைத் திட்டத்தின் மூலமாக அவரால் வழங்கப்படும் உணவுப் பொதிகள், உலருணவுப் பொதிகள், அரிசி போன்றவற்றை கழக அங்கத்தவர்களால் பயனாளிகளுக்கு வழங்கப் பட்டு வருகின்றன. கிளிநொச்சி, முல்லைத் தீவு ஆகிய மாவட்டத் திலுள்ளவர்களுக்கும் வழங்கப் பட்டு வருகின்றன. அதேபோன்று கொழும்பிலுள்ள மிகவும் வறிய நிலையிலுள்ள குடும்பங்களுக்கும் வழங்கி வருகின்றோம் என்பது மிக முக்கியமான விடயமாகும்.

**கே: இத் திட்டங்களில் நீங்கள் மிகச் சிறந்த திட்டமாக கருதுவது?**

மிக முக்கியமான வேலைத் திட்டமாக நாங்கள் கருதுவது 'நடு' என்ற வேலைத் திட்டத்தினையே ஆகும். ஏனெனில் இந்த வேலைத் திட்டம் மாணவர்களை வளர்த்தெடுத்தல் அல்லது மாணவர்களுக்கு கற்றலுக்கு தேவையான உதவியை வழங்குகின்ற அதே நேரம் நீண்ட காலம் பயணிக்கக் கூடிய ஒரு வேலைத் திட்டம் இங்கே முன்னெடுக்கப் பட்டுள்ளது என்று நிச்சயமாகக் கூற முடியும்.

**கே: உங்கள் கழகத்தின் வெற்றிக்கு காரணம் எது என்று நினைக்கிறீர்கள்?**

கழக வெற்றிக்குப் பிரதான காரணமாக இருப்பது கழக அங்கத்தவர்களின் கூட்டு உழைப்பும், சமூகம் சார் சிந்தனையும் அந்த சமூகம் அபிவிருத்தி அடையும் நோக்கில் எங்களுடைய உள்ளூர், வெளியூர் அங்கத்துவ நண்பர்கள் செய்கின்ற அனுசரணைதான் பிரதான காரணமாக இருக்கின்றது.

இங்கே இரண்டு விடயத்தைக் கூற வேண்டும். ஒன்று அனுசரணை வழங்குபவர்கள் மற்றையது உரிய இடத்திற்கு எடுத்துச் செல்பவர்கள். இவ்வாறு இரண்டு வகையானவர்கள் மக்கள் மத்தியில் இருக்கிறார்கள். அனுசரணை வழங்குகின்ற பொழுது அவர்கள் வெளிநாட்டில் இருந்து அனுசரணையை கழகத்திற்கு வழங்கி விட்டு இருப்பார்கள். ஆனால் இங்கே இருக்கக் கூடிய எங்களுடைய உறுப்பினர்கள் அவர்களுக்கான உதவியை நேரடியாக எடுத்துச் சென்று வழங்குபவர்களாகவும் மக்களின் தேவைகளை கண்ணுற்று அனுசரணையாளர்களுக்கும் தெரிவிப்பவர்களுக்காகவும் இருக்கிறார்கள். உண்மையிலே எங்களுடைய கழகத்தினுடைய வெற்றி உறுப்பினர்களுடைய கூட்டு இயங்கு நிலைதான் பிரதானமான காரணமாக இருக்கின்றது.

எங்கள் கழகத்தின் தலைவர் வண. பிதா யோசுவா அடிகளாரின் நேர்த்தியான வழிகாட்டலும் அவருடைய சமூகம் பற்றிய சிந்தனையும் பிரதானமான விடயமாக இங்கே குறிப்பிட்டுச் சொல்லக் கூடியதாக இருக்கின்றது.

**கே: 365 நாளில் 365 திட்டம் என்பது ஓர் கழகமாக முடிந்ததில் எதிர்கொண்ட சவால்கள் என்ன?**

இவ்வாறான இலக்கைத் தீர்மானித்து விட்டு அந்த தேவைகளுக்கான நிதியைத் தேடுதல்,பின்னர் அவற்றை உரிய இடங்களுக்கு நகர்த்தல் என்பதும் எங்களுக்கு பெரிய சவாலாக உள்ளது.

நாங்கள் இலக்கை அடைவதற்கு சில இடங்களில் தனித்தோ சில இடங்களிலே குழுக்களாகவோ சில இடங்களிலே முழுமையான அங்கத்தவர்களாகவும் பங்கெடுத்து இந்த வேலைத் திட்டத்தை பூர்த்தி செய்திருக்கின்றோம்.

அந்த வகையிலே இந்த வேலைத் திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு எங்களுடைய கழக உறுப்பினர்களுக்கு அப்பால் சமூகம் சார்ந்த சிந்தனையுள்ள பலர் எங்களுக்கு ஆதரவு தந்திருக்கிறார்கள்.

அந்த வகையில் கிளிநொச்சி கல்வி வலயத்தினுடைய முன்பள்ளிப் பிரிவினர் மிகப் பாரியளவிலான செயற் திட்டத்தை முன்னெடுப்பதற்கும் அதேநேரம் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் பெரும் பங்காற்றியிருக்கின்றார்கள்.

குறிப்பாக போலியோ தொடர்பான விழிப்புணர்வு வேலைத் திட்டத்தை நாங்கள் செய்தோம். பெரியதொரு பங்களிப்பை முன்பள்ளிப் பாடசாலையின் உதவிக் கல்விப் பணிப்பாளர் யுவராசா ஆதரவு தந்திருந்தார். 100 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வழங்கியிருந்தோம். அதற்கு பாரிய உதவியை சுகாதார திணைக்களம் வழங்கியிருந்தது. அதன் மூலமாக 100 கிராமங்களை எடுத்து 100 கிராமங்களிலும் அங்கே இருக்கக் கூடிய முன்பள்ளிகள் ஊடாக இந்த போலியோ தொடர்பான விழிப்புணர்வு செய்யப்பட்டது என்பது மிக முக்கியமான வேலைத் திட்டமாக இங்கே நாங்கள் குறிப்பிட முடியும். அதே போல சத்துணவு வேலைத் திட்டத்தில் சிறுவர்களுக்கு சத்தான சாப்பாட்டைக் கொடுப்பதற்கான விழிப்புணர்வை முன்னெடுத்தோம். அதற்கு எங்களுக்கு முன்பள்ளிப் பிரிவினர் உதவி வழங்கியிருந்தார்கள். 40 பாடசாலைகளில் சுகாதார திணைக்களத்துடன் சுகாதார உத்தியோகஸ்தர்கள், மருத்துவ மாதுக்கள் என இணைந்து இந்த வேலைத் திட்டத்தை மிகச் சிறப்பாக முன்னெடுத்துச் சென்றார்கள்.

**கே: கழகத்தில் நீங்கள் இந்த பொறுப்பை எடுத்து நடத்த எது உங்களைத் தூண்டியது?**

ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு துறைசார்ந்த உறுப்பினர்களைத் தெரிவு செய்த போது அருட் தந்தையின் தெரிவின் பெயரிலே இந்த செயற் திட்டத்திற்கு தலைவராக நான் தெரிவு செய்யப்பட்டேன். கடந்த காலங்களில் நான் தலைவராக இருந்த போது கொரோனா காலத்தில் கிராமத்தில் வீடு வீடாகச் சென்று உதவிப் பொருட்கள் போன்றவற்றை வழங்கி வைத்தோம்.

அந்த வகையில் நாங்கள் ஆரம்பத்தில் இந்த இலக்கை தீர் மா னி க் க ா வி ட் ட ா லு ம் இரண்டு மாதங்களில் ரோட்டரி வேலைகளை முன்னெடுக்கின்ற போது அதிகளவிலான வேலைத் திட்டங்களை நாங்கள் செய்து கொண்டு போகிற போது எங்களால் ஒரு செயற்திட்டம் என்ற அடிப்படையில் 365 நாளில் 365 வேலைத் திட்டங்களை முடிக்க முடிந்தது. இது ரோட்டரிக் கழக வரலாற்றில் ஒரு மைல் கல்லாக இருக்கும் என்று அடிப்படையாக நாங்கள் இந்த செயற்திட்டத்தை செய்து முடித்தோம்.

கழக நண்பர்களுடைய ஆதரவு, தலைவருடைய சிறந்த வழிகாட்டலும் தேடல்களும், உதவிகளும் எங்களது செயற்பாட்டைச் செய்து முடிக்கத் தூண்டியதுஎன்று கூறலாம். சில சந்தர்ப்பங்களில் தனிப்பட்ட ரீதியாக, குடும்ப ரீதியாக எங்களுக்கு இருக்கக் கூடிய அழுத்தங்கள் அல்லது நாங்கள் குடும்ப ரீதியாக செய்ய வேண்டிய வேலைகளை விடுத்து இவற்றை வெற்றிகரமாக செய்து முடித்திருக்கின்றோம். இதற்கு எங்களுடைய முழு முயற்சியே காரணமாகும்.

**கே: கழக அங்கத்தவர்கள் குறித்து நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

இலங்கையில் மிக முக்கியமாக அடையாளப்படுத்துகின்ற பல்வேறு தொழில் சார் விற்பன்னர்கள் இருக்கிறார்கள். அந்த வகையிலே உண்மையிலே இந்தக் கழகத்தில் உள்ள அங்கத்தவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து இருப்பது என்பது மிகவும் மகிழ்ச்சிக்கு உரிய விடயம். குறிப்பாக ஸ்தாபகத் தலைவர் வைத்தியர் சத்தியமூர்த்தி யாழ் .போதனா வைத்தியசாலையின் பணிப்பாளராகக் கடமையாற்றியவர், வடக்கு நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பணிப்பாளர் பொறியியலாளர் சுதாகரன். இவர் முன்னாள் தலைவர். அத்தோடு கடந்த காலத் தலைவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு துறையில் தங்களை அடையாளப்படுத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

இந்த ஆண்டிலே இருக்கக் கூடிய தலைவர் வண. பிதா யோசுவா அடிகளார் இலங்கையில் அடையாளப்படுத்தக் கூடிய ஒரு வலிந்துதவுகின்ற தொண்டு நிறுவனம் ஒன்றை நடாத்தி வருகின்றார். இவர் சர்வதேச ரீதியாகவும் அறியப்பட்ட ஒருவராக இருக்கிறார். இவ்வாறு எங்களுடன் இருக்கின்ற கழக அங்கத்தவர்கள் அனைவரும் மிக முக்கியமானவர்கள்.

இவர்களின் கூட்டிணைவு என்பது மிகவும் ஆரோக்கியமானதாகும். ஏனையவர்கள் உயர்ந்து பார்க்கின்ற ஒரு தன்மையைக் கொண்ட கழகமாகும். இவர்கள் எந்த இடத்திலும் எதையும் பெற்று மக்களுக்காக கொடுக்கக் கூடிய பெரியதொரு ஆற்றல் பொருந்தியவர்களாகவும் இருப்பதையிட்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். இவ்வாறான அங்கத்தவர்கள் ஊடாக கிளிநொச்சி ரோட்டரிக் கழகம் 365 நாட்கள் அல்ல அவர்கள் 700 வரையிலான செயற் திட்டங்களையும் செய்யக் கூடிய ஆற்றல் பொருந்தியவர்களாக இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**கே: உங்களைப் பற்றிக் கூறுவீர்களா?**

1968-06-17 ஆம் திகதி பிறந்தேன். என் பெயர் அரசரட்ணம் பங்கையற் செல்வன், ஊர் வட்டக்கச்சி, ஆரம்பக் கல்வியை, கிளிநொச்சி வட்டுக் கட்சி மகா வித்தியாலத்திலும் உயர் கல்வியை கிளிநொச்சி இந்து கல்லூரியிலும் கற்றேன். தற்போது கிளிநொச்சி வட்டக்கச்சியின் பாடசாலையின் அதிபர். ஆசிரியர் சேவையில் இணைந்து 32 ஆண்டுகள் கல்விச் சேவையில் பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன் .



**இக்பால் அலி...**



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான






திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13




## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I


1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக. சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

1. அடுத்து வரும் உருவை தெரிவு செய்க.




i.  ii.  iii. 


2. 


i. 45 ii. 39 iii. 48


3. 720 என்ற எண்ணின் 4/6 மடங்கு எவ்வளவு?
i. 360 ii. 480 iii. 520




4. இலக்கம் 9 தொடக்கம் 39 வரை எண்ணும் போது வரும் இரட்டை எண்களின் எண்ணிக்கையானது?
i. 12 ii. 14 iii. 15

5. 
இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கையானது?
i. 14
ii. 16
iii. 18

6. 
+ + = 15
+ = 9 எனில் முக்கோணத்தின் பெறுமானம் யாது?
i. 6 ii. 8 iii. 5

7. ஒருவரின் தனிப்பட்ட விருப்பமானது
i. மல்லிகை மணம் வீசும் ii. இலங்கை ஒரு தீவாகும்
iii. சிவப்பு நிறம் அழகானது

8. 
சதுரவடிவான காகிதத்தை இவ்வாறு மடித்து வெட்டிய பின் பெறப்படும் உருவானது

i.  ii.  iii. 


9. விவசாயிக்கு வயல் எனில் மீனவனுக்கு
i. படகு ii. மீன் iii. கடல்

10. 3 + 12 + 70 + 6 x 0 = ?
i. 91 ii. 85 iii. 0

11. முப்பத்தொரு திகதிகளைக் கொண்ட மாதம் ஒன்றின் நடுநாள் என்ன திகதியாகும்?
i. 16 ii. 15 iii. 17




12. 120 என்ற எண்ணின் அரைவாசியுடன் 80 என்ற எண்ணின் அரைவாசியைக் கூட்டி அதனை 5 ஆல் பெருக்கினால் வரும் விடையானது?
i. 300 ii. 500 iii. 600

13. ஜனிசா தன்னிடமுள்ள பணத்தில் 2/5 பங்கை தங்கைக்கும் 1/5 பங்கை செர்வினுக்கும் கொடுத்தாள். அவளிடம் மிகுதியாக உள்ள பணத்தில் ½ பங்கு ரூபாய் 60.00 எனில் அவளிடம் இருந்த முழுத்தொகை எவ்வளவு?
i. ரூபாய் 300.00 ii. ரூபாய் 250.00 iii. ரூபாய் 500.00

14. 
இவ்வுருவில் அரைபங்கு நிழற்றப்பட வேண்டுமாயின், இன்னும் எத்தனை பகுதிகள் நிழற்றப்பட வேண்டும்?
i. 4 பங்கு
ii. 2 பங்கு
iii. 3 பங்கு

15. மிகப்பெரிய ஈரிலக்க எண் யாது?
i. 198 ii. 89 iii. 99

16. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது மாறி தோன்றாத உருவானது?

i.  ii.  iii. 

17. 7707 இவ்வெண்ணை பின்னாலிருந்து முன்னோக்கி வாசித்தால்
i. ஏழாயிரத்து எழுநூற்று ஏழு ii. ஏழாயிரத்து எழுபத்து ஏழு
iii. ஏழாயிரத்து ஏழு




18. 5m இல் எத்தனை 20 cm கள் உள்ளன?
i. 20 ii. 22 iii. 25

19. ஜனவரி மாதத்தின் முதலாம் திகதி திங்கள் எனில் அம்மாதத்திலுள்ள வெள்ளிக்கிழமைகளின் எண்ணிக்கை யாது?
i. 5 ii. 4 iii. 3


20. ஒரு கடிகாரமுகத்தில் மணித்தியால முள்ளும் நிமிட முள்ளும் ஒன்றுக்கொன்று எதிராக தோன்றும் சந்தர்ப்பம் ஆனது?
i. 12.30 மணி ii. 6.00 மணி iii. 3.45 மணி


21. ஒரு வருடத்தில் 30 நாட்களைக் கொண்ட மாதங்கள் எத்தனை?
i. 7 ii. 5 iii. 11


22. நிவாகரன் பாடசாலையிலிருந்து வடக்கு நோக்கி பயணித்து மேற்கு நோக்கி திரும்பி சிறிது தூரம் சென்ற பின் தெற்கில் அதிக தூரம் பயணித்து மீண்டும் கிழக்கு பக்கம் திரும்பி வீட்டை அடைந்தான். அவனது பயணப்பாதையை சரியாக காட்டும் வரைபடமானது?

i.  ii.  iii. 

23. கொழும்பிலிருந்து காலியை நோக்கி பயணித்த புகைவண்டி காலியை அடைந்த போது நேரம் பிற்பகல் 1 மணியாகும். புகையிரதத்தின் பயண நேரம் 3 மணித்தியாலங்களும் 30 நிமிடங்களும் எனில் புகைவண்டி புறப்பட்ட நேரம் என்ன?
i. மு.ப. 10.00 ii. மு.ப. 9.30 iii. மு.ப. 9.00


24. 






i. 14 ii. 9 iii. 12

25. எதிர்பக்கங்கள் மட்டுமே சமனாக உள்ள திண்ம உரு யாது?
i. கனவுரு ii. சதுரமுகி iii. நான்முகி

26. 
இவ்வுருவிலுள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
i. 36
ii. 40
iii. 42

27. 5 டசன் தேங்காய்களை வாங்க ரூபாய் 6000.00 தேவை எனில் ஒரு தேங்காயின் விலை என்ன?
i. ரூபாய் 60.00 ii. ரூபாய் 80.00 iii. ரூபாய் 100.00

28. எந்த எண்ணின் 10 மடங்குடன் 200 ஐக் கூட்டினால் 1000 விடையாக பெறப்படும்
i. 80 ii. 88 iii. 800

29. இரண்டு இரட்டை எண்களையும் இரண்டு ஒற்றை எண்களையும் கூட்டினால் பெறப்படுவது?
i. ஒற்றை எண் ii. இரட்டை எண் iii. கூறமுடியாது

30. 8 இல் ஆரம்பித்து 8 இல் முடிவடையும் மூன்று இலக்கங்களைக் கொண்ட எண்கள் எத்தனையுள்ளன?
i. 5 ii. 6 iii. 10

31. நள்ளிரவு 12.01 என்பதனை நியம நேரமாக எழுதினால்
i. 00 : 01 ii. 12 : 01 iii. 24 : 01

32. விரைவில் ஆவியாகக் கூடிய திரவமானது
i. பெற்றோல் ii. மண்ணெண்ணெய் iii. எண்ணெய்

33. ஒரு கம்பியை இரண்டு சமபங்காக மடித்து ஒரே தடவையில் வெட்டினால் எத்தனை துண்டுகள் கிடைக்கும்?
i. இரண்டு துண்டுகள் ii. மூன்று துண்டுகள் iii. நான்கு துண்டுகள்

34. 50 தோடம்பழங்களின் விலை ரூபாய் 3000.00 எனில் 30 தோடம்பழங்களின விலை என்ன?
i. ரூ. 1800.00 ii. ரூ. 2200.00 iii. ரூ. 2500.00

35. 250 ml அளவுள்ள ஏழு பாத்திரங்களின் மொத்தமாக நீரை நிரப்பி ஒரு பெரிய பாத்திரத்தில் ஊற்றப்பட்டது. தற்போது பெரிய பாத்திரத்திலுள்ள நீரின் அளவு யாது?
i. 2250 ml ii. 1250 ml iii. 1750 ml

(10ஆம் பக்கம் பார்க்க)

09 ஆம் பக்கத் தொடர்

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம் 15 நிமிடம்

36. ஒரு கடிகாரம் 5 மணித்தியாலங்களுக்கு ஒருமுறை மணி அடிக்கும். அதிகாலை 5 மணிக்கு முதல் மணி அடித்தால் 4 ஆவது மணி எத்தனை மணிக்கு அடிக்கும்?
i. இரவு 7 மணி ii. இரவு 8 மணி iii. இரவு 10 மணி

37. எதையும் ஆராயாமல் செய்யக் கூடாது என்பதனை விளக்கும் கூற்று
i. ஆழம் அறியாமல் காலை விடாதே
ii. ஆபத்தில் அறியலாம் அருமை நண்பனை
iii. நுனிப்புல் மேய்வது போல

38. ஒரு வரிசையில் மொத்தம் 22 பேர் நிற்கின்றனர். கோகுல் அவ்வரிசையில் முதல் நபரில் இருந்து 14ஆம் இடத்தில் நிற்கின்றான் எனில் அவனுக்குப் பின்னால் இன்னும் எத்தனை பேர் நிற்கின்றனர்?
i. 7 பேர் ii. 8 பேர் iii. 9 பேர்

39. 2016ம் ஆண்டில் முதல் 3 மாதங்களிலுள்ள நாட்களின் கூட்டுத்தொகை யாது?
i. 89 நாட்கள் ii. 90 நாட்கள் iii. 91 நாட்கள்

40. உட்பக்கம் தெரியாத பெட்டி ஒன்றில் 3 சிவப்பு பேனாக்கள் 7 பச்சை பேனாக்கள் 2 நீல பேனாக்கள் உள்ளன. ஒரு சிவப்பு பேனாவை பெறுவதற்கு ஆகக் குறைந்தது எத்தனை தடவை முயற்சிக்க வேண்டும்?
i. 10 தடவை ii. 3 தடவை iii. 7 தடவை


## கடந்த வார (09.06.2023) வினாத்தாள் II இற்கான விடைகள்

I.
1. பேணி பாதுகாப்பேன்
2. நான், என்
3. அன்பு
4. i. விருட்சம் / தரு ii. உபகாரம்
5. i. வெந்நீர் ii. துன்பப்படுவேன்
6. சோறு

II.
7. பிழை
8. பிழை
9. சரி
10. சரி

III.
11. i. வெள்ளம் வரும்முன்னே அணை கட்டுங்கள்
ii. சிறு துரும்பும் பல்குத்த உதவும்
12. i. மறு பக்கம் பார்க்க
ii. இலங்கை போக்குவரத்து சபை
iii. பிற்குறிப்பு
iv. இலங்கை மத்திய வங்கி
13. i. புத்தகம் ii. ஒளி
14. i. விமானி ii. தேரோட்டி
iii. சிற்பி
15. i. தேனீக் கூட்டங்கள் பறந்தன
ii. மயில்கள் தோகை விரித்தாடும்
16. i. பிழைப்பு ii. வருகிறார்கள்
17. i. பருந்து ii. மல்லிகை
18. கோழி குஞ்சுகளுக்கு இரை ஊட்டுகின்றன.

IV.
19. i. Pineapple ii. Train
20. i. புட்டுவ ii. சிங்கயா

V.
21. 
22. X
23. 88322
24. i. 0.6 ii. 4/10
25. 6 மணித்தியாலங்கள்
26. மூன்று
27. 2kg 700g
28. 104979
29. 4

VI.
30. 2
31. 2
32. 2
33. 1
34. 3
35. 2
36. 3
37. 1
38. 3
39. 3
40. 1
41. 2
42. 1
43. 2
44. 3
45. 1
46. 3
47. 2
48. 2
49. 3
50. 2
51. 1
52. 3
53. 1
54. 3
55. 1
56. 2
57. 3
58. 3
59. 2

# சமூகப்பணிகளுக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்த மர்ஹூம் யூ.எல்.எம் பாரூக்

கேகாலை மாவட்டத்தின் முதலாவது முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரான மர்ஹூம் யூ.எல்.எம் பாரூக் அவர்களின் 82 ஆவது பிறந்த தினம் இன்றாகும். ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் நாடறிந்த அரசியல் வாதியுமான யூ.எல்.எம் பாரூக் 1941 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20ஆம் திகதி யூனுஸ் லெப்பை_ பளீலா உம்மா தம்பதியினருக்கு மகனாக கேகாலை மாவட்டத்தில் ருவன்வெல்லை தேர்தல் தொகுதிக்கு உட்பட்ட கன்னத்தோட்டை எனும்கிராமத்தில்பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை கன்னத்தோட்டை சுலைமானியா கல்லூரியில் கற்ற அவர் உயர்கல்வியை முஹுதுகமுவ மகாவித்தியாலயத்தில் கற்றார்.

1956 ஆம் ஆண்டு ருவான்வெல்லை தேர்தல் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தி ஐ.தே.க வேட்பாளராக களமிறங்கிய முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆதரவாளராக அரசியலில் பிரவேசித்தார். பின்னர் மிக நீண்டகாலமாக அமைச்சரும் சபரகமுவ மாகாண ஆளுநரும் ஆகிய பி.சீ இம்புலானவின் அந்தரங்கச் செயலாளராகவும் செயற்பட்டு வந்தார். 1964 ஆம் ஆண்டு மெகொடபொத பத்துவை கிராம சபை தேர்தலில் வெற்றி பெற்று அரசியல் பயணத்தை ஆரம்பித்த பாரூக், பிற்காலத்தில் பாராளுமன்ற உறுப்பினர், இராஜாங்க அமைச்சர், போக்குவரத்து சபை தலைவர், ஜேர்மன் பயிற்சி கல்லூரியின் தலைவர் என பல பதவிகளை வகித்தார்.



எதிர்வரும் 20 ஆம் திகதி அன்னாரின் 82 ஆவது பிறந்ததினம்

அவர் ஆற்றிய சேவைகள் இன்றளவும் மக்களால் நினைவு கூரப்பட்டு வருகின்றன. இவரது சேவைகள் இன, மத,மொழிகளுக்கு அப்பாற்பட்டதாக இருந்தன. அமைதியானபோக்கு, பொறுமை, பல்துறை சார் அனுபவஅறிவு, அர்ப்பணிப்பு, நிதானம், தலைமைத்துவப் பண்புகள், போன்றன இவரிடம் இருந்த மிகப்பெரிய மூலதனங்கள் ஆகும்.

பி.சீ இம்புலான அவர்கள் ஆளுநராக நியமிக்கப்பட்டதன் பின்னர் ருவன்வெல்லைத் தொகுதி ஐக்கிய தேசிய கட்சியின் வெற்றிடமான பிரதிநிதித்துவத்திற்கு அன்று கட்சித் தலைமையகம் சிறிகொத்தவில் இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி கிளை மற்றும் இளைஞர் அமைப்பு தெரிவு தேர்தலில் பெரும்பான்மை வேட்பாளருக்கு மத்தியில் ஒரே ஒரு சிறுபான்மை வேட்பாளராக போட்டியிட்டார். வாக்களித்தவர்களில் 90% மேற்பட்ட பெரும்பான்மை பௌத்தர்கள் அன்று தங்களுடைய பிரதிநிதியாக சிறுபான்மை இனத்தவரான யூ.எல்.எம் பாரூக் அவர்களையே தெரிவு செய்தனர். இவ்விதம் 1988 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 20 ஆம் திகதி தனது 47ஆவது பிறந்த தினத்தன்று கேகாலை மாவட்ட முதல் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினராக பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்தார்.

சிறந்த பேச்சாற்றல் மிகுந்த அவர் எதிர்த்தரப்பினரும் போற்றும் அளவுக்கு வாதத்திறமை மிக்கவராக விளங்கினார். உண்மைக்காக குரல் கொடுத்தவர் பாரூக். அண்மையில் அவரின் சேவைகளை கௌரவிக்கும் முகமாக கன்னத்தோட்டை இஹலகம வீதி 'யூ.எல்.எம் பாரூக் மாவத்தை' எனப் பெயரிடப்பட்டது. யூ.எல்.எம் பாரூக் போன்ற மக்கள் சேவகர்கள் மக்கள் உள்ளத்தில் என்றும் வாழ்வார்கள்.

**-எம்.ஆர்.எப் ரிப்தா**
தென்கிழக்குப் பல்கலைகழகம்

# இலங்கையில் இரத்திரனியல் ரக்ஸியை அறிமுகப்படுத்தும் DPMC நிறுவனம்

பயணிகள் போக்குவரத்தில் புதியதொரு அத்தியாயத்தை ஏற்படுத்தும் வகையில் இலங்கையின் பாரிய வாகன நிறுவனமான டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி (பிரைவட்) லிமிடட் நிறுவனம் பொதுப்போக்குவரத்துக்காக மாதிரி இலத்திரனியல் முச்சக்கர வண்டிகளைக் கொண்ட ஈட்ரைவ் ரக்ஸி சேவையை அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கு மேலதிகமாக அனைத்து வாகனங்களும் நிறுவனத்தால் மையமாக கண்காணிக்கப்படுகின்றன. அது மாத்திரமன்றி ஈட்ரைவ் டக்ஸி சேவையில் உள்ள சாரதிகளுக்கு சீருடை வழங்கப்பட்டிருப்பதுடன், ஏதாவது நிகழ்வுகள் அல்லது சாரதிகள் தொடர்பான பின்னூட்டங்களை வழங்குவதற்கான தொலைபேசி இலக்கங்களுடன் சாரதிகள் குறித்த விபரங்கள் வாடிக்கையாளர்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டிருக்கும்.



ஈட்ரைவ் டக்ஸி சேவை குறித்து கருத்துத் தெரிவித்த டேவிட் பீரிஸ் ஹோல்ட்டிங் (பிரைவட்) லிமிடட் மற்றும் டேவிட் பீரிஸ் ஓட்டோ க்ளஸ்டரின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜயந்த ரத்னாயக்க கருத்துத் தெரிவிக்கையில், "மாற்றியமைக்கப்பட்ட எமது பஜாஜ் முச்சக்கரவண்டிகளைப் பதிவு செய்வதற்கு அனுமதியைப் பெற்ற முதலாவது நிறுவனம் நாம் என்பதில் பெருமை கொள்கின்றோம். சூழலுக்கு நட்பான, செலவுச் சிக்கனமான போக்குவரத்து சாதனத்தைப் பொது மக்கள் பயன்படுத்துவதற்கு இந்த தளத்தை பயன்படுத்துவதோடு மட்டுமல்லாமல், முச்சக்கர வண்டி சேவைகளுக்கு புதிய தரங்களை அமைக்கும் என நம்புகிறோம்" என்றார்.

இந்த முச்சக்கரவண்டி முதற்கட்டமாக கொழும்பு மற்றும் அதனை அண்டியுள்ள புற நகர்களில் மாத்திரம் இயக்கப்படும். வெள்ளை மற்றும் பச்சை நிறம் கலந்த தனித்துவமான நிறத்தினால் இதனை இலகுவில் அடையாளம் கண்டுகொள்ள முடியும் என்பதுடன், திங்கள் முதல் சனிக்கிழமை ஆகிய நாட்களில் மு.ப 7 மணி முதல் பி.ப 7 மணிவரை இதன் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

YOGO டக்ஸி செயலி மூலமாகவும், பிரத்யேக தொலைபேசி இலக்கமான 077 7 606077 மூலமாகவும் முன்பதிவு செய்து அவற்றின் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். மேலதிக தகவல்களுக்கு –தசுன் எதிரிசிங்க (0777587839)

தெற்காசியாவில் உயர்கல்வி மேம்பாடு ஊக்குவிப்பு;

# உலக வங்கியுடன் ஒத்துழைத்து செயற்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் உலக வங்கியும் இணைந்து தெற்காசிய பிராந்தியத்தில் உயர்கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக ஒத்துழைத்துச் செயற்படவுள்ளன. 'உயர் கல்வி மேம்பாட்டுக்கான பிராந்திய ஒத்துழைப்பு: தெற்காசிய பிராந்தியத்திற்கான தெரிவுகள்' என்ற தொனிப்பொருளின் கீழ் இந்த கூட்டாண்மை மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான 2 நாள் நிகழ்வு மற்றும் அமர்வுகள் கடந்த 6 மற்றும் 7 ஆம் திகதிகளில் கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றன.



இந்த முயற்சியானது பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை உள்ளிட்ட தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான (சார்க்) நாடுகளின் புகழ்பெற்ற பிரதிநிதிகளை ஒன்றிணைத்துள்ளது. உலக வங்கியின் முக்கிய பிரதிநிதிகளும் தங்களின் நிபுணத்துவம் மற்றும் உள்ளார்ந்த அறிவை பங்களிக்க இந்நிகழ்வுக்கு வருகை தந்திருந்தனர். இந்நிகழ்வின் போது விசேட இரவு விருந்துபசாரமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பிரதான உரை ஆற்றியிருந்தார்.

2நாள் நிகழ்வானது, தெற்காசியப் பிராந்தியத்தின் தலைவர்களையும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகளையும் ஒன்றிணைத்து ஒத்துழைப்பு முயற்சிகள் தொடர்பான வாய்ப்புகளை ஆராயும் நோக்கத்தை வெற்றிகரமாக அடையப்பெற்றது. உயர்கல்வியில் ஒத்துழைப்பை மேலும் மேம்படுத்துவது குறித்த பயனுள்ள கலந்துரையாடல்களுக்கு இது ஒரு தளத்தை வழங்கியது. நிகழ்வின் முக்கிய மையமாக அமைந்த 'உயர் கல்வி மேம்பாட்டுக்கான பிராந்திய ஒத்துழைப்பு: தெற்காசிய பிராந்தியத்திற்கான தெரிவுகள்' குறித்த உலக வங்கி அறிக்கையின் விளக்கமளிப்பு, பிராந்தியத்தில் உயர்கல்வியின் முன்னேற்றத்திற்கான பெறுமதிமிக்க உள்ளார்ந்த அறிவு மற்றும் பரிந்துரைகளை வழங்கியது.

உலக வங்கியின் மூன்றாம் நிலைக் கல்விக்கான உலகளாவிய தலைமை அதிகாரியான கலாநிதி நீனா ஆர்ன்ஹோல்ட் மற்றும் NUS நனோ அறிவியல் மற்றும் நனோ தொழில்நுட்ப முயற்சியின் இணைப் பணிப்பாளரான பேராசிரியர் சீராம் ராமகிருஷ்ணா போன்ற புகழ்பெற்ற நிபுணர்கள் அடங்கிய குழுநிலை கலந்துரையாடல்கள் நிகழ்ச்சி நிரலில் அடங்கியிருந்தன.

இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரான பேராசிரியர் சம்பத் அமரதுங்க மற்றும் உலக வங்கியின் இலங்கைக்கான முகாமையாளரான சியோ காந்தா ஆகியோர் வரவேற்பு உரை ஆற்றினர். உலக வங்கியின் பிராந்திய ஒருங்கிணைப்பு மற்றும் ஈடுபாட்டிற்கான பணிப்பாளர் செசிலி ஃப்ரூமன் மற்றும் உலகளாவிய மூன்றாம் நிலை கல்வி நிபுணரான கலாநிதி ஜமில் சல்மி ஆகியோரால் முக்கியமான விளக்கமளிப்புக்கள் வழங்கப்பட்டன. அதேவேளை இந்த அமர்வுகளை உலக வங்கியின் முன்னணி பொருளாதார நிபுணரான ஹர்ஷ அதுருபனே மற்றும் உலக வங்கியில் முகாமையாளரான கெய்கோ இனோவ் ஆகியோர் நெறிப்படுத்தியிருந்தனர்.

அமர்வுகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, உலக வங்கியின் விரைவுபடுத்தப்பட்ட உயர்கல்வி விஸ்தரிப்பு மற்றும் மேம்பாடு நடவடிக்கையின் ஆதரவுடன், இலங்கையில் சமீபத்திய உயர் கல்வி மேம்பாடுகளை நன்கு புரிந்துகொள்வதற்காக, பிரதிநிதிகள் கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு நேரில் சென்று பார்வையிட்டனர்.

# உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்க நாவடக்கமே மிகவும் பிரதானம்

'உடல், உள, சமூக, ஆத்மிக நன்னிலையே ஆரோக்கியம்' எனப்படும். மனித உடல், உள ஆரோக்கியத்தில் நாவடக்கம் மிகவும் இன்றியமையாதது. பொதுவாக நாவடக்கத்தை இரு வகையாகக் கருதலாம். ஒன்று நாவின் சுவையுணர்வைக் கட்டுப்படுத்தல் மூலம் உடல் ஆரோக்கியத்தையும், அடுத்தது பேச்சைக் கட்டுப்படுத்தவதன் மூலம் உள ஆரோக்கியத்தையும் பேணிப்பாதுகாப்பதன் மூலம் நோயின்றி நீண்ட காலம் வாழ முடியம்.

உடல் பாதித்தால் மனம் பாதிக்கும். மனம் பாதித்தால் உடல் பாதிக்கும் என்பது யாவராலும் மறுக்க முடியாத உண்மையே. எது எவ்வாறாயினும் உடல் பாதிப்பை விட மனப்பாதிப்பே பல்வேறுபட்ட நோய்களுக்கு காரணமாகின்றது. பொதுவாக நாவடக்கம் இன்றிய வார்த்தைப் பிரயோகங்களே மனத்தாக்கத்தை அதிகரிப்பதில் முக்கியமாக பங்களிப்பு செய்கின்றன.

ஒரு சொல் தீய சொல்லானால் அதுவரை கூறிய நல்ல சொற்கள் யாவும் பயனற்றுப் போய்விடும்.' இதனையே திருவள்ளுவர் பின்வருமாறு கூறியிருக்கின்றார்.

'ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின் நின்றா காதாகி விடும்.'

'தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.'

புலனடக்கம் என்கிறார்களே அதில் நாவடக்கம்தான் பிரதானமானது. தற்காலத்தில் படித்தவர், படிக்காதவர், சிறுவர், பெரியவர், ஆண், பெண் என்ற பேதமின்றி அனைவரையும் பாதித்துள்ள பாரிய நோய் மாத்திரமன்றி, பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், வேலைத்தளங்கள், கோயில்கள் போன்ற அனைத்து இடங்களிலும் ஏற்படும் பாரிய பிரச்சினைகளுக்கும் அடித்தளமாக அமைவது நாவடக்கமின்றிய நிலையேயாகும்.

இதனையே திருக்குறள் பின்வருமாறு கூறியிருக்கின்றது.

'யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.'

மேலும் கிறிஸ்துவ சமய நூலான விவிலியம் நாவையடக்குவது பற்றி பின்வருமாறு கூறுகின்றது.

'மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்தில் இருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.'

'வாக்குவாதத்தைத் தொடங்குவது மதகைத் திறந்து விடுதல் போலாகும்: வாக்குவாதம் மேலும் வளரும் முன் அதை நிறுத்திவிடு.'

'வாய்க்குள்ளே போகிறது மனுசனைத் தீட்டுப்படுத்தாது, வாயிலிருந்து புறப்படுகிறதே மனுசனைத் தீட்டுப்படுத்தும்.'

தேன்னடக்கமாக வாழப் பழகிக் கொள்ளல் அதாவது பணிவுடன் வாழல். தன்னைப் பற்றிய உயர்வான எண்ணங்களைவ விட்டொழித்து அகம்பாவம் இன்றி வாழவேண்டும். ஆசைகளுக்கு வரம்பு வைத்தல் அவசியம். பிறரிடம் குறை காணலை தவிர்த்துக்கொள்ளல், வீணான விவாதங்கள் அறவே கூடாது. புறங்கூறலைத் தவிர்க்க வேண்டும். மற்றவர்கள் புறங்கூறுவதை ஊக்கமளிக்காது இயன்றவரை தடுத்தல் சிறப்பு. வயதில் கூடிய பெரியோர்களை மதித்து நடத்தல் வேண்டும். எக்காரணம் கொண்டும் பொய் சொல்லக் கூடாது. எப்போதும் உண்மையைப் பேச வேண்டும். நல்லதை பேச வேண்டும். அதுமாத்திரமன்றி விமர்சனங்களை எதிர் கொள்ளும் போதும் கூட சலனமற்று அமைதியாக இருக்க வேண்டும்.

மௌனத்தை கடைப்பிடிப்பதால் மிக இலகுவாக மன அமைதி ஏற்படும். அமைதியிலிருந்து அன்பு வெளிப்படுகின்றது. சகிப்புத்தன்மையை கடைப்பிடிப்பதன் மூலமும் அன்பை வளர்த்துக் கொள்ளலாம்.

அளவுக்கதிகமாக பேசுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அதனால் பலவீனம் ஏற்படும். இதனால் வெறுப்பு வளர்ந்து கோபமனநிலை ஏற்படும். ஆரோக்கியத்தின் கண்ணோட்டத்தில் அளவுக்கதிகமான பேச்சு நல்லதல்ல. எனவே அளவுக்கேற்ப குறைவாக பேசி அதிகமாக செயலாற்றுதல் வேண்டும். அவ்வாறே தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். அதனால் விரோதமே உண்டாகும்.

மனதைத் தெளிவாகவும் அமைதியாகவும் வைத்திருக்க வேண்டும். தினசரி ஒரு மணி நேரமாவது மௌனத்தை கடைப்பிடித்து வரல் அவசியம். உள்ளார்ந்த அமைதி நற்குணங்களை சிறப்பிக்கச் செய்யும்.

**வைத்திய கலாநிதி செல்வி வினோதா சண்முகராஜா,**
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவ அலகு,
யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம்

# பேருவளை ஹெட்டியாக்கந்தை 753ஏ கிராம சேவகர் பிரிவுக்கு புதிய கட்டடம்






பேருவளை ஹெட்டியாக்கந்தை 753ஏ கிராம சேவகர் பிரிவுக்கு புதிய கட்டட மொன்று நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய நாயகம் அல் ஆலிமுல் பாழில் அஷ் ஷெய்ஹூ காமில் அஷ்செய்க் அஹ்மத் பின் முஹம்மத் ஆலிம் அவர்களின் வழிகாட்டலின் கீழ் இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததோடு ஹெட்டியாகந்தை கிராம சேவகர் அலுவலக நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி கிராம சேவகர் பிரிவுக்கு நிரந்த கட்டடமொன்று இல்லாதிருந்த நிலையில் சங்கைக்குரிய செய்ஹூ நாயகம் அவர்களின் உத்தரவுக்கு அமைய இக்கட்டடம் தற்போது கிராம சேவகர் அலுவலக நடவடிக்கைகளுக்காக கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நபவிய்யா அமைப்பினதும் பேருவளை நகர சபை முன்னாள் உறுப்பினர் பௌஸூல் அமீர், சமூக சேவையாளர்களான எம்.என்.எம் நிஹார், முஹம்மத் இஸ்மாயில் ஆகியோரின் ஏற்பாட்டில் திறப்பு விழா நிகழ்வு இம்பெற்றதோடு பேருவளை பிரதேச செயலாளர் ரன்ஜன் பீ பெரேரா பிரதம அதிதியாக கலந்து கொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்.

மௌலவி எம்.எஸ்.எம் ஹஸன் (முஸ்தபவி) யின் கிராஅத்துடன் ஆரம்பமான நிகழ்வில் முன்னாள் கிராம சேவக அதிகாரி திருமதி அனோமா, தற்போதைய பதில் கிராம சேவக அதிகாரி மஹேஷ் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

பேருவளை பிரதேச செயலாளர் ரன்ஜன் பீ. பெரேரா உரையாற்றும் போது,.. பேருவளை புகாரித் தக்கியாவினதும் நபவிய்யா அமைப்பினதும் மக்களின் நலன் கருதி மேற்கொள்ளப்படும் பொதுப் பணிகளை பாராட்டுகிறேன். சங்கைக்குரிய ஆன்மீகத் தலைவர் ஷேஹூ நாயகத்தின் வழிகாட்டலின் கீழ் இந்த இடத்தில் கிராம சேவகர் அதிகாரி காரியாலயம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணியானது இப்பிரதேசத்திற்கு மாத்திரமன்றி முழு நாட்டிற்கும் ஓர் முன்மாதிரியாகும். இதையிட்டு நன்றி தெரிவிக்கிறேன். கிராம சேவகர் அதிகாரி அலுவலகத்திற்கு பிரதேச மக்கள் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள சமுகமளிப்பார்கள். அவர்களுக்கு தமது தேவைகளை இக்காரியாலயத்தினூடாக சிறப்பாக பெற்றுக் கொள்ள வாய்ப்பு கிட்டியுள்ளது. மக்கள் சிரமமின்றி தமது தேவைகளை இக்காரியாலயத்தினூடாக பெற்றுக் கொள்ளும் வாய்ப்பினை வழங்கிய அத்தனை பேருக்கும் பேருவளை பிரதேச செயலாளர் என்ற வகையில் நன்றி தெரிவிக்கின்றேன் என்றார்.

முன்னாள் கிராம சேவா அதிகாரி திருமதி அனோமா,..

பேருவளை புஹாரித்தக்கியாவும் நபவிய்யா அமைப்பும் ஆன்மீக செயற்பாடுகளுக்கு அப்பால் இவ்வாறான பொதுப் பணிகளையும் செய்து வருகிறது. பிரதேச மக்களின் இன்ப துன்பங்களை நன்கு அறிந்து இப்படியான பணிகளை செய்து வருவதை பாராட்ட வேண்டும். சிறந்த தலைமைத்துவத்தின் கீழ் இவ்வாறான நற்பணிகள் இப்பிரதேசத்தில் முன்னெடுக்கப்படுவது பாராட்டத்தக்கது. இது முழு நாட்டிற்கும் ஓர் முன்மாதிரியான செயலாகும் என்றார்.

இந்நிகழ்வில் விஸ்டம் சர்வதேச பாடசாலையின் உபஅதிபர் அப்துல் காதர், சமூக சேவையாளர் ரியாஸ்தீன் இமாம்தீன், நபவிய்யா ஊடக மையத்தின் பிரதானி ஏ.எச்.எம் முபாரக் (ஆசிரியர்), நபவிய்யா அமைப்பின் முக்கியஸ்தர்கள், நபவிய்யா (நூன்) கல்வி நிலைய முக்கியஸ்தர்கள், பிரதேச செயலக அதிகாரிகள், சமுர்த்தி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேசவாசிகள் பலரும் கலந்து கொண்டனர்.

பேருவளை பீ.எம் முக்தார்...


GOVERNMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA
MINISTRY OF TRANSPORT & HIGHWAYS
ROAD DEVELOPMENT AUTHORITY
INVITATION FOR BIDS (IFB)

| Contract Name |
|---|
| Improvement of Allai - Kanthalai Road (B010) - Section (31 + 000 to 32 + 500) |
| Improvement of Allai - Kanthalai Road (B010) - Section (32 + 500 to 34 + 000) |
| Improvement of Morawewa Airforce Camp Road (0 + 000-0 + 900 Km) |
| Improvement of Kachaikodithivu to Kallaruppu Road (0 + 000-0 + 825 Km) |
| Improvement of Palathoppur Seruwila (5 + 670-5 + 730) (6 + 650-6 + 690) Km under Suspended 100,000 Km Works |

Bids are hereby invited for above works under the National Competitive Bidding procedure. Interested bidders are requested to refer the RDA and Ministry of Highways web page on **www.rda.gov.lk** from 16.06.2023 to 23.06.2023.

**The Chairman**
**Regional Procurement Committee,**
**Chief Engineer's Office, RDA, Trincomalee.**


## நயினாதீவில் 22 பவுண் தங்க நகைகள் திருட்டு

*யாழ். விசேட நிருபர்*

யாழ்ப்பாணம், நயினாதீவு ஐந்தாம் வட்டாரப் பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து 36 இலட்சம் ரூபாய் பெறுமதியான 22 பவுண் தங்கநகைகள் நேற்று முன்தினம் புதன்கிழமை (14) இரவு திருட்டுப் போயுள்ளது.

பெண்கள் இருவர் வசித்து வரும் இந்த வீட்டுக் கூரையை உடைத்துக்கொண்டு வீட்டினுள் திருடர்கள் நுழைந்த போது, அப்பெண்கள் இருவரும் உறங்கிக் கொண்டிருந்தனர். இதன்போது, வீட்டு அறையில் கைப்பையிலிருந்த தங்கநகைகளை திருடர்கள் திருடிச் சென்றுள்ளனர்.

மறுநாளான நேற்று கைப்பையுடன் நகைகள் காணாமல் போனதை அவதானித்த இப்பெண்கள், ஊர்காவற்றுறை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக ஊர்காவற்றுறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருவதுடன், யாழ்ப்பாணம் தடயவியல் பொலிஸாரும் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர்.

## மக்கள் நலத் திட்டங்களில் அதிகாரிகள் சமூக சிந்தனையோடு செயற்பட வேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



மக்கள் நலத் திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்ற சந்தர்ப்பங்களிலும் அவற்றுக்கான பயனாளர்களை தெரிவு செய்கின்ற போதும், எமது மக்களின் நலன்கள் சார்ந்த சமூகச் சிந்தனையோடு அதிகாரிகள் செயற்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேண்டுகோள் விடுத்தார்.

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பாக நேற்று நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் ஆராய்ந்த போதே, கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை அடையாளப்படுத்தி, விரிவாக ஆராய்ந்து தீர்வுகாணும் நோக்கில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் போக்குவரத்து, விவசாயம், கால்நடை, குடிநீர் விநியோகம், கடற்றொழில் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்பட்டன.

குறிப்பாக, வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முன்னெடுக்கப்படுகின்ற காரைநகர் ஊர்காவற்றுறை இடையிலான கடல் பாதை பழுதடைந்து இருப்பதனால், அதனை திருத்தி சேவையில் ஈடுபடுத்தும் வரையில், தனியார் படகுகளை வாடகைக்கு அமர்த்தி பொது மக்களுக்கான போக்குவரத்து சேவையை மேற்கொள்ளுமாறு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வீதிப் போக்குவரத்து ஆணைக்குழுவிடம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு குறித்த சேவை இடம்பெறுவதை உறுதிப்படுத்துமாறு பிரதேச செயலாளரையும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

இதேபோன்று, தீவகங்களுக்கு இடையிலான போக்குவரத்து கட்டணங்களை மீளாய்வு செய்தல், குடிநீர் விநியோகத்தினை உறுதிப்படுத்தல் போன்ற விடயங்களும் பிரஸ்தாபிக்கப்பட்டதுடன், ஏனைய விடயங்களை மிக விரைவில் நடைபெறவுள்ள இரண்டாம் கட்டக் கூட்டத்தில் கலந்துரையாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.


இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**விலைமனுக்கோரல்**

**வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான இயந்திரங்கள் வழங்குதல்**

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்வனவுக் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிட்டம்புவ நிறைவேற்றுப் பொறியியல் பிரிவிற்கான பேகோலோடர் (JCB) இயந்திரமொன்றினை வாடகைக்கு கொள்வனவு செய்வதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**

வீதி அபிவிருத்தி அதிகார சபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிரதேச கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கம்பஹா.**


## பிளிங்கனின் ஹனோய் விஜயத்தையடுத்து நெருக்கமடையும் அமெரிக்க – வியட்நாம் உறவுகள்

ஆசியான் நாடுகளில் முக்கிய நாடு எனக் கருதப்படும் வியட்நாமுக்கு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அந்தனி பிளிங்கன் சமீபத்தில் மேற்கொண்ட விஜயம், பிராந்திய முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் ஆசியான் பிராந்தியத்தில் தன் ஆதிக்கத்தை விஸ்தரிக்க விரும்பும் சீனாவின் பலத்தை அமெரிக்க பிரசன்னம் சமப்படுத்தும் என்றும் பிராந்திய அரசியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

பிராந்திய நாடுகளில் இந்தோனீசியாவும் வியட்நாமும் மட்டுமே சீனாவை எதிர்க்கக்கூடிய அரசியல் மற்றும் பொருளாதார வல்லமை கொண்டவையாக இருப்பதால் இந் நாடுகளுடன் உறவுகளை நெருக்கமாக வைத்துக் கொள்ள அமெரிக்கா விரும்புகிறது.

இதே சமயம் சகல பிராந்திய நாடுகளும் சீனாவுடன் நல்லுறவைப் பேணவே விரும்புகின்றன. ஏனெனில் பொருளாதார ஆயுத மற்றும் வர்த்தக ரீதியாக இவை சீனாவை சார்ந்துள்ளன என ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இவற்றில் லாவோசும், கம்போடியாவும் சீன விசுவாசி நாடுகளாகத் திகழும் அதே சமயம், ஏனைய ஆசியான் நாடுகள் சீன செல்வாக்கை சமன்படுத்துவதற்கு அமெரிக்காவின் வருகையை உள்ளூர விரும்புவதாக தெரிவிக்கப்படுகிறது. சீனாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான உறவு நெருக்கமடைந்து வருவது இந்நாடுகளை கவலைக்குள்ளாக்கியுள்ளது.

## கனடிய எம்.பி மீது மிரட்டல் விடுத்திருக்கும் சீனா; விசாரணை ஆரம்பம் பொலிஸார் தெரிவிப்பு

கனடிய பாராளுமன்ற உறுப்பினரும் பழைமைவாத கட்சியை சேர்ந்தவருமான மைக்கல் சொங் மீது சீனா மிரட்டல் விடுத்திருப்பதாக கனடிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இத் தகவல் கிடைத்ததையடுத்து கனடிய தேசிய பொலிசார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

மைக்கல் சொங் சீன வம்சாவளியைச் சேர்ந்த கனடியராவார். சீனாவில் வாழும் உய்கர் சமூகத்தின் மீது அந்நாட்டு அரசு கையாளும் அடக்கு முறையை கடுமையாக எதிர்ப்பவர். இனப்படுகொலை அளவுக்கு உய்கர் இனத்தின் மீது சீனா மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாக கண்டனம் தெரிவிக்கும் பிரேரணை கனடிய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு மைக்கல் சொங்கும் காரணமாக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

2021 கனடிய உளவுத்துறை அறிக்கையில், சொங் மற்றும் அவரது குடும்பம் தொடர்பான தகவல்களை சீன உளவுத்துறை சேகரிக்க முனைந்தமை தொடர்பாக குறிப்பிடப்பட்டிருந்ததாக மெயில் பத்திரிகை கூறியுள்ளது. சீனாவுக்கு எதிரான நிலைப்பாடுகளை ஏனையோரும் எடுக்காதிருப்பதற்கு சொங் மீதான சீன மிரட்டல் ஒரு பாடமாக இருக்க வேண்டும் என்று சீனா கருதுவதாகவும் இப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. இம் மிரட்டல் தொடர்பாகக் கருத்து தெரிவித்த கனடிய பொலிஸ் ஆணையாளர் மைக்டு ஹேம், குற்றச்சாட்டு நிரூபணமானால் யாராக இருந்தாலும் சம்பந்தப்பட்டவர் மீது கனடிய குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனக் கூறியுள்ளார்.

இதே சமயம், கனடிய பழைமைவாதக் கட்சியின் முன்னாள் தலைவரான எரின் ஓடூல்,

சீன அரசு தன் மீது தவறான தகவல்களை பரப்புவது மற்றும் வாக்காளர் மனதை மாற்றுவது போன்றவற்றின் மூலம் குறி வைத்ததாக கூறியுள்ளார்.


இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்
(துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு)

**இலங்கை கப்பல் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக நுரைச்சோலை பிரதேசத்தில் ஒரு வீட்டை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெறுவதற்கான விலைமனுக்கோரல்**

**(விலைமனுக்கோரல் : CSC/AD/SR/23/18)**

**தேவைபாடுகள் :** கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுக்கு சுமார் 03 அறைகள் கொண்ட தளபாடங்கள் மற்றும் வசதிகளுடன் கூடிய வீட்டின் வாடகை / குத்தகை உரிமையாளர்கள் மட்டுமே மனுவினை சமர்ப்பிக்க வேண்டும்.

**காலஎல்லை :** 2023 செப்டம்பர் 10 முதல் 2024 மே மாதம் இறுதி வரை, சுமார் ஏழு மாதங்கள்

முன்மொழியப்பட்ட வீடுகள் / தங்குமிடங்கள் லக்விஜய மின் உற்பத்தி நிலைய வளாகத்திலிருந்து சுமார் பதினைந்து (15) கிலோமீட்டர் தொலைவில் காணப்படுவது சிறப்பம்சமாகும். மனுதாரரினால் குத்தகைக்கு விடப்படும் வீடு தொடர்பான கோரப்பட்ட தகவல்களை கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட மனு ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ள படிவத்தில் மட்டுமே நிரப்ப வேண்டும் மற்றும் வேறு எந்த ஆவணங்களையும் பயன்படுத்தக்கூடாது. அனைத்து வாடகை/வரி செலுத்துதல்களும் குறித்த காலத்தில் நடைமுறையில் உள்ள அரசாங்க வரி செலுத்தும் விதிகளுக்கு உட்பட்டது.

மனு ஆவணத்தினை **2023.07.12 ஆந் திகதி** வரை வேலைநாட்களில் **பி.ப.3.00** மணி வரை மீள்செலுத்தப்படாத கட்டணமாக ரூ.**1,000/=** வெட் **15%** வரியுடன் மனு வைப்புத் தொகையாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். உரிய முறையில் முழுமையாக்கப்பட்ட விண்ணப்பங்கள் தபாலுறையில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் **"வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான தங்குமிட வளாகத்திற்கான விலைமனுக்கோரல் 2023/24"** எனக்குறிப்பிட்டு **2023.07.14 ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு முன்** பதிவுத்தபாலில் அல்லது பொதி சேவையின் மூலமாக அல்லது நேரடியாக அல்லது கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் இடப்பட்டுள்ள மனுக்களை சேகரிக்கும் பெட்டியில் இடுதல் மூலமாகவோ மனுக்களை சமர்ப்பிக்க முடியும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் கேட்போர்கூடத்தில் மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

இந்த மனுக்கள் தொடர்பாக முடிவுசெய்யும் உரிமை வழங்கற்குழுவிற்கு உண்டு. நேரம் தாழ்த்திக்கிடைக்கும் மனுக்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள பின்வரும் தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகப் பிரிவு : தொலைபேசி **+94 11 2497800 / +9411 2328772** நீடிப்பு - **253**, தொலைபேசி : **+94 71 0215720**

தலைவர்,
கூட்டுறவு வழங்கல் குழு,
வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம்,
இல - 27, MICH கட்டிடம்,
சேர் ராஸீக் பரீட் மாவத்தை,
கொழும்பு 01.

# அக்குறணை குருகொடை அல்-முஃமினாத் மகளிர் அரபுக் கல்லூரி 25 ஆவது வருட வெற்றிப் பயணம்...

**கண்டி மாவட்டத்தின் முஸ்லிம்கள் செறிந்து வாழும் அழகிய ஊர் அக்குறணையில் ஹுகொல்ல (குருகொடை வடக்கு) 571 ஆம் இலக்க கிராம சேவகர் பிரிவில் குருகொடை முஹியத்தீன் ஜும்ஆ பள்ளி மஹல்லாவில் அமைந்து வளர்ந்து புகழ் பரப்பிக் கொண்டிருக்கும் பெண்கள் அரபுக் கல்லூரியே அல்–முஃமினாத் பெண்கள் அரபுக் கல்லூரி ஆகும்.**

புனித திருக்குர்ஆனை ஓதி முடித்த புனித இஸ்லாம் மார்க்கத்தை தெளிவாகக் கற்று தேர்ந்து முஸ்லிம் சமூகத்திற்கு சிறந்த வழிகாட்டியாக திகழ வேண்டும் என்பதை உணர்ந்த மர்ஹூம் அல்ஹாஜ் ஷஹீத் ஆலிம் (கோப்பிரிடிவ் ஆலிம் ஷாஹிப்) அவர்கள் இதற்கான ஆரம்ப முயற்சியை பல சமூக உணர்வு உள்ளவர்களையும் குறிப்பாக மர்ஹூம் எச். எம். எம். காலித் மௌலவி அவர்களையும் இணைத்து இந்த நோக்கத்தை நடைமுறைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்கள். ஆரம்பத்தில் 1997 ஆம் ஆண்டு அக்குறணை அல் அஸ்ஹர் தேசிய பாடசாலைக் கட்டடத்தில் பகுதி நேர அரபுக் கல்லூரிக்கு உரிய பாடங்கள் கற்பிக்கப்பட்டு சிறிது காலத்தில்



BOARD OF TRUSTEES

| | | | |
|---|---|---|---|
| 1 | Hon. President | [illegible] | [illegible] |
| 02 | Hon. Vice President | [illegible] | [illegible] |
| 03 | Hon. Vice President | [illegible] | [illegible] |
| 04 | Hon. Patron | [illegible] | [illegible] |
| 05 | Hon. Joint Secretary | [illegible] | [illegible] |
| 06 | Hon. Joint Secretary | [illegible] | [illegible] |
| 07 | Hon. Treasurer | [illegible] | [illegible] |
| 08 | Hon. Asst. Treasurer | [illegible] | [illegible] |
| 09 | Advisor | [illegible] | [illegible] |
| 10 | Hon. Members | [illegible] | [illegible] |
| 11 | Hon. Members | [illegible] | [illegible] |
| 12 | Hon. Members | [illegible] | [illegible] |
| 13 | Hon. Members | [illegible] | [illegible] |
| 14 | Hon. Members | [illegible] | [illegible] |
| 15 | Hon. Members | [illegible] | [illegible] |
| 16 | Hon. Members | [illegible] | [illegible] |
| 17 | Hon. Members | [illegible] | [illegible] |
| 18 | Hon. Members | [illegible] | [illegible] |
| 19 | Hon. Members | [illegible] | [illegible] |

மர்ஹூம் ஷஹீத் ஆலீம் அவர்களால் கட்டப்பட்ட 'அல் பாக்கியத்துல் ஷாலிஹாத்' என்ற கட்டடத்திற்கு இடம் மாற்றப்பட்டது. தொடர்ந்து மாணவர்களின் அனுமதி அதிகரிப்பு இடப்பற்றாக்குறையை ஏற்படுத்தியது. இதற்கான பொருத்தமான காணியொன்றை தேடும் முயற்சி ஆரம்பிக்கப்பட்டது.

குருகொடை ஜும்ஆ மஸ்ஜிதுக்குச் சொந்தமான காணி ஒன்றை பெற்றுக் கொள்வதற்கான பாரிய முயற்சி அல்ஹாஜ் எச். எம். எம். காலித் மௌலவி அவர்களால் மேற்கொள்ளப்பட்ட போதும் இம்முயற்சி பயனளிக்கவில்லை.

இந்நிகழ்வு குருகொடையைச் சேர்ந்த அல்ஹாஜ் ஏ. எம். எம். இல்யாஸ் அவர்களின் உள்ளத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியதால் உடனே இதற்கான மாற்றுத் தீர்வை காண முயன்றார். தனது காலஞ்சென்ற தந்தை மர்ஹூம் அல்ஹாஜ் ஏ. எச். எல். அப்துல் மஜீத் ( கலேவெல ரோயல் முதலாளி) அவர்களுக்குரிய காணி (பேர்ச்சஸ் 56) யும் தனது சகோதரர்களான அல்ஹாஜ் ஏ. எம். எம். மவ்சூம் மற்றும் அல்ஹாஜ் ஏ. எம். எம். சபீர் ஆகியோர்கள் தமது சொந்த தேவைக்காக வாங்கி வைத்திருந்த 43 பேர்ச்சஸ் காணியையும் ஒன்றிணைத்து மொத்தம் 99 பேர்சஸ் காணியை தங்களது தந்தை மர்ஹூம் ஏ. எச். எல். அப்துல் மஜீத் அவர்களின் பெயரில் வக்ப் செய்து மகளிர்



அரபுக் கல்லூரி எமது குருகொடை மண்ணில் உதயமாகியது. அதன் பயன் ஸதகத்துல் ஜாரியாவாக தனது தந்தைக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நிய்யத்துடன் தமது குடும்பத்தாருடன் ஆலோசித்து சகலரது பூரண விருப்பத்தையும் பெற்று அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் செய்தார்.

உடனடியாக மர்ஹூம் அல்ஹாஜ் எச். எம். எம். காலித் மௌலவியுடன் தொடர்புபட்டு அல் முஃமினாத் மகளிர் அரபுக் கலாசாலையை அமைப்பதற்கான காணிப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஐ. எஸ். எஸ். நிறுவனத்தினதும் நல்லுள்ளம் கொண்ட மனிதர்களினதும் உதவியோடு குறித்த காணியில் இரண்டு மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு 2002-02-02 ஆம் திகதி விடுதி வசதிகளோடு இக்கல்லூரி புதிய அத்தியாயத்தை துவங்கியது. அன்றைய தினம் முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி என்ற அதன் பெயர் நீக்கப்பட்டு அல் முஃமினாத் மகளிர் அரபுக் கல்லூரி என்ற புதிய நாமம் சூட்டப்பட்டது.

இக்கல்லூரி அன்று முதல் சகல துறைகளிலும் முன்னேறிச் செல்லும் சந்தர்ப்பத்தில் இக்கல்லூரிக்காக முன்னாள் உப தலைவரான குருகொடையைச் சேர்ந்த மர்ஹூம் அல்ஹாஜ் எம். கே. எச். எம். இஸ்மாயில் அவர்களும் 8 பேர்சஸ் காணியை வாங்கி கல்லூரிக்காக வக்ப் செய்துள்ளார்கள்.

இக்கல்லூரி அல்குர்ஆன் மனனப் பிரிவோடு ஷரீஆப் பிரிவில் குறிப்பிட்ட சில பாடங்களைக் கொண்ட காலப் பாட விதானத்துடன் நான்கு ஆசிரியர்களின் ஒத்துழைப்போடு பகுதி நேரமாக இயங்கி வந்தது. 2006 ஆம் ஆண்டு முழு நேரக் கல்லூரியாக மாற்றம் பெற்றது. பாடவிதானம் காலத்தின் தேவைக்கு ஏற்ப ஒழுங்கமைக்கப்பட்டு ஷரீஆப் பிரிவின் கற்கைக் காலமும் நான்கு ஆண்டுகளைக் கொண்டதாக மாற்றியமைக்கப்பட்டது. அத்தோடு க.பொ. த சாதாரண தரம் மற்றும் உயர் தரம் ஆகியவற்றுக்கான பாடங்களும் இணைத்துக் கொள்ளப்பட்டன.

பொதுக் கல்வியோடு அல்குர்ஆன் மனனம், ஷரீஆக் கற்கை என கல்லூரியின் கல்விப் பணி அமைந்திருக்கின்றது. அல்குர்ஆன் மனனப் பிரிவுக்கு தரம் ஏழு மற்றும் எட்டுக்குச் சித்தியடைந்த மாணவிகளும் ஷரீஆப் பிரிவுக்கு க.பொ.த சாதாரண தரம் முடித்த மாணவிகளும் நேர்முகத் தேர்வின் போது உள்வாங்கப்படுகின்றனர்.

அல்குர்ஆனை மனனம் செய்து முடித்து ஷரீஆப் பிரிவில் இணையும் மாணவிகளுக்கு க. பொ. த சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஷரீஆப் பிரிவு மாணவிகள் ஷரீஆக் கற்கையோடு சிங்களம், ஆங்கிலம் மற்றும் கணினி ஆகியவற்றையும் கற்று க. பொ. த உயர் தரப் பரீட்சை மற்றும் அல் ஆலிம் பரீட்சை ஆகியவற்றை எழுதி நான்காம் வருட இறுதியில் கல்லூரியின் மௌலவியா பரீட்சையில் சித்தியடைந்த பின் தமது கற்கை நெறியை நிறைவு செய்து சமூகக் களத்திற்குச் செல்கின்றனர்.

நாட்டின் பல பகுதிகளில் இருந்து வரும் இம்மாணவிகளை அறிவூட்டி பண்படுத்தும் உயர் பணியில் முழு நேரமாக ஆறு ஆசிரியைகளும், பகுதி நேரமாக ஒன்பது ஆசிரிய ஆசிரியைகளும் தற்போது கடமையாற்றி வருகின்றனர்.

இது வரை இக்கல்லூரியில் 149 ஆலிமாக்களும், 60 ஹாபிழாக்களும் கற்று வெளியேறியுள்ளனர். அவர்களில் பலர் அல்குர்ஆன் மத்ரஸாக்கள், அரபுகல்லூரிகளில் முஅல்லிமாக்களாகவும், அரச மற்றும் தனியார் பாடசாலைகளில் ஆசிரியைகளாகவும் பணியாற்றுவதோடு தஃவாக் களத்திலும் செயற்படுகின்றனர். மேலும் 21 ஆலிமாக்கள் அரச பல்கலைக்கழகங்களிலும், 02 பேர் கல்வியல்கல்லூரியிலும்; பட்டம் பெற்ற ஹாபிழாக்களில் ஒருவர் மருத்துவ பீடத்திலும் இன்னும் சிலர் தனியார் நிறுவனங்களிலும் தமது மேற்படிப்பை நிறைவு செய்தவர்களாகவும்;, தொடர்பவர்களாகவும் இருக்கின்றனர்.

மார்க்கக் கல்வியுடன் பொதுக் கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆகியவற்றை நன்கு கற்று, ஆன்மீகப் பயிற்சிகளையும் வாழ்க்கைத் திறன்களையும் பெற்று, நற்பண்புகளை அணிகலண்களாகக் கொண்டு உம்மஹாதுல் முஃமினீன்களின் வாழ்க்கை நிழலில் வாழக்கூடிய உண்மையான தாஇயாக்களை சமூகத்திற்கு வழங்குவதனை நோக்கமாகக் கொண்டு இக்கல்லூரி இயங்கி வருகின்றது.

அக்குறணை பிரதேசத்தின் முன்னாள் காதி நீதவான் மௌலவி அல்ஹாஜ் என். எஸ்.எம்.கஸ்ஸாலி (கபூரி) அவர்களின் தலைமையிலான நிர்வாக சபையினதும், கடமை உணர்வோடும், சேவை மனப்பான்மையோடும் பணியாற்றும் அதிபர் ஏ.எம்.எம்.இஜ்லான் (றஹ்மானி MA (R) University Of Peradeniya) உட்பட ஆசிரியர் குலாமினதும் அயராத உழைப்புகள் கல்லூரியின் வளர்ச்சிக்கு உரமூட்டிக் கொண்டிருக்கின்றன. அத்துடன் இதே கல்லூரியில் பட்டம் பெற்ற ஆலிமாக்களில் நால்வர் இங்கு தற்போது முஅல்லிமாக்களாக பணிபுரிவது விசேட அம்சமாகும்.




அத்தோடு ஊர் மக்கள், சமூகப்பற்றுள்ள பல மனிதர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்லூரியின் பழைய மாணவியர் அமைப்பு என பலரும் கல்லூரியின் முன்னேற்றத்திற்காக முனைப்புடன் உழைக்கின்றனர் என்பது ஈன்று குறிப்பிடத்தக்கது.






குண்டும் குழியும் நிறைந்த தனது பாதையில் பல தடைகளையும் தாண்டி இருபத்தைந்து ஆண்டுகளை நிறைவு செய்து பயணித்துக் கொண்டிருக்கும் இக்கல்லூரி அருளான் அல்லாஹ்வின் துணை கொண்டு முன்னேற்றகரமான நல்ல பல மாற்றங்களுடன் ஒரு முன்மாதிரி மகளிர் அரபுக் கல்லூரியாக மக்கள் மனதில் இடம்பிடித்து வரலாற்றில் தடம் பதிக்கும் என உறுதியான நம்பிக்கையோடு உழைக்கின்றோம். அதற்காக உங்களது பெறுமதியான பிரார்த்தனையினையும் காத்திரமான ஒத்துழைப்பையும் அன்புடன் எதிர்பார்க்கின்றோம்.

எமது கல்லூரியையும் அதில் கற்றவர்களையும் மற்றும் அதற்காக உதவிகள் செய்து ஒத்துழைக்கும் அனைவரையும் எல்லாம் வல்ல அல்லாஹ் அங்கீகரித்து அருள் புரிவானாக. ஆமீன்.

அதேவேளையில் 2023 ஆம் ஆண்டில் புதிய மாணவிகள் அனுமதிக்கான ஷரீஆ, ஹிப்ழு பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. நேர்முகப் பரீட்சை 24-06-2023 இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தகைமமைகள் ஷரீஆ பிரிவுக்கு 17 வயதுக்கு உட்பட்டிருத்தல், க. பொ. த. சாதாரண தரம் பரீட்சையில் தோற்றியிருத்தல், அல்குர்ஆனை பிழையின்றி சரளமாக ஓதத் தெரிந்திருத்தல், நன்நடத்தை, நல்லொழுக்கம், ஆரோக்கியம் உள்ளவராகயிருத்தல் வேண்டும். ஹிப்ழு பிரிவுக்கான தகைமைகள் எனும்போது அல்குர்ஆனை முழுவதையும் சரளமாக ஓதத் தெரிந்திருத்தல் வேண்டும். 12-13 வயதிற்குட்பட்டவராயிருத்தல், ஆண்டு 6 இல் அல்லது 7, 8 வகுப்புக்களில் கல்வி கற்றுக் கொண்டிருத்தல், நன்நடத்தை நல்லொழுக்கம், தேகாரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும்.

சேர விரும்பும் மாணவிகள் மேற்குறிப்பிட்ட திகதியில் காலை 9.00 மணிக்கு பெற்றோர் அல்லது பாதுகாவலருடன் பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை, நற்சான்றிதழ்கள் உடன் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர்.தையல், சமையல் கலை என்பனவும் கற்பிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 0777808398 0777810780 0773474566 ஆகிய இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம்.









பேருவளை சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசலில் 132ஆவது வருட ஷாதுலிய்யா மனாக்கிப் தமாம் மஜ்லிஸும், புதிய கலீபதுல் குலபாவாக நியமிக்கப்பட்டுள்ள காலி அலிய்யா அரபுக் கல்லூரியின் பணிப்பாளரும் காலி மாவட்ட ஜம்இய்யதுல் உலமாவின் தலைவருமான மௌலவி அல்ஹாஜ் எம்.இஸட். முஹம்மத் ஸுஹூர் (பாரி) அவர்களுக்கு வரவேற்பளிக்கும் வைபவமும் அண்மையில் நடைபெற்றன. கலீபதுஷ் ஷாதுலிகளான மௌலவி எம்.எம். ஸைனுல் ஆப்தீன் (பஹ்ஜி), மௌலவி எம்.ஐ.எம் ரபீக் (பஹ்ஜி) ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் புதிய கலீபதுல் குலபா அவர்களுக்கு பென்னாடை போர்த்தி ஞாபகச் சின்னமும் வழங்கப்பட்டது. பள்ளிச் சகங்கத் தலைவர் ஏ.எச்.எம் முக்தார் ஹாஜியார், உப தலைவர்களான, எம்.எஸ்.எம் ரிழ்வான் (நழீமி), முஸ்தாக் ஜாபிர், இணைச் செயலாளர்களான எம்.எம்.எம். சிஹாப் ஹாஜியார், ரம்லான் அரூஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். (படம்: பேருவளை விசேட நிருபர்)

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

## விலைமனு அழைத்தல்

### வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சேவை வழங்கல்

01. வீதி அபிவிருத்தி அதிகார சபையின் (RDA) மாகாணப் பணிப்பாளர் (மேல் மாகாணம்) மாகாண பெறுகைக்குழுத் தலைவராகிய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிட்டம்புவ நிறைவேற்றுப் பொறியியலாளர் பிரிவின் நிட்டம்புவ வேலை அலகிற்கு ஒப்பந்த அடிப்படையில் பயிற்றப்படாத தொழிலாளர்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகவுத்திறன்களைக் கொண்டுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. மேலதிக விபரங்களிற்காகப் பின்வரும் இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - www.mohsl.gov.lk

வீதி அபிவிருத்தி அதிகார சபை - www.rda.gov.lk

**தலைவர் (மேல் மாகாணம்)**
**மாகாணப் பணிப்பாளர் அலுவலகம்**
**பத்தரமுல்ல.**

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை தேசிய வைத்தியசாலை - கொழும்பு 10

### இலங்கை தேசிய வைத்தியசாலைக்கு Table Mounted Surgical Retractor with Accessories கொள்வனவு செய்தல்

இலங்கை தேசிய வைத்தியசாலையின் தேவையின் நிமித்தம், பின்வரும் உருப்படியைக் கொள்வனவு செய்து கொள்வதற்காக விலைமனுக் கோரப்படுகின்றது.

| | விபரம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|---|
| 1 | Table Mounted Surgical Retractor with accessories | SGV/13/2021/01 |

இதற்கான தகைமைகளைக் கொண்டுள்ள நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாமென்பதுடன் Table Mounted Surgical Retractor will Accessories இற்கான மீளளிக்கப்படாத ரூபா 4,500.00 இற்கான வைப்பை இலங்கை தேசிய வைத்தியசாலையின் சிறாப்பர் பிரிவில் செலுத்தி 2023.06.19 முதல் 2023.07.11 வரை வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை இவ்வைத்தியசாலையின் வழங்கல் பிரிவில் இதற்கான நிபந்தனைகளுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

2023.07.12 அன்று மு.ப. 10.00 இற்கு இலங்கை தேசிய வைத்தியசாலையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**விஷேட வைத்தியர் டப்ளயூ. கே. விக்ரமசிங்ஹ**
**தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு,**
**இலங்கை தேசிய வைத்தியசாலை,**
**கொழும்பு-10.**

இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு
போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

## கேள்விகோரல்

| தொடர் இல. | கேள்வி இலக்கம் | விபரம் | கேள்விப் பிணை |
|---|---|---|---|
| 01 | RDA/PD/TB/TEN/2023/01 | 2023/ 2024ம் ஆண்டிற்காக இரத்தினபுரி பிரதம பொறியியலாளர் பிரிவிற்கான பாதுகாப்பு சேவையை வழங்குதல் | ரூ. 150,000.00 |
| 02 | RDA/PD/TB/TEN/2023/02 | 2023/ 2024 ஆண்டிற்காக கேகாலை பிரதம பொறியியலாளர் பிரிவிற்காக பாதுகாப்பு சேவையை வழங்குதல். | ரூ. 120,000.00 |

மேற்படி பாதுகாப்புச் சேவைகளை வழங்குவதற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன. ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2023 ஜூன் 18 முதல் 2023 ஜூன் 26 வரை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk என்ற இணையதளத்திற்குப் பிரவேசித்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர், பிரதேச பெறுகைக்குழு,**
**மாகாண பொறுப்பு பணிப்பாளர் பணிமனை (சபர)**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**இரத்தினபுரி.**
**தொ.பே. - 046-2222808**

பாதுகாப்பு அமைச்சு

## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)

### வாடகைக்கு வாகனங்களை வழங்கல்

ஒரு வருட கால எல்லைக்கு தேகஆநி தலைமையலுவலகத்திற்கு வாடகை அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ள வகுதி வாகனங்களை வழங்குவதற்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| வாகன வகுதி | ஆசனங்களின் எண்ணிக்கை | தேவைப்படும் வாகன எண்ணிக்கை |
|---|---|---|
| Van with dual A/C | 08 | 03 |
| Year of manufacture of vehicles should be 2005 or later/Year of Registration of vehicles 2007 or later | | |

(1) தேகஆநி காசாளருக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், 2023.07.05 ஆம் திகதியன்று பி.ப. 3 மணி வரையும் பின்வரும் முகவரியிலுள்ள தேகஆநி தலைமையலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

(2) முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2023.07.10 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(3) விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் விலைமனுதாரர்களின் பிரதிநிதியொருவர் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம். இலத்திரனியல் விலைமனுக்கோரல் அனுமதிக்கப்படமாட்டாது.

(4) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் **www.nbro.gov.lk** என்ற இணையதளத்தை பார்வையிடுவதன் மூலம் மேலதிக விபரங்களை பரீட்சிக்கலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**இல. 99/1, ஜாவத்தை வீதி,**
**கொழும்பு-05.**

கமத்தொழில் அமைச்சு

## அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவனம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### சீவல் பொருட்களுக்கான விற்பனை

01. சீவல் பொருட்களின் விற்பனை வழங்கலுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவனத்தின் சார்பாக, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

பொருட்களின் பட்டியலை பின்வரும் எமது உத்தியோகபூர்வ இணையதளத்தினூடாக பெற்றுக் கொள்ளலாம். இணையதளம்: **www.niphm.lk**

தேவைப்படின், அம்சங்களை நேரடியாகவே அறுவடைக்குப் பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவனத்தில் பரீட்சிக்கலாம்.

02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

03. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை அனுராதபுரம், ஜயந்தி மாவத்தை, அறுவடைக்கு பின்னராக முகாமைத்துவ தேசிய நிறுவன கணக்காளரிடமிருந்து பெற்று (தொலைபேசி: 025-3230000/ 025-3230092) மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் 2023.06.16 ஆம் திகதியிலிருந்து 2023.07.07 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். ஆவணக் கட்டணமானது 2000 ரூபாவாகும்.

04. 2023.06.16 ஆம் திகதியிலிருந்து 2023.07.07 ஆம் திகதியன்று வரையும் மேற்குறிப்பிட்டுள்ள பணக்கொடுப்பனவாகிய 2000 ரூபாவை ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், அனுராதபுரம், ஜயந்தி மாவத்தை, அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவன பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

05. 2023.07.10 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக அனுராதபுரம், ஜயந்தி மாவத்தை, அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவன பணிப்பாளரிடம் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவன நிதிப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் விலைமனுக்கள் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.

06. இந்த ஏற்பாடு தொடர்பாக அறுவடைக்கு பின்னரான முகாமைத்துவ தேசிய நிறுவன பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதாகும்.

07. மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக 75,000 ரூபா வரவு வைக்கப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**அறுவடைக்கு பின்னரான தேசிய முகாமைத்துவ நிறுவனம்,**
**ஜயந்தி மாவத்தை,**
**அனுராதபுரம்.**
**12.06.2023.**

### காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460)

### 33ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இலக்கம் :- RBK/LAN/AQURE/A3/74/387**

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணிப் பிரிவுக்குரிய நஷ்டஈட்டு தொகை ஒரு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து தொல்லாயிரத்து தொண்ணூற்றி ஆறு ரூபா முப்பத்தொன்பது சதம் (ரூ. 124,996.39) கேகாலை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கு இல. LA/12/2022ன் கீழ் வைப்பிலிடப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் அறிவிக்கின்றேன். இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து 2023.01.12 திகதியின் 2314/38 இலக்க இலங்கை ஜனநாயக குடியரசின் அரசாங்க அதிவிசேட வர்த்தமானியை பார்க்கவும்.

**உப அட்டவணை**

மாகாணம் :- சப்ரகமுவ
மாவட்டம் :- கேகாலை
பிரதேச செயலாளர் பிரிவு :- ரம்புக்கனை
கிராமம் :- குடாகம
காணியின் பெயர் :- நானாவலேகாவ வத்தை
வரைபட இலக்கம் :- இ.கி.வ. 135 பிற்சேர்க்கை இல. 10
துண்டு இலக்கம் :- 387
விஸ்தீரணம் :- ஹெக்டயார் 0.1612 இன் பர்ச் 20 (காலம் சென்ற ஆர். ஜயசேன உரிமைக்கோரும் பகுதிக்காக)
எல்லைகள் :- வடக்கு - துண்டு இல. 386
கிழக்கு - துண்டு இல. 395
தெற்கு - துண்டு இல. 388
மேற்கு - துண்டு இல. - 8

**பிரதேச செயலாளர்**
**பிரதேச செயலாளர் காரியாலயம்,**
**ரம்புக்கனை.**
**2023.06.14**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு
வன சீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சு

## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு

வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு பின்வரும் கணனி துணைப்பாகங்களைப் பெற்றுக்கொள்வதற்காக தகுதி வாய்ந்த மற்றும் இயலுமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரலின் கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | உருப்படிகள் | எண்ணிக்கை | மீளளிக்கப் படாத கேள்விப் படிவத்தின் பெறுமதி ரூபா | கேள்விப் பிணை முறியின் பெறுமதி ரூபா | கேள்விப் பிணை முறியின் செல்லுபடிக் காலம் (கேள்வி திறக்கப்படும் நாள் முதல்) |
|---|---|---|---|---|---|
| WL/02/09/Com.Acc/2023 Computer Accessories | Lot No - I Desktop Computer | 12 | 2,000.00 | 50,000.00 | 90 நாட்கள் |
| | Lot No - II Laptop Computer | 03 | 1,500.00 | 10,000.00 | |
| | Lot No - III Dot matrix printer | 10 | 1,500.00 | 10,000.00 | |
| | Lot No - IV Computer U.P.S External Hard Disk | 32 05 | 1,000.00 | 6,000.00 | |
| | Lot No - V Photocopy Machines With Stand | 10 | 2,000.00 | 50,000.00 | |

01. இதில் ஆர்வம் காட்டும் கேள்விதாரர்கள் கேள்விகள் தொடர்பான மேலதிக விபரங்களை வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் உதவிப் நிதிப் பணிப்பாளர் (0112-871537) அவர்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை 2023-06-16ஆம் திகதி முதல் 2023-07-06ஆம் திகதி வரையான அரச வேலை நாட்களில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 02.00 மணி வரையில் பத்தரமுல்லை, வன சீவராசிகள் திணைக்களத்தின் கணக்கியல் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

02. கேள்விதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள கேள்வி ஆவணங்களை 2023-06-16ஆம் திகதி முதல் 2023-07-06ஆம் திகதி பி.ப. 02.00 மணி வரையில் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான கோரிக்கை சகிதம் மீளளிக்கப்படாத கட்டணத்தை திணைக்களத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

03. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறாக கடித உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அக்கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பெறுகை இலக்கத்தைக் குறிப்பிட்டு 2023-07-06ஆம் திகதி பி.ப. 02.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் என்பதுடன் கேள்விகள் அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

04. கேள்விப் படிவங்களைத் தயாரிப்பதற்கு ஏற்படும் எந்தவொரு செலவுக்காகவும் திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவர் பொறுப்புகூறமாட்டார்.

06. எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக்கொள்ளும், நிராகரிக்கும், ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக்கொள்ளும் அல்லது எக்காரணமும் காட்டாமல் நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்லை.**

## தெவிநுவர பிரதேச சபை

## தெவிநுவர ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தின் எசல உற்சவம் - 2023

### எசல பொருட் சந்தையில் தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகளை விற்பனை செய்வதற்கான கேள்வி அழைப்பு

தெவிநுவர உத்பலவன்ன ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தின் எசல பெரஹரா உற்சவத்திற்கு சமமாக நடத்தப்படும் எசல பொருட் சந்தைக்கு தற்காலிக விற்பனைக் கூடம் மற்றும் நிலத்துண்டுகளை விற்பனை செய்வதற்காக கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

01. இத்தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகளில் விற்பனைச் செய்யும் விடயங்கள் பொருட் சந்தை நடத்தப்படும். தினமான 2023.08.01 முதல் 2023.08.08 வரையான காலத்திற்கு அமுலில் இருக்கும்.

02. ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு தெவிநுவர பிரதேச சபையின் வழங்கல்கள் பிரிவில் 2023.06.17 முதல் 2023.06.29 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை கேள்வி ஆவணத் தொகுதியை மீளளிக்கப்படாத ரூ. 300.00 கட்டணத்தை செலுத்திய பின்னர் பெற்றுக்கொள்ள வாய்ப்பு உண்டு. அவ்வாறே இலங்கை வங்கியின் தெவிநுவர கிளை கணக்கு இல. **4441084** எனும் செயலாளர், தெவிநுவர பிரதேச சபை என்ற கணக்கிற்கு குறித்த தொகையை வரவு வைத்து வங்கிப் பற்றுச்சீட்டின் தெளிவான போட்டோ ஒன்றை வட்ஸ்அப் இலகத்திற்கு அனுப்பியும் கேள்விப் படிவத்தொகுதியொன்றை வட்ஸ்அப் வழியாக பெற்றுக்கொள்ளலாம்.

03. 2023ஆம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டிய தற்காலிக வர்த்தக கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகள் பற்றிய வரைபடம் தெவிநுவர பிரதேச சபை அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்படுவதுடன், அதனடிப்படையில் உங்களால் தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகளுக்காக கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். தற்காலிக விற்பனைக் கூடம் மற்றும் நிலத்துண்டுகள் பற்றிய வரைபடம், குறைந்த பட்சம் கேள்வித் தொகை பற்றிய விபரம் அடங்கிய கேள்வி ஆவணத் தொகுதியை **071-1190755** தொ.பே. இலக்கத்தின் மூலம் **whatsapp** வழியாக அல்லது **devinuwara.ps@gmail.com** என்ற முகவரிக்கு ஈமெயில் செய்தியை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்வி ஆவணங்களுக்காக வைப்பு செய்ய வேண்டிய விலைமனுக்கள் கீழ்க்காணுமாறு

| | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் பிணை வைப்புக் கட்டணம் |
|---|---|---|
| தற்காலிக விற்பனைக் கூடங்கள் | ரூ. 300.00 | குறைந்த பட்ச கேள்வித் தொகையில் 50% ஆகும். அதிகூடிய ரூ. 100,000 ஆகும். |
| நிலத்துண்டுகள் | ரூ. 300.00 | குறைந்த பட்ச கேள்வித் தொகையில் 25% ஆகும். அதிகூடிய ரூ. 100,000 ஆகும். |

05. சமர்ப்பிக்கப்படும் கேள்வியுடன் மீளளிக்கப்படும் பாதுகாப்புப் பிணை வைப்புக் கட்டணத்தை தெவிநுவர பிரதேச சபையின் காசாளர் பிரிவிற்கு காகாச வைப்புச் செய்து குறித்த பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறே இலங்கை வங்கியின் தெவிநுவர கிளையின் கணக்கு இலக்கம் 4441084 எனும் செயலாளர், தெவிநுவர பிரதேச சபை கணக்கிற்கு வரவு வைத்து வங்கி பற்றுச்சீட்டை கேள்வி ஆவணத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். (இது பற்றிய மேலதிக விபரங்களை 0711190755 இலக்கத்தில் விசாரியுங்கள்.)

06. பொறியிடப்பட்ட கேள்விகள் 2023.07.30 மு.ப. 9.30 இற்கு அல்லது அதற்கு முன்பு "செயலாளர், பிரதேச சபை, தெவிநுவர" இற்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டு வந்து பிரதேச சபை செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள "2023ஆம் ஆண்டிற்கான தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகளை விற்பனை செய்தல்" என்று குறிப்பிட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதன் மூலம் சமர்ப்பிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த பின்னர் 2023.07.30 மு.ப. 10.00 இற்கு பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன், சமுகமளிப்பதற்கு விரும்பும் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு அதற்காக சமுகமளிக்கலாம்.

07. கேள்விகள் வழங்குதல் பற்றிய இறுதித் தீர்மானம் தெவிநுவர பிரதேச சபையின் பெறுகைக்குழுவிற்கு உரியது.

**செயலாளர்,**
**தெவிநுவர பிரதேச சபை.**
**தொலைபேசி இலக்கம் 041-2222571**

**தெவிநுவர பிரதேச சபை**
**தலைமையகத்தில்.**
2023.06.16ம் திகதி

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

**இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்**

## பலகை மரங்களை விற்பனை செய்தல்

இலங்கை அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிருவகிக்கப்படும் ஓபல்கல, வுட்சைட் மற்றும் அலகொல ஆகிய பெருந்தோட்டங்களில், வன முகாமைத்துவ திட்டத்திற்கமைவாக அகற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள 609 பலகை மரங்களை விலைமனுக்கோரல் மூலம் விற்பனை செய்வதற்காக விலைமனுக்கோரப்படுகின்றது.

| பெருந்தோட்டம் | மர வகைகள் | மரங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஓபல்கல | யுகெலிப்டஸ் | 197 |
| வுட்சைட் | யுகெலிப்டஸ் | 361 |
| அலகொல | யுகெலிப்டஸ் | 51 |

இதற்கான நிபந்தனைகளடங்கிய விலைமனுப் படிவங்களை இல.257, சிரிதம்ம மாவத்தை, கொழும்பு -10 இல் உள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதான அலுவலகத்தில் 2023.06.19 அன்று மு.ப.9.00 முதல் 2023.06.28 அன்று பி.ப.1.30 வரை மற்றும்,

பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் கல்பிஹில்ல இல் உள்ள பிராந்திய அலுவலகத்தில் 2023.06.19 அன்று மு.ப.9.00 முல் 2023.06.27 அன்று பி.ப.3.00 வரையும் ரூபா 2000/- இற்கான தொகையைச் செலுத்திக் கொள்வனவு செய்துகொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் 2023.06.28 அன்று பி.ப.1.30 இற்கு முன்னர் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், கொழும்பு -10 இல் உள்ள பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். 2023.06.28 அன்று விலைமனுக்கள் மூடப்பட்டதும் உடனடியாக அவை பிரதான அலுவலகத்தில் திறக்கப்படும்.

சித்திகரமான விலைமனுதாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டதன் பின்னர் 07 நாட்களிற்குள் மொத்த தொகையையும் செலுத்துதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறில்லாத அனைத்து விலைமனுக்களும் இரத்துச் செய்யப்படும்.

எந்தவொரு விலைமனுவையும் அல்லது அதன் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான உரிமை இ.பெ.கூ. பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம்,**
**இல.257, சிரிதம்ம வீதி, கொழும்பு - 10.**
**2023.06.14**

**விசாரணைகள் : 011-4194879**

---

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ( Inland Revenue Department)**

**தனியார் தானியங்கி கிளை பரிமாற்ற முறைமையை FMRP செயற்றிட்டத்தின் கீழ் பராமரித்தல்**

**ஒப்பந்த இலக்கம்: IR/PAM/2/4/PABX/2023**

1. FMRP செயற்றிட்டத்தின் கீழ் ''தனியார் கிளை பரிமாற்ற முறைமையை பராமரிப்பதற்காக'' தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் (பிரதானம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

   பராமரிப்பிற்கான கால எல்லையானது 1 வருடமாகும்.
2. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடாத்தப்படும்.
3. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான மற்றும் ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகுதிக்காகவும் சித்திகரமான விலைமனுதாரர் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   அ. விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையிலும் ஒப்பந்தத்தை வழங்கும் வேளையிலும் அபகீர்த்தியானோர் பட்டியலிடப்பட்ட ஒப்பந்தக்காரராக இல்லாமலிருந்திருத்தல் வேண்டுமென்பதுடன் இது தொடர்பாக சத்தியக்கடதாசியொன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

   ஆ. இலங்கையில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள வியாபார பதிவை வழங்கல் வேண்டும்.

   இ. அரசாங்க திணைக்களங்கள்/நிறுவனங்கள் அல்லது சிறந்த புகழ்வாய்ந்த தனியார் கம்பனிகளில் தனியார் தானியங்கி கிளை பரிமாற்ற முறைமைகளை பராமரிப்பதில் ஆகக் குறைந்தது 05 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   ஈ. கடந்த மூன்று (3) வருடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக மொத்தமாக சான்றளிக்கப்பட்ட கணக்கிடப்பட்ட பணக்கொடுப்பனவுகளின் ஆகக் குறைந்த வருடாந்த சராசரி நிதிப்புரள்வானது 15 மில்லியன் இலங்கை ரூபாவாகவிருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்கள 7 ஆம் மாடியின் உதவிப் பணிப்பாளரிடமிருந்து (ICT) பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2134710)
5. 2023.06.16 ஆம் திகதியிலிருந்து 2023.07.06 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஐயாயிரம் ரூபாவை (5,000 ரூபா) செலுத்திய பின்னர், கொழும்பு-02, ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் மாத்திரமே இருத்தல் வேண்டும்.
6. 2023.07.07 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு (பிரதான), பெறுகை மற்றும் ஆதனங்கள் முகாமைத்துவ கிளை, 15 ஆம் மாடி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-02 என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் 2023.10.07 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் ஒரு இலட்சத்து தொண்ணூற்று மூவாயிரத்து (193,000 ரூபா) இலங்கை ரூபா பெறுமதியான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டதும் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்டதும் விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட படிவத்திலும் வங்கி உத்தரவாத பாங்கிலமைந்துள்ளதுமான விலைமனுப்பிணையொன்றுடன் இருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2023.11.07 ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. உள்நாட்டு இறைவரித் திணைக்கள கேட்போர் கூடத்தில் 2023.06.28 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்ட குழுக் கூட்டமானது நடைபெறும். (தொடர்பு இலக்கங்கள்: 011 213 5462, 011 213 5345, பெறுகை மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவக் கிளை)

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (பிரதானம்),**
**பெறுகை மற்றும் ஆதனங்கள் முகாமைத்துவ கிளை,**
**15 ஆம் மாடி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**ஸ்ரீமத் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

**திகதி: 16.06.2023**

---

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி கொள்ளல் (திருத்த)ச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம்-460) - 7ஆம் பிரிவு**

காணி அமைச்சின் குறிப்பு இல :4-3/6/2018/HW/102

எனது குறிப்பு இல :BER/4/5/2/75


காணி கொள்ளல் சட்டத்தின் பிரகாரம் அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள இங்கு கீழ் காணும் உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி பகிரங்க தேவைக்காக அரசாங்கம் எடுத்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த சட்டத்தின் 9வது உட்பிரிவின் பிரகாரம் உரிமையை பரிசீலனை செய்வதற்கு, பேருவளை பிரதேச செயலகத்தில் என்னால் நடத்தப்பட இருக்கும் என்பதை பொது மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன். இந்த காணி சம்பந்தம் உள்ளவர்கள் அந்த பரிசீலனைக்கு முன்வரவேண்டும். மேலதிக விபரங்களுக்கு இலக்கம் 2290/10 உடைய 2022/07/25 ஆம் திகதியுடைய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி அறிக்கையைப் பாருங்கள்.

| | |
|---|---|
| மாவட்டம் | - களுத்துறை |
| பிரதேச செயலகப் பிரிவு | - பேருவளை |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | - 763-கனேகம |
| கிராமத்தின் பெயர் | - கனேகம |
| திட்டமிடல் இலக்கம் | - மு.பி.க 4876 |
| துண்டிலக்கம் | - காணித் துண்டு இலக்கம் 01 |
| காணி அளவு | - ஹெக்டயார் 0.0053 |

**எம்.ரன்ஜன்.பீ.பெரேரா,**
**முகவரி: பிரதேச செயலக அலுவலகம்,**
**பேருவளை.**
**பேருவளை பிரதேச செயலகம்,**
**பேருவளை.**
**திகதி: 09/06/2023**

---

Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...
Gather with,



SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Green Light for Online Transfer
Lake House Branch
Acc. No. 000000377
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
Gayani - 077 7 278 948/ 011 2 429 347
Piyumi - 011 2 429 383 I 011 2 429 342/ 343

---

**CDU/TS/2023/09 & 10**

## இலங்கை சுங்கம்

## கையகப்படுத்தப்பட்ட பண்டங்களின் கேள்வி விற்பனை

கையகப்படுத்தப்பட்டட வாகனங்கள்/ தங்கம்/ தங்க ஆபரணங்கள்/ மின்னியல்/ இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் சில நானாவித பண்டங்கள் ஆகியனவற்றின் கேள்வி விற்பனையானது இலங்கை சுங்க மத்திய அகற்றல் பணியகத்தில் 2023 ஜூன் 22 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

விற்பனை செய்யப்படவுள்ள பண்டங்களின் பட்டியலை 2023 ஜூன் 19 ஆம், 20 ஆம் மற்றும் 21 ஆம் திகதிகளில் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் மீளளிக்கப்படாத தொகையாகிய 25 ரூபாவைச் செலுத்திய பின்னர் இலங்கை சுங்க 3 ஆம் மாடியின் மத்திய அகற்றல் பணியகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், விற்பனையாகவுள்ள பண்டங்களின் பட்டியலானது 2023 ஜூன் 16 ஆம் திகதியிலிருந்து www.customs.gov.lk என்ற சுங்க உத்தியோகபூர்வ இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்கட்கு பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**011-2430795**
**011-2143434 – நீடிப்பு – 7300**

**சுங்க பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை சுங்கம்,**
**'சுங்க இல்லம்',**
**இல.: 40, பிரதான வீதி,**
**கொழும்பு-11.**

---

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு வனசீவராசிகள் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சு**

### வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

## விலைமனு அழைத்தல்

01. வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் கீழ்க்காணப்படும் கருமத்திற்காக முழுமையான தகைமைகளைக் கொண்டுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரப்படுகின்றது.

| விலைமனு இலக்கம் | பெறுகை இலக்கம் | கருமத்தின் பெயர் | வட்டின்றி பொறியிய லாளரின் மதிப்பீடு தொகை (ரூபா மில்) | CIDA தரம் | மீளளிக்கப்படாத விலைமனுப் படிவக் கட்டணம் ரூபா | விலைமனுப் பிணைத் தொகை ரூபா |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20/ B/ 08/2023 | மா - இம்புல்கந்தபீட்டு அலுவலக கூரையின் திருத்த வேலைகள் படி-நிலை - 1 | 3.7 | C9 அல்லது அதற்கு மேல் (கட்டிடம்) | 1,500.00 | 50,000/- 2023.10.06 வரை செல்லுபடி யாகுதல் வேண்டும். |

02. விலைமனுக் கோரலானது, தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.
03. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2023.07.06 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை, பத்தரமுல்ல வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இதற்கான விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம்.
04. அனைத்து விலைமனுதாரர்களும், கடந்த 06 மாத காலத்திற்கான வங்கிக்கூற்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. விலைமனு ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதென்பதுடன், அவற்றை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை 2023.07.06 வரை, வனசீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், என்ற பெயரில், குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் மேற்கொள்ளப்படும் எழுத்துருவ விண்ணப்பமொன்று மற்றும் CIDA பதிவுப்புத்தகம், மீளளிக்கப்படாத வைப்புத் தொகையை திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
06. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள், குறித்த செயற்றிட்ட வளாகத்தைப் பரிசீலனை மேற்கொண்டதன் பின்னர் இதற்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. இதற்கான விலைமனுப்பிணையத்தை வங்கியொன்றின் மூலம் சமர்ப்பிப்பதாயின், குறித்த பெறுமானம், செல்லுபடிக்காலம் போன்றவற்றை அனுசரித்து அரச அங்கீகாரம் பெற்ற வணிக வங்கியொன்றின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அதனை காசாகச் செலுத்துவதானால், திணைக்களத்தின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டொன்று இணைக்கப்படல் வேண்டும். விலைமனுப் பிணையம் இணைக்கப்பட்டிராத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
08. பூரணப்படுத்தப்பட்ட விலைமனுக்கள் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென தனித்தனி தபாலுறைகளில் சேர்த்து முத்திரையிட்டு மீண்டும் அவற்றை ஓருறையில் உள்ளிட்டு முத்திரையிட்டு, அவ் உறையின் இடது பக்க மேல் மூலையில் உரிய ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தைக் குறிப்பிட்டு 2023.07.07 பி.ப. 2.30 இற்கு முன்னர் கீழ்க்காணப்படும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது இத்திணைக்களத்தின் நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்க்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுத்திறத்தல் அன்றைய தினம் (2023.07.07) பி.ப. 2.30 இற்கு மேற்கொள்ளப்படுவதுடன், அவ்வேளையில் நீங்கள் அல்லது உங்கள் அதிகாரமளிக்கப் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.
09. இது தொடர்பான மேலதிக விபரங்களை 011-2871537 தொலைபேசி மூலம் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் (நிதி) ஐ அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனு தொடர்பாக தீர்மானிக்கும் உரிமை திணைக்களப் பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன், இவ் அறிவித்தலில், அல்லது விலைமனுப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாத இப்பெறுகை தொடர்பான எந்தவொரு கருமத்தையும் தீர்மானிக்கும் அதிகாரம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரித்தாகும்.
10. விலைமனுப்படிவங்களைத் தயாரிக்கையில் ஏற்படும் எந்தவித செலவினங்களையும் திணைக்களப் பெறுகைக்குழுத் தலைவர் பொறுப்பேற்கமாட்டார்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

---

## இலங்கை மதுவரித் திணைக்களம்

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**

## பெறுகை அறிவித்தல்

### இலங்கை மதுவரித் திணைக்களம்
### கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பின் பராமரிப்பு 2023/2024.

2023/2024 ஆம் ஆண்டிற்கான இல.353, கோட்டே வீதி, இராஜகிரியவில் உள்ள இலங்கை மதுவரித் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் கழிவு நீர் சுத்திகரிப்பு முறையை பராமரிப்பதற்காக நாடுபூராகவும் தகுதியான நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. மனு ஆவணங்களை மீளப்பெற முடியாத **ரூ.2,500/-** கட்டணத்தைச் செலுத்தி திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக்கொண்ட இரசீதினை **2023.06.16** ஆம் திகதியிலிருந்து **2023.07.06** ஆம் திகதி வரை வார நாட்களில் **மு.ப.9.00** மணி முதல் **பி.ப.3.00** மணிக்குள் **இலங்கை மதுவரித் திணைக்களத்தின்** தலைமை அலுவலகத்தில் **4 ஆம் மாடியிலுள்ள நிதிப் பிரிவில்** சமர்ப்பிப்பதன் மூலம் மனு ஆவணத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.
2. மனு ஆவணங்கள் வழங்கும் நிகழ்வு **2023.07.06 ஆம் திகதி பி.ப.3.00** மணியுடன் நிறைவடையும்.
3. மீளப்பெறக்கூடிய **ரூ.15,000.00** மனுப் பாதுகாப்பு வைப்புத் தொகையுடன் இந்தத் திணைக்களத்தின் நிதியாளரிடம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நகல் அல்லது அதற்கு சமமனா மதிப்பிலான இலங்கை மத்திய வங்கியின் பதிவு செய்யப்பட்ட வணிக வங்கியிலிருந்து மதுவரித் ஆணையாளர் நாயகத்தின் பெயரில் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதத்தின் அசல் நகல் மனு ஆவணங்களுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
4. மனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான கடைசி திகதி மற்றும் நேரம் **2023.07.07** ஆம் திகதி **பி.ப. 02.00** மணியாகும்.

**திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம்**
**இலங்கை மதுவரித் திணைக்களம்,**
**இல : 353, கோட்டே வீதி,**
**இராஜகிரிய.**

---

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz it's what you want Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want



- Auto Focus
Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

## நீர்கொழும்பு மாநகர சபை

# 2023 ஆம் ஆண்டிற்காக 18 கணனி தொகுதிகளை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன

நீர்கொழும்பு மாநகர சபையின் மாநனர ஆணையாளரால் 2023ஆம் ஆண்டிற்காக 18 கணனி தொகுதிகளை கொள்வனவு செய்வதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. கேள்வி ஆவணங்கள் மற்றும் அறிவுறுத்தல் பத்திரங்களை ரூ.3000.00 மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023.06.16 முதல் 2023.06.30 வரை அரச வேலை நாட்களில் மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் மாநகர கணக்களார் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனுக்கோரல் ஆவணங்களை 2023.06.16 முதல் 2023.06.30 வரை மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் மாநகர கணக்களார் திணைக்களத்தில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

04. முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விகளை 2023.07.04 பி.ப. 3.00 இற்கு முன் மாநகர ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது மாநகர ஆணையாளர் பணிமனையில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “2023 ஆம் ஆண்டிற்கான கணனி தொகுதிகள் 18ஐ வழங்குதல்” என்று குறிப்பிடுங்கள்

**மாநகர ஆணையாளர்**
**மாநகர சபை**
**நீர்கொழும்பு**

### பெயர்மாற்றம்

பதுளை மாவட்டம் பஸ்ஸர பிரதேச செயலகபிரிவு 89/F கெரண்டிஎல்ல கிராம சேவகர் பிரிவு மஹதோவ தோட்டம் கீழ் பிரிவு மடுல்சீமை பதிவு திருவகுமார் என்னும் நான் இன்று முதல் சுப்ரமணியம் திருகுமார் என்னும் பெயரை பாவிப் பதற்கு ஸ்ரீலங்கா அர சாங்கத்திற்கு தெரிவிப் பதோடு உறுதி செய்கிறேன்.
**சுப்ரமணியம் திருகுமார்**

Repeat Your Ad For Better Offers

## இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம்

(பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் மகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு)

## பெறுகை அறிவித்தல்

### மேசை கணனிகளை வழங்கல் மற்றும் பொருத்துதல்

இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் பெறுகைகள் குழுவின் தலைவரினால் பின்வரும் உபகரணங்களை வழங்கி பொருத்துவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் **2023.07.04** ஆம் திகதி **பி.ப.2.00** மணிவரை பெற்றுக் கொள்ளப்படும்.

| இல | உபகரண வகை | தொகை |
|---|---|---|
| 01 | மேசை கணனி | 31 |

ஒவ்வொரு விலைமனுதாரரும் விலைமனு ஆவணங்கள் மீளச் செலுத்தப்படாத **ரூ.3,000/-** தொகையை பணமாக மாத்திரம் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவன சரப்பிடம் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

அலுவலக நாட்களில் **2023.06.16** இலிருந்து **2023.06.30** வரை மு.ப. **9.30** மணி முதல் **பி.ப.3.00** மணிவரை, பணிப்பாளர் (நிருவாகம்) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவன அலுவலகத்தில் மேற்படி டெண்டர் கட்டணத்தை செலுத்திய பற்றுச் சீட்டினை சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளமுடியும். **2023.07.04 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகத்தின் குழும அறையில் கேள்வி மனுக்கள் திறக்கபடும்.

சகல மனுக்களும் கோரிக்கையின் பேரில் மனுதாரர்களுக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைவாக எவ்வித நிபந்தனைகளுக்குட்படாத இலங்கையில் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு வணிக வங்கியினால் வழங்கப்பட்ட **ரூ.125,000/-** திற்கான பெறுகை காப்பீட்டுத்தொகைக்கான வங்கி உத்தரவாதம் ஒன்றினை கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனு கோரிக்கைள் தயாரித்தல் மற்றும் வழங்கல் சம்பந்தமாக மனுதாரர்களால் செலவிடப்படும் எவ்வித செலவீனங்களுக்கும் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவத்தால் பொறுப்பேற்க மாட்டாது.

முத்திரையிடப்பட்ட மனுக்கள் தலைவர், பெறுகைகள் குழு, இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம், இல. 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 என முகவரியிடப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது பணிப்பாளர் (நிருவாகம்) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம், இல. 28/10, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07 அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியினுள் நேரடியாக சமூகமளித்து இடமுடியும்.

மனுக்கோரல்கள் நிறைவுற்றவுடன் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் பணிப்பாளர் சபை அறையில் உடனடியாக திறக்கப்படும். மனுக் கோரிக்கைகள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்களோ அல்லது அவர்களினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளோ பங்கேற்பதற்கு அனுமதியளிக்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு நிகழ்ச்சித்திட்ட அலுவலர் (பெறுகைகள்) அவர்களை **011-5980271** தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும்.

தலைவர்,
பெறுகைகள் குழு
இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம்,
இல. 28/10, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07.

தொலைபேசி : 011-5980200 தொலைநகல் : 011-2553806 மின்னஞ்சல் : mail@slida.gov.lk

## பெறுகை அறிவித்தல்

# மாவட்ட பொது வைத்தியசாலை நுவரெலியா ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்தல் – 2023

இலங்கை சுகாதார அமைச்சின் சார்பாக நுவரெலியா, மாவட்டப் பொது வைத்தியசாலையின் பெறுகைக்குழுவினால் வைத்தியசாலையின் ஆய்வுகூட உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், வைத்தியசாலைக்கு ஒப்படைத்தல் மற்றும் சேவைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக, தேசிய போட்டி ரீதியிலான விலைமனு முறைமையின் கீழ் தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கோரப்படுகின்றது.

| பெறுகை இலக்கம் | விபரம் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் விலைமனுப் பிணைத் தொகை |
|---|---|---|---|---|
| GH/NE/ AI/03/01/ 2023 | Supply, Installation & Commissioning of Fully Automated Coagulation Analyzer | 01 Nos. | 3,000.00 | 100,000.00 |

- 2023.06.16 முதல் 2023.07.10 வரை அனைத்து அலுவலக தினங்களிலும் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை நுவரெலியா, மாவட்டப் பொது வைத்தியசாலை அலுவலகத்திற்கு நேரில் சமுகமளித்து வியாபாரமப் பதிவுச் சான்றிதழைச் சமர்ப்பித்து விலைமனுப் மாதிரிப்படிவக் கட்டணத்தை வைத்தியசாலையின் கணக்குப்பிரிவில் செலுத்தி இதற்கான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
- விலைமனுக்களைப் பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது வைத்தியசாலையின் கணக்காளரின் அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்ப்பதற்கு அல்லது நேரடியாக ஒப்படைப்பதற்கு முடியும். விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் 2023.07.11 அன்று மு.ப. 11.00 ஆகும்.
- 2023.07.11 அன்று மு.ப. 11.00 இற்கு விலைமனுத் திறத்தல் மேற்கொள்ளப்படுவதுடன் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
- அனைத்து விலைமனுக்களுடனும், அங்கீகாரம் பெற்றுள்ள வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் வங்கிப் பிணையமொன்று அல்லது வரைவு ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கப்படும் உரிமை வைத்தியசாலையின் பெறுகைக்குழுவிற்கு உரித்தாகும்.

தொ.பே. இல: 0522224307-10 நீடிப்பு 1407/ 1408

**வி. வைத்தியர் டப்ளியூ.ஆர்.எம். மஹேந்திர செனவிரத்ன,**
**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக்குழு,**
**மாவட்டப் பொது வைத்தியசாலை,**
**நுவரெலியா.**

NICD SRI LANKA

## பெறுகை அறிவித்தல்

### தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம், பொல்கொல்ல

**உணவக சேவையை வழங்குதல்**

பொல்கொல்ல தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் மேற்படி சேவையை 2023/2024ஆம் ஆண்டிற்காக நடத்திச் செல்வதற்கு தகைமையுள்ள தனிநபர்கள், நிறுவனங்களில் இருந்து தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இந் நிறுவனத்தில் நடத்தப்படும் சகல பயிற்சி செயலமர்வு, கருத்தரங்கு, உற்சவங்களுக்கு சமுகமளிக்கும் அதிதிகளுக்கு உள்ளூர், வெளிநாட்டு உணவுப் பட்டியல் அடிப்படையில் பகல், இரவு உணவு பானங்களை தயாரித்து வழங்குதல் மேற்கொள்ளப்படுவதுடன் தேர்ந்தெடுக்கப்படும் வழங்குநர் குறைந்தபட்சம் மாதாந்தம் ரூ. 20 லட்சம் ஆவது சமைத்த உணவுகளை வழங்கக்கூடிய நிறுவனம் அல்லது தனி நபராக இருத்தல் வேண்டும்.

**பொது நிபந்தனைகள்**

விண்ணப்பிக்கும் நபர்கள் அல்லது நிறுவனங்கள் கூட்டுறவு அபிவிருத்தி பதிவாளரின் அல்லது வியாபார பெயர் பதிவு செய்யும் சட்டவாக்கத்தின் கீழ், அல்லது கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்த கூட்டுறவு சங்கங்கள், கூட்டு வியாபாரம் அல்லது தனி நபர் வியாபாரம் அல்லது கம்பனியாக இருப்பதுடன் குறித்த துறையில் குறைந்த பட்சம் 01 வருடத்திற்குக் குறையாத சிறந்த அனுபவம் பதிவு செய்த பின்னர் இருத்தல் வேண்டும். குறித்த வியாபார பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

**பெறுகை விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளல்**

குறித்த தகைமைகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட ஆவணங்களுடன் விண்ணப்பங்களை 2023.06.16 முதல் 2023.07.14 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பொல்கொல்லவில் அமைந்துள்ள தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். அதற்காக (மீளளிக்கப்படாத) ரூ. 2000.00 கேள்விக் கட்டணத்தை செலுத்துதல் வேண்டும் குறித்த விண்ணப்பப்படிவ மாதிரி மூலம் மாத்திரம் விண்ணப்பித்தல் வேண்டும். போட்டோப் பிரதிகள் நிராகரிக்கப்படும்.

**பெறுகை விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் மற்றும் பிணைத் தொகை**

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட பெறுகை விண்ணப்பங்களை மீளளிக்கப்படும் கேள்வி வைப்புடன் சமர்ப்பித்தல் வேண்டும். மீளளிக்கப்படும் கேள்வி வைப்பை ‘பணிப்பாளர் நாயகம், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்’ என்ற பெயரில் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக் கொண்ட ரூ-50,000.00 வங்கிப் பிணையின் மூலம் அல்லது நிறுவனத்தின் கணக்குப் பிரிவிற்கு ரூ. 25,000.00 நிதியை வைப்புச் செய்வதன் மூலம் மேற்கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் குறித்த வங்கிப் பிணை முறியின் மூலப் பிரதி அல்லது கணக்குப் பிரிவில் காசு வைப்புச் செய்த பற்றுச் சீட்டின் போட்டோப் பிரதியை இணைத்தல் வேண்டும். பொறியிடப்பட்ட பெறுகை விண்ணப்பங்களின் இடது பக்க மேல் முலையில் ‘பெறுகை விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் - உணவக சேவை’ என்று குறிப்பிட்டு 2023.07.17 பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு பணிப்பாளர் நாயகம், தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம், பொல்கொல்ல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

**பெறுகை விண்ணப்பங்களைத் திறத்தல்**

2023.07.17 பி.ப. 2.30 இற்கு பொல்கொல்ல, தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தில் பெறுகை விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன், அவ் வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது பெயர் குறிப்பிடப்படும் பிரதிநிதியொருவருக்கு அதற்காக சமுகமளிக்கலாம். பெறுகை விடயங்கள் சம்பந்தமான பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**பணிப்பாளர் நாயகம் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி**
**தேசிய கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம்**
**பொல்கொல்ல.**
**தொ.பே. 0812498679/ 80**

# விலைமனுக்கோரல்

### காணி அமைச்சு

## இலங்கை நில அளவைத் திணைக்களம்

### வருடாந்திர தேவைப்பாட்டுப் பெறுகைகள் – 2023

**விலைமனு இலக்கம்-SD/11/2023**

1. இலங்கை நில அளவைத் திணைக்களத்தின் பெறுகைகள் குழுவின் தலைவரினால் பின்வரும் பட்டியலிடப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளின் பெறுகைகளுக்காக உற்பத்தியாளர்கள், உற்பத்தியாளர்களின் உரிமம் பெற்ற பிரதிநிதிகள் மற்றும் சேவை வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்களை முன்வைப்பதற்காக விடுக்கப்படுகின்ற அழைப்பு.

| பொருள் இலக் கம் (1) | பொருள் (2) | அளவு (3) | விலைமனுக் காப்பீடு (ரூ.) (4) | விலைமனு ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதி மற்றும் நேரம் (5) | விலைமனுக் கோரல்கள் திறக்கப்படும் நேரம் மற்றும் திகதி (6) | விலைமனுக்கான முன்ஒன்றுகூடல் இடம்பெறும் திகதி மற்றும் நேரம் (7) |
|---|---|---|---|---|---|---|
| **செய்மதிப் படங்கள்** | | | | | | |
| 1 | 2023 வருடாந்திர பெறுகைகளுக்கு அமைய செய்மதிப் படங்களைக் கொள்வனவு செய்தல் | 7,976சதுர கிலோ மீற்றருக்கு | 650,000.00 | 2023.07.11ஆம் திகதி மு.ப. 09.30 | 2023.07.11ஆம் திகதி மு.ப. 09.35 | 2023.06.28ஆம் திகதி மு.ப. 09.30க்கு |
| **தகவல் தொழில்நுட்ப வன்பொருட்கள் மற்றும் மென்பொருட்களுடன் தொடர்புடைய சேவைகள்** | | | | | | |
| 2 | Server Machines | 02 | 300,000.00 | 2023.07.11 ஆம் திகதி மு.ப. 10.30 | 2023.07.11 ஆம் திகதி மு.ப. 10.35 | 2023.06.28ஆம் திகதி மு.ப. 09.30க்கு |
| | Windows operating system | 03 | | | | |
| | Storage Devise (SAN) and related software | 01 | | | | |
| 3 | MS SQL Server 2022 Enterprise 2 crore License pack (For 4 crores) | 02 | 100,000.00 | | | |
| 4 | 16kVA N+1 Modular UPS System | 01 | 50,000.00 | | | |
| | Branded 19” 42U Server Rack Enclosure | 01 | | | | |
| | Branded 19” 42U Metered Rack PDU | 02 | | | | |
| **ஏனையவை** | | | | | | |
| 5 | நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கான சுத்திகரிப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ளல் | 2023.08.01 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற் காக | 100,000.00 | 2023.07.11ஆம் திகதி மு.ப. 11.30 | 2023.07.11ஆம் திகதி மு.ப. 11.35 | 2023.06.28ஆம் திகதி மு.ப. 09.30 க்கு |

2. விலைமனுக்கோரலானது தேசியபோட்டிமிகுந்தவிலைமனுக்கோரல்செயல்முறையின் அடிப்படையில்முன்னெடுக்கப்படும்.
3. அதற்காகஆர்வம்காட்டுகின்றவிலைமனுதாரர்கள், நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர்(பெறுகைகள் மற்றும் வழங்கல்கள்)அவர்களிடம் மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன் பின்வரும் முகவரியில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை விலைமனு கோரும் ஆவணங்களைப் பரிசீலிக்க முடியும்.
4. அந்தந்த பொருட்களுக்கான விலைமனுக்கோரும் முழுமையான ஆவணத் தொகுதியையும் விண்ணப்பப் படிவத்தையும்மீளளிக்கப்படாத கட்டணமாக ஆயிரம் ரூபா(ரூ. 1,000.00) வைச்செலுத்துவதன்மூலம் 2023.07.10 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணியில் இருந்து பி.ப. 2.30 மணி வரை அலுவலக நேரத்தில் விலைமனுதாரர்களுக்கு நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் ) அவர்களிடம் பெற்றுக் கொள்ள முடியும்.
4. விலைமனுக்கான முன் ஒன்றுகூடலானது மேற்குறிப்பிட்ட அட்டவணையில் 07 ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டு உள்ள திகதி மற்றும் நேரத்தில் நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகத்தில் இடம்பெறுவதற்கு ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு உள்ளன.
5. இரு பிரதிகளாக தயாரிக்கப்பட்ட விலைமனுப் பத்திரம் உள்ளிடப்பட்ட உறையின் இடது பக்க மேல்மூலையில் மேற்குறிப்பிட்ட 02 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களைக் குறிப்பிட்டு விலைமனு உள்ளடங்கிய முத்திரையிடப்பட்ட கடித உறையானது மேற்குறிப்பிட்ட 05 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டு உள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன்பு கிடைக்கக் கூடிய விதமாக சிரேஷ்ட நில அளவை அத்தியட்சகர் (பெறுகைகள் மற்றும் வழங்கல்கள்), நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம், இலக்கம் 150, கிருள வீதி, கொழும்பு 05 எனும் முகவரிக்குபதிவுத்தபால்மூலமாகஅனுப்பவும்அல்லது நேரடியாககையளிக்கவும் முடியும்.தாமதமாகிக் கிடைக்கப் பெறுகின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.
6. மேற்குறிப்பிட்ட அட்டவணையில் 06 ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களில் பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் பிரிவில் விலைமனுக்கோரல்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கோரல்களை முன்வைத்தவர்கள் அல்லது அவர்களின் உரிமம் பெற்ற பிரதிநிதி ஒருவர் அச்சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ள முடியும். சகல விலைமனுக்களும் மேற்குறிப்பிட்ட அட்டவணையின் 04 ஆவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள விலைமனுக் காப்பீட்டு கட்டணங்களையும் செலுத்தியிருத்தல் வேண்டும்.
7. சமர்ப்பிக்கப்படுகின்ற விலைமனுவானது 2023.09.11ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.
8. கொள்வனவு செய்வதற்கான கட்டளை கிடைக்கப்பெற்று ஒரு மாத (01) காலத்திற்குள் மேற்குறிப்பிட்ட பொருட்கள்/ சேவைகள் வழங்கப்படல் வேண்டும்.

**நில அளவையாளர் நாயகம்**
**நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகம்,**
**இலக்கம் 150, கிருள வீதி, கொழும்பு 05.**
**தொலைபேசி/ தொலைநகல் – 011 2368106**
**2023.06.16**

# மும்பை இந்தியன்ஸ் அணிக்கு மீண்டும் திரும்பினார் மாலிங்க



இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் லசித் மாலிங்க, மும்பை இந்தியன்ஸ் உரிமையாளர்களின் புதிய அணியான எம்.ஐ நியூ யோர்க்கின் பந்துவீச்சு பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் நடைபெறவுள்ள மேஜர் லீக் டி20 தொடரில் எம்.ஐ நியூயோர்க் அணி ஆடவுள்ளது. இதில் ஆடும் அணி மற்றும் பயிற்சிக் குழாமை மும்பை இந்தியன்ஸ் வெளியிட்டுள்ளது.

இதன்படி அதிரடி வீரர் கிரோன் பொலார்ட் எம்.ஐ நியூயோர்க் அணித் தலைவராக செயற்படவுள்ளார். தவிர ஆப்கானிஸ்தானின் ரஷீத் கான், மேற்கிந்திய தீவுகளின் முன்னாள் அணித் தலைவர் நிகலஸ் பூரன், நியூசிலாந்து வேகப்பந்து வீச்சாளர் ட்ரென்ட் போல்ட் போன்ற முன்னணி வீரர்களும் இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர். இதில் இந்திய பிரீமியர் லீக் போட்டிகளில் மும்பை இந்தியன்ஸ் அணிக்காக விளையாடி மொத்தம் 170 விக்கெட்டுகளை வீழ்த்திய லசித் மாலிங்க மீண்டும் மும்பை இந்தியன்ஸ் அணிக்கு திரும்பும் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இதன்படி மாலிங்க பந்துவீச்சு பயிற்சியாளராக செயற்படும் அதே நேரம் முன்னாள் தென்னாபிரிக்க வீரர் ரொபின் பீட்டஸன் தலைமை பயிற்சியாளராக செயற்படவுள்ளார்.

மேஜர் லீக் கிரிக்கெட் தொடர் எதிர்வரும் ஜூலை 14 தொடக்கம் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.



கொழும்பு சாஹிரா கல்லூரியின் ரக்பி அணிக்கு 2023 ஆம் ஆண்டுக்கான பிரதான அனுசரணையை வழங்க மூஸ் ஆடை நிறுவனம் முன்வந்திருப்பதோடு Diamond Best Foods இன் ROZA இணை அனுசரணையை வழங்கவுள்ளது. மூஸ் ஆடை சந்தைப்படுத்தல் தலைவி கித்மின் டி சியுல்வா, இணை அனுசரணையாளர் Diamond Best Food சந்தைப்படுத்தல் தலைவர் ரிம்ஸான் பாரூக் ஆகியோர் கடந்த புதனன்று (14) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் சாஹிரா கல்லூரி அதிபர் ரிஸ்வி மரிக்காருக்கு அனுசரணைகளை வழங்குவதை காணலாம். இதில் கல்லூரி ஆளுனர் சபையின் செயலாளர் அலவி முக்தார், விளையாட்டுக் குழுவின் தலைவர் நைனா மொஹம்மட், பழைய மாணவர் சங்கத் தலைவர் எம்.என். ஷிராஸ், செயலாளர் நுஸ்ரி முன்சூர், கல்லூரி விளையாட்டுப் பொறுப்பாசிரியர் எம்.இசட். பாரூக் மற்றும் றக்பி குழு பிரதித் தலைவர் ஷர்வார் யூநூஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.
(படம்: ருஸைக் பாரூக்)

# சம்பியனானது சோபர் அணி




ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்

அட்டாளைச்சேனை எவடோப் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற எவடோப் மின்னொளி கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அட்டாளைச்சேனை சோபர் விளையாட்டுக் கழகம் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை (13) இரவு நடைபெற்ற இறுதிப் போட்டியில் அட்டாளைச்சேனை எவடோப் விளையாட்டுக் கழகமும், அட்டாளைச்சேனை சோபர் கழகமும் மோதின.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய சோபர் அணியினர் 5 ஓவர் நிறைவில் 42 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய எவடோப் அணியினர் 5 ஓவர் நிறைவில் 22 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர்.

இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற சோபர் அணிக்கு வெற்றி கிண்ணத்துடன் 40 ஆயிரம் ரூபா பணப்பரிசும், இரண்டாமிடம் பெற்ற எவடோப் அணிக்கு கிண்ணத்துடன் 20 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

# ரிவ்யூவையே ரிவ்யூ செய்தார் அஸ்வின்



தமிழ்நாடு பிரீமியர் லீக் போட்டியில் திண்டுக்கல் அணித் தலைவர் ஒரே பந்தில் இரண்டாவது முறையாக நடுவரிடம் மேன்முறையீடு செய்த வினோதம் நிகழ்ந்துள்ளது.

அஸ்வின் வீசிய பந்துக்கு திருச்சி அணியின் முக்கிய வீரர் ராஜ்குமார் விக்கெட் காப்பாளரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதற்கு கள நடுவர் ஆட்டமிழந்ததாக அறிவிக்க, துடுப்பாட்ட வீரர் ராஜ்குமார் உடனடியாக 3ஆம் நடுவரிடம் ரிவ்யூ சென்றார். அப்போது மூன்றாம் நடுவர் சோதித்துப் பார்த்தபோது, துடுப்பு தரையில் பட்ட போது பந்து துடுப்பை கடந்து சென்றது தெரிந்தது.

இதனால் பந்து துடுப்பில் படவில்லை என்று கூறி 3ஆவது நடுவர் ஆட்டமிழப்பில்லை என அறிவித்தார். எனினும் அஸ்வின் இந்த முடிவை ஏற்காமல் மீண்டும் மூன்றாவது நடுவருக்கு மேன்முறையீடு செய்தார். எனினும் அப்போதும் அது ஆட்டமிழப்பு இல்லை என்றே அறிவிக்கப்பட்டது.

எனினும் இந்தப் போட்டியில் அஸ்வினின் திண்டுக்கல் அணி வெற்றியீட்டியது.

“நடுவரின் முடிவு எனக்கு சரியாகப் படவில்லை. இதனால் வேறு கெமரா கோணத்தில் மீண்டும் சோதனை செய்யப்படும் என்று எண்ணி மேன்முறையீடு செய்தேன்” என்று அஸ்வின் தெரிவித்துள்ளார்.

கிரிக்கெட் வரலாற்றில் ஒரு பந்துக்கு இருமுறை ரிவ்யூ கேட்கப்பட்டது இதுவே முதல் முறை ஆகும்.

# ஆசிய கிண்ண தொடரின் 9 போட்டிகள் இலங்கையில்



பெரும் இழுபறிக்குப் பின்னர் ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணையை ஆசிய கிரிக்கெட் கௌன்ஸில் நேற்று (15) அறிவித்தது.

இதன்படி எதிர்வரும் ஓகஸ்ட் 31 ஆம் திகதி தொடக்கம் செப்டெம்பர் 17 ஆம் திகதி வரை இலங்கை மற்றும் பாகிஸ்தானில் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதில் நான்கு போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெறும் அதேநேரம் எஞ்சிய ஒன்பது போட்டிகளும் இலங்கையில் நடைபெறவுள்ளன.

இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் மற்றும் நேபாள அணிகள் மொத்தம் 13 ஒருநாள் போட்டிகளில் ஆடவுள்ளன. இந்திய அணி பாகிஸ்தான் செல்ல மறுத்ததை அடுத்து தொடரை நடத்துவதில் இழுபறி நீடித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை வரும் நியூஸி. மகளிர் குழாம் அறிவிப்பு



ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் ஆடுவதற்காக இலங்கை சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நியூசிலாந்து மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

வேகப்பந்து வீராங்கனை ரோஸ்மரி மெய்ர் மற்றும் விக்கெட் காப்பாளர் இஸி கேஸ் அணிக்கு திரும்பி இருப்பதோடு அணித் தலைவியாக சொபி டெவின் செயற்படவுள்ளார்.

இலங்கையில் முதல் முறையாக இரு தரப்பு தொடரில் ஆடவுள்ள நியூசிலாந்து அணி எதிர்வரும் ஜூன் 27, 30 மற்றும் ஜூலை 3 ஆம் திகதிகளில் இலங்கை அணிக்கு எதிராக மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடவுள்ளது. இதனைத் தொடர்ந்து இரு அணிகளுக்கும் இடையிலான டி20 தொடர் ஜூலை 8ஆம் திகதி ஆரம்பமாகும். இந்தத் தொடருக்காக நியூசிலாந்து மகளிர் அணி எதிர்வரும் ஜூன் 22 ஆம் திகதி இலங்கையை நோக்கி புறப்படவுள்ளது.

நியூசிலாந்து குழாம்: சொபி டெவின் (தலைவி), சுசி பேட்ஸ், பெர்னாடின் பெசியுடன்ஹோட், ஏடன் கார்சன், இசி கேஸ், மட்டி கிரீன், ப்ரூக் ஹலிடே, பிரான் ஜோன்ஸ், மெலி கெர், ஜேஸ் கெர், ரோஸ்மரி மெய்ர், மொலி பென்போல்ட், ஜோர்ஜியா பிலிமர், ஹன்னா ரோ, லீ டஹுஹு.

## சர்வதேச செய்திகள்

பாராளுமன்றம் அருகே

# ரஷ்யா தூதரகம் கட்டுவதை நிறுத்த ஆஸி. நடவடிக்கை




கன்பராவில் உள்ள அவுஸ்திரேலிய பாராளுமன்றத்திற்கு அருகில் ரஷ்யா புதிய தூதரகத்தை அமைப்பதை நிறுத்த புதிய சட்டம் நிறைவேற்றப்படவுள்ளது.

தேசிய பாதுகாப்பு அடிப்படையில் தலைநகரில் உள்ள குறித்த இடத்தை ரஷ்யா குத்தகைக்கு பெறுவதை இந்த சட்டம் ரத்துச் செய்யும் என்று பிரதமர் அன்தனி அல்பனிஸ் தெரிவித்துள்ளார்.

“பாராளுமன்ற இல்லத்திற்கு மிக நெருக்கமாக புதிதாக ரஷ்யா நிலைகொள்வதால் அச்சுறுத்தல் இருப்பதாக அரசுக்கு தெளிவான பாதுகாப்பு அறிவுறுத்தல் கிடைத்துள்ளது” என்று அல்பனிஸ் தெரிவித்துள்ளார். “அந்த குத்தகை இடம் உத்தியோகபூர்வ இராஜதந்திர நிலை ஒன்றாக மாறாமல் இருப்பதை உறுதி செய்ய நாம் விரைவாக செயல்பட வேண்டும்” என்றும் அவர் கூறினார்.


இந்த இடத்தை ரஷ்யா கடந்த 2008 ஆம் ஆண்டு குத்தகைக்கு வாங்கியதோடு அங்கு நிர்மாணத் திட்டத்திற்கு 2011இல் ஒப்பதல் வழங்கப்பட்டுள்ளது.

“முன்மொழியப்பட்டிருக்கும் ரஷ்யாவின் இரண்டாவது தூதரகம் பாராளுமன்றத்தை ஒட்டியே உள்ளதுதான் பிரச்சினை. அங்கு எந்த ஒரு தூதரகமும் கட்ட அனுமதிக்க முடியாது” என்று ஆஸி. உள்துறை அமைச்சர் கிளயர் ஓநெயில் தெரிவித்தார்.

உக்ரைனுக்கு அதிகம் ஆதரவு வழங்கும் நேட்டோ அல்லாத நாடாக அவுஸ்திரேலியா உள்ளது. 2022 பெப்ரவரியில் உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தது தொடக்கம் அந்த நாட்டுக்கு அவுஸ்திரேலியா வெடிபொருட்கள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் போன்ற உதவிகளை வழங்கி வருகிறது.

திருமணத்திற்கு மறுப்பு:

# பெண்ணை கொன்ற ஆடவருக்கு தூக்கு



எகிப்தில் தனது திருமண கோரிக்கையை நிராகரித்த சக பல்கலைக் கழக மாணவியை கொலைசெய்த ஆடவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜுன் மாதம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் முஹமது ஆதல் என்ற அந்த ஆடவர் நயிரா அஷ்ரப் என்ற பெண்ணை அவர்கள் இருவரும் கல்வி கற்கும் பல்கலைக்கழகத்திற்கு வெளியில் வைத்து கழுத்தை வெட்டி கொலைசெய்யும் காட்சி வீடியோ ஒன்றில் பதிவாகியுள்ளது.

எகிப்தில் பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவம் தொடர்பில் விரைவான வழக்கு விசாரணைக்கு முகம்கொடுத்த ஆதலுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதோடு வழக்கமாக நான்கு ஆண்டுகளின் பின்னரே மரண தண்டனை நிறைவெற்றப்படும் நிலையில் ஆதலின் தண்டனையும் விரைவாக செயல்டுத்தப்பட்டுள்ளது.

# கிரேக்கத்தில் குடியேறிகள் படகு மூழ்கியதில் 79 பேர் உயிரிழப்பு

## 100க்கும் அதிகமானோரை மீட்ட சொகுசுக் கப்பல்



தெற்கு கிரேக்கத்தின் கடற்கரைக்கு அப்பால் குடியேறிகளை ஏற்றிய மீன்பிடி படகு ஒன்று மூழ்கியதில் குறைந்தது 79 பேர் உயிரிழந்ததோடு 100க்கும் அதிகமானோர் மீட்கப்பட்டுள்ளனர்.

இது கிரேக்கத்தில் இடம்பெற்ற மிகப்பெரிய குடியேறிகள் தொடர்பான அனர்த்தம் என குறிப்பிட்டிருக்கும் அந்நாட்டு அரசு மூன்று நாள் துக்க தினத்தை அறிவித்துள்ளது.

கடலோரக் காவல் படையினரின் உதவியை நிராகரித்த நிலையில் அந்தப் படகு பீடோஸ் நகருக்கு அப்பால் சுமார் 80 கிலோ மீற்றர் தொலைவில் மூழ்கியுள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய எல்லை நிறுவனமான பிரான்டெக்ஸுக்கு சொந்தமான விமானம் ஒன்றினால் இந்தப் படகு கடந்த செவ்வாய்க்கிழமை சர்வதேச கடற்பகுதியில் அவதானிக்கப்பட்டதாக கடலோர காவல்படை கூறியது. அப்போது படகில் இருந்த ஒருவரும் உயிர் காப்பு அங்கியை அணிந்திருக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கிரேக்க நிர்வாகம் பல முறை இந்தப் படகை செய்மதி தொலைபேசி வழியாக தொடர்பு கொண்டு உதவி அளிக்க முன்வந்தபோதும், படகில் உள்ளவர்கள் அதனை நிராகரித்திருப்பதோடு, “எமக்கு இத்தாலிக்குச் செல்வதை தவிர வேறு தேவை இல்லை” என்று பதிலளித்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த புதனன்று படகின் இயந்திரம் செயலிழந்து சில நிமிடங்களிலேயே படகு முழுமையாக மூழ்கியுள்ளது. தேடுதல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டபோதும் கடும் காற்றுக்கு மத்தியில் அதனை செயற்படுத்துவதில் சிரமம் நீடித்து வருகிறது.

காப்பாற்றப்பட்ட பலருக்கு நீச்சல் தெரிந்திருக்கவில்லை என்றும் அவர்கள் படகு உடைந்து சிதறிய இடிபாடுகளைப் பிடித்துக்கொண்டிருந்தனர் என்றும் மீட்புப் பணியாளர்கள் கூறினர்.

தேடல் பணிகளில் மெக்சிகோவைச் சேர்ந்த பெருஞ்செல்வந்தரின் சொகுசு கப்பல் பேருதவி புரிந்துள்ளது. சொகுசுப் படகில் 106 பேர் காப்பாற்றப்பட்டதாக ப்ளூம்பேர்க் செய்தி நிறுவனம் கூறியது.

அந்த சொகுசுக் கப்பல் மெக்சிகோவில் ‘வெள்ளி அரசர்’ என்று அழைக்கப்பட்ட அல்பெர்ட்டோ பைலியெரெஸுக்குச் சொந்தமானது. ஒரு காலத்தில் உலகின் மிகப் பெரிய வெள்ளி உற்பத்தி நிறுவனத்தின் உரிமையாளராக இருந்த அவர் கடந்த ஆண்டு காலமானார்.

இந்தப் படகு லிபியாவில் இருந்து இத்தாலியை நோக்கி பயணித்திருப்பதோடு படகில் பெரும்பாலும் 20 வயதுகளில் இருக்கும் இளைஞர்களே இருந்துள்ளனர். இதில் ஆட்கடத்தல் சந்தேகத்தில் மூவர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை நடத்தப்படுவதாக கிரேக்க நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மத்தியதரை கடலை கடக்கும் முயற்சியில் ஒவ்வொரு ஆண்டும் நூற்றுக்கணக்கானோர் உயிரிழக்கின்றனர். கடந்த பெப்ரவரியில் தெற்கு இத்தாலியின் கலப்ரியா பிராந்தியத்தில் கட்ரோ நகருக்கு அருகில் குடியோறிகள் படகு ஒன்று மூழ்கியதில் குறைந்தது 94 பேர் உயிரிழந்தனர்.

மத்திய கிழக்கு, ஆசியா மற்றும் ஆபிரிக்காவில் இருந்து வரும் அகதிகள் மற்றும் குடியேறிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் நுழைய கிரேக்கம் பிரதான பாதை ஒன்றாக உள்ளது.

இந்த ஆண்டில் 70,000க்கும் அதிகமான அகதிகள் மற்றும் குடியேறிகள் ஐரோப்பாவை அடைந்துள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் இத்தாலியில் கரையொதுங்கி இருப்பதாக ஐ.நா தரவுகள் குறிப்பிடுகின்றன.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜுன் மாதம் 16ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.